




# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:175 | 09-01-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

09.01.2026 மார்கழி 25
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.33

திதி:
இன்று காலை 11.43 வரை
சஷ்டி பின்பு சப்தமி

நட்சத்திரம்:
இன்று மாலை 6.06 வரை
உத்திரம் பின்பு அஸ்தம்

யோகம் :
இன்று இரவு 9.17 வரை சோபனம்
பின்பு அதிகண்டம்.

கரணம் :
இன்று காலை 11.43 வரை
வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.32 வரை
யோகம் சரியில்லை பின்பு மாலை
6.06 வரை சித்த யோகம் பின்பு
அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று மாலை 6.06 வரை
அவிட்டம் பின்பு சதயம்.

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30.
இராகு காலம்
காலை 10.30 – 12.00.
எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

குளிகை
காலை 7.30 – 9.00

இன்று தேய்பிறை சஷ்டி நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ரூ.3,000 ரொக்கத்துடன் பொங்கல் பரிசுத் தொகுப்பு

## தொடங்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, ஜன.9:**
பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம் வாழ் இலங்கை தமிழர்கள் குடும்பங்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி மற்றும் சர்க்கரை, முழுக்கரும்பு மற்றும் ரூ.3 ஆயிரம் ரொக்கம் மற்றும் 1 கோடியே 77 லட்சத்து 64 ஆயிரம் சேலைகள், 1 கோடியே 77 லட்சத்து 22 ஆயிரம் வேட்டிகள் வழங்கும் திட்டத்தை நேற்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு 2,22,91,710 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ரொக்கப் பரிசாக ரூ.3,000 வழங்கப்படும்” எனவும் முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

மேலும், பொங்கல் பண்டிகையையொட்டி வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திடும் வகையில், 1 கோடியே 77 இலட்சத்து 64 ஆயிரம் சேலைகள்



மற்றும் 1 கோடியே 77 லட்சத்து 22 ஆயிரம் வேட்டிகள் வழங்கிட தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் மக்கள் பயன்பெறுவதோடு, கைத்தறி, விசைத்தறி தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படுகிறது.

ரேஷன் கடையில் வழங்கினார்

அதன்படி, பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.3,000 ரொக்கம் ஆகியவற்றை வழங்கிடும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று (8ந் தேதி) சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார்.

முன்னதாக, பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கிட வருகை தந்த முதலமைச்சருக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும், பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் இலவச வேட்டி, சேலைகள் பெற்றுக் கொண்ட பொதுமக்கள் முதலமைச்சருக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினையும் பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

ரூ.7604 கோடி செலவு

இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயன்பெறுவார்கள். பொங்கல் பரிசுத் தொகுப்பு, ரொக்கப் பரிசு மற்றும் வேட்டி-சேலைகள் ஆகியவை மொத்தம் 7604 கோடியே 29 லட்சத்து 47 ஆயிரத்து 959 ரூபாய் செலவில் வழங்கப்படுகிறது.

இப்பொங்கல் பரிசினை பெற்றிட அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அதிக எண்ணிக்கையில் நியாய விலைக் கடைகளுக்கு ஒரே நேரத்தில் வருவதை தவிர்த்திட, நாள் மற்றும் நேரம் குறிப்பிடப்பட்டு டோக்கன் வழங்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் அக்குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசினை பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள நியாயவிலைக்கடைகளில் இன்று முதல் 12ந் தேதி வரை பொங்கல் பரிசுத்தொகுப்பு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படும். அந்தந்த மாவட்டத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் இத்திட்டத்தினை தொடங்கி வைக்கின்றார்கள்.

பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக ரொக்கப் பரிசும், பொங்கல் பரிசுத் தொகுப்பும், வேட்டி சேலைகளும் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கும் வகையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மூலம் அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், தா.மோ. அன்பரசன், அர.சக்கரபாணி, மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், இ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் கே.சு.பழனிசாமி, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் தி.சினேகா, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மு.வீரப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்கும் இந்தியா உட்பட அனைத்து நாடுகளுக்கும் 500% வரி

## டிரம்ப் ஒப்புதல்



**வாஷிங்டன், ஜன.9:**
ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் கொள்முதல் செய்யும் நாடுகளுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தொடர்ந்து எச்சரிகை விடுத்து வருகிறார். எச்சரிக்கையை மீறி கொள்முதல் செய்ததால் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 50% வரி விதித்தார்.

சமீபத்தில் செய்தியாளர்களுடன் பேசிய டிரம்ப், இந்தியா தன்னை மகிழ்ச்சியாக வைத்திருப்பது அவசியம், ரஷியாவிடம் தொடர்ந்து எண்ணெய் கொள்முதல் செய்தால் விளைவுகள் பயங்கரமாக இருக்கும் என்று எச்சரித்திருந்தார்.

இந்த நிலையில் 500% வரி விதிக்கும் மசோதாவை தாக்கல் செய்ய டிரம்ப் ஒப்புதல் அளித்துள்ளதாக குடியரசுக் கட்சி செனட்டர் லிண்ட்சே கிரஹாம் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அவர் அதில் தெரிவித்திருப்பதாவது:

“அதிபர் டிரம்ப்புடன் பல்வேறு பிரச்சினைகள் குறித்து மிகவும் பயனுள்ள ஒரு சந்திப்பு நடைபெற்றது. நானும் செனட்டர் ப்ளூமென்டாலும் பலருடன் இணைந்து மாதக் கணக்கில் பணியாற்றி வந்த மசோதாவுக்கு அவர் ஒப்புதல் அளித்துள்ளார். உக்ரைன் அமைதிக்காக இறங்கி வரும் நேரத்தில், புதின் வெறு வாய் வார்த்தைகளை மட்டும் பேசி, அப்பாவி மக்களைக் கொன்று வருவதால், சரியான நேரத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதினின் போர் இயந்திரத்துக்கு எரிபொருளாக அமையும் மலிவான ரஷிய எண்ணெய்யை வாங்கும் நாடுகளை தண்டிப்பதற்கு இந்த மசோதா டிரம்ப்புக்கு அதிகாரம் அளிக்கும்.

ரஷ்ய எண்ணெய் வாங்குவதை நிறுத்தும்படி, சீனா, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற நாடுகளைக் கட்டாயப்படுத்துவதற்கு இந்த மசோதா டிரம்ப்புக்கு மகத்தான செல்வாக்கை வழங்கும். அடுத்த வாரமே இரு கட்சிகளின் வலுவான ஆதரவுடன் இந்த மசோதா நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கிறேன்”.

இவ்வாறு அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே 66 சர்வதேச அமைப்புகளில் இருந்து அமெரிக்கா விலகுவதாக அதிபர் டிரம்ப் அறிவித்து உள்ளார்.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

“அமெரிக்க நலன்களுக்கு எதிராக செயல்படுவதாக கருதப்படும் 35 ஐ.நா. அல்லாத குழுக்கள் மற்றும் 31 ஐ.நா அமைப்புகளுக்கு நிதி வழங்குவதையும், அவற்றுடன் தொடர்பு கொள்வதையும் நிறுத்தும் படி அனைத்து அரசு நிறுவனங்களுக்கும் இந்த உத்தரவிடப்பட்டுள்ளது.ஐ.நா. பருவநிலை ஒப்பந்தம் உள்பட 66 சர்வதேச அமைப்புகளிலிருந்து அமெரிக்கா விலகும் உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்டு உள்ளார். இந்த நடவடிக்கை அமெரிக்காவின் தேசிய நலன்களுக்கு இனி சேவை செய்யாத அமைப்புகளை இலக்காகக் கொண்டுள்ளது என்று தெரிவித்தது. ஐ.நா. பருவநிலை ஒப்பந்தம், இந்தியாவும் பிரான்சும் இணைந்து வழிநடத்தும் தூய்மையான எரிசக்தி முன்னெடுப்பான சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு, இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம், பருவ நிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கிடையேயான குழு உள்பட 66 அமைப்புகளில் இருந்து அமெரிக்கா விலகி உள்ளது”.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# விஜய்யின் 'ஜனநாயகன்' ரிலீஸ் ஒத்திவைப்பு

## தயாரிப்பு நிறுவனம் வேதனை

**சென்னை, ஜன.9:**
விஜய்யின் கடைசித் திரைப்படமான 'ஜனநாயகன்' பொங்கல் ரிலீஸாக நாளை (9ந்தேதி) வெளியாகும் என அறிவித்திருந்தார்கள். ஆனால், படத்திற்கு சென்சார் சான்றிதழ் கிடைப்பதற்கு தாமதமானதால் படக்குழு நீதிமன்றத்தை நாடியிருந்தது. நேற்று மதியம் இந்த வழக்கின் விசாரணை நடைபெற்றது.

இருதரப்பு வாதங்களும் முடிவடைந்ததை அடுத்து, வழக்கில் நாளை (9ந்தேதி) தீர்ப்பளிக்க உள்ளதாக நீதிபதி பி.டி. ஆஷா அறிவித்திருந்தார். இதனால் படத்தின் ரிலீஸ் தேதி தள்ளிவைக்கப்படும் எனப் பேசப்பட்டு வந்தது. இந்நிலையில் படத்தின் ரிலீஸ் தேதியைத் தள்ளிவைப்பதாக படத்தின் தயாரிப்பு நிறுவனமான கே.வி.என். புரொடக்ஷன்ஸ் நிறுவனம் அறிவித்திருக்கிறது.

இது தொடர்பாக அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: "எங்கள் அன்பார்ந்த பங்குதாரர்களுக்கும் ரசிகர்களுக்கும் இந்தச் செய்தியை மிகுந்த மனவேதனையுடன் தெரிவித்துக்கொள்கிறோம். (9-ந் தேதி) வெளியாகவிருந்த 'ஜனநாயகன்' திரைப்படத்தின் வெளியீடு, எங்களால் கட்டுப்படுத்த முடியாத தவிர்க்க முடியாத சூழல்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இத்திரைப்படத்தைச் சுற்றியுள்ள எதிர்பார்ப்பு, உற்சாகம் மற்றும் உணர்வுகளை நாங்கள் ஆழமாகப் புரிந்துகொள்கிறோம்.

இந்த முடிவு எங்களில் எவருக்கும் எளிதானதல்ல. புதிய வெளியீட்டுத் தேதி விரைவில் அறிவிக்கப்படும்.

உங்களது அசைக்க முடியாத ஆதரவே 'ஜனநாயகன்' குழுவினருக்கு மிகப்பெரிய பலமாகவும், எல்லாவற்றுக்கும் மேலானதாகவும் இருக்கிறது என்றனர்.

# சென்னை புத்தகக் காட்சியை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன.9:**
சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் 49-வது சென்னை புத்தகக் காட்சியை முதல்வர் ஸ்டாலின் வியாழக்கிழமை தொடங்கி வைத்தார்.

தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் (பபாசி) சார்பில் 49வது சென்னை புத்தகக் காட்சி இன்று(ஜன.8) தொடங்கி ஜன. 21 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதற்காக சென்னை நந்தனம் திடலில் மிகப் பெரிய அளவில் 1,000 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை புத்தகக் கண்காட்சியை முதல்வர் ஸ்டாலின் ரிப்பன் வெட்டித் துவங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து அங்கு வைக்கப்பட்டிருந்த திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்தார்.

# “எங்கள் கூட்டணிக்கு அதிமுகதான் தலைமை” அமித் ஷா சந்திப்புக்குப் பின் இபிஎஸ் பேட்டி

**சென்னை, ஜன.9:**
“தமிழகத்தில் எங்கள் கூட்டணிக்கு அதிமுகதான் தலைமை. ஓபிஎஸ், சசிகலாவுக்கு அதிமுகவில் இடமில்லை என ஏற்கெனவே தெளிவுபடுத்திவிட்டேன்” என அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “அமித்ஷாவிடம் கூட்டணி குறித்து எதுவும் பேசவில்லை, தமிழ்நாட்டின் அரசியல் சூழல் குறித்து என்னிடம் கேட்டறிந்தார். அண்மையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா புதுக்கோட்டைக்கு வந்தபோது அவரை சந்திக்க முடியாததால் டெல்லியில் சென்று சந்தித்தேன். கள்ளக்குறிச்சி, சேலத்தில் அதிமுக பொதுக்கூட்டம் இருந்ததால் அமித் ஷாவை



நேரில் சந்திக்க முடியவில்லை.

யாருடன் கூட்டணி பேச்சுவார்த்தை என வெளிப்படையாக பேச முடியாது. ரகசியமாக இருந்தால்தான் அரசியல் கட்சிக்கு அந்தஸ்து உண்டு. தமிழகத்தில் எங்கள் கூட்டணிக்கு நாங்கள்தான் தலைமை. ஓபிஎஸ், சசிகலாவுக்கு அதிமுகவில் இடமில்லை என ஏற்கெனவே தெளிவுபடுத்திவிட்டேன். அதிமுக உட்கட்சி விவகாரத்தில் தலையிட மாட்டோம் என அமித் ஷா ஏற்கெனவே கூறிவிட்டார். தொடர்ந்து அப்படிதான் இருக்கிறது” என்றார்.

மேலும், அதிமுக கூட்டணியில் டிடிவி தினகரன் இணைவாரா? என்ற கேள்விக்கு இபிஎஸ் மறுப்பு தெரிவிக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

மேலும், “ஒரு சில கட்சிகளுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடக்கிறது. அதை வெளிப்படையாக சொல்ல முடியாது. பின்னர் அறிவிக்கப்படும்” என்றார்.

# சமுத்ர பிரதாப் கப்பல் சுய சார்பை வலுப்படுத்தும்: பிரதமர் மோடி கருத்து


**புதுடெல்லி, ஜன.9:**
‘சமுத்ர பிரதாப்’ கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது, நமது சுயசார்பு பார்வையை வலுப்படுத்தும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்து உள்ளார்.

இந்தியக் கடலோர காவல் படையின் ஐ.சி.ஜி.எஸ். சமுத்ர பிரதாப் என்ற கப்பலை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த 5-ம் தேதி நாட்டுக்கு அர்ப்பணித்தார். இது இந்தியாவின் முதல், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மாசு கட்டுப்பாட்டு கப்பல் ஆகும்.

இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், “இந்தியக் கடலோர காவல் படையின் ‘சமுத்ர பிரதாப்’ கப்பல் சேவையில் இணைக்கப்பட்டது பல காரணங்களுக்காகக் குறிப்பிடத்தக்கது. இது நமது சுய சார்பு பார்வையை வலுப்படுத்துவதுடன், நமது பாதுகாப்பு கட்டமைப்பை மேம்படுத்து கிறது. மேலும், சுற்றுச்சூழலைப் பேணுவதில் நமது உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது” என கூறப்பட்டுள்ளது.







# திருக்குறள் குறள்-495

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற



ஆழமுள்ள நீரில் முதலை மற்ற உயிர்களை வெல்லும், ஆனால் நீரிலிருந்து விலகிவந்தால் அந்த முதலையையும் மற்ற உயிர்கள் வென்றுவிடும்.

## சிந்திக்க ஒரு நொடி



மழைநீர் கோயில் குளத்தில் விழுந்தால் புனித நீர் ஆகிறது சாக்கடையில் விழந்தால் அசுத்த நீர் ஆகிறது.சேர்கையை பொருத்தே நம் குணம் மற்றும் செயல்கள் அமைகின்றன.

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## ஆருத்ரா தரிசன இசை விழா



**மயிலாடுதுறை , ஜன, 09 :** மயிலாடுதுறை மாவட்டம் வழுவூர் அருள்மிகு விரட்டேஸ்வர சுவாமி திருக்கோவிலில் ஆருத்ரா தரிசன திருவிழாவை முன்னிட்டு திருக்கடையூர் அனன்யா கர்நாடக இசைப் பள்ளி மாணவர்களின் பக்தி இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. பக்தி பாடல்களை மனமுருகி பாடிய மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழும் பிரசாதமும் வழங்கப்பட்டது. இசை பள்ளி ஆசிரியர் கார்த்திகா, நாதஸ்வர வித்வான் பாலசுப்ரமணியன், ஆலய அர்ச்சகர் பாலசுப்ரமணிய சிவாச்சாரியார் உள்ளிட்ட திரளான பக்தர்கள் கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்தினார்கள்.

## கமுதியில் பொங்கல் பரிசு தொகுப்பு





தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் ஆணைக்கிணங்க பொங்கல் பரிசு தொகுப்பு 3000 ரூபாய் கரும்பு 1 பச்சரிசி 1 சீனி 1 ஆகியவற்றை கமுதி ரேசன்கடைகளில் திமுக நகரசெயலாளர் ம.பாலமுருகன் துவக்கிவைத்தார்.

## பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் விழா



தமிழ்நாடு அரசின், 2026ஆம் ஆண்டிற்கான பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் விழா, 8.1.2026 அன்று காலை 11 மணி அளவில், கும்பகோணம் வட்டம். திருமலைராஜ புரம் கூட்டுறவு சங்கத்தின் நியாயவிலைக் கடையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருவாளர்.செ.இராமலிங்கம் அவர்கள் தலைமையில், ஆரம்பித்து வைக்கப்பட்டது. செய்தி. குடந்தை பரிபூரணன்.

## அழகன்குளத்தில் பொங்கல் சிறப்பு தொகுப்பு



மண்டபம் ஒன்றியம் அழகன்குளத்தில் பொங்கல் சிறப்பு தொகுப்பு வழங்கபட்டது.

# ஆட்டோ ஓட்டுநர்களுக்கு பொங்கல் சிறப்பு நலத்திட்ட உதவி



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் 1000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு பொங்கல் சிறப்பு நலத்திட்ட உதவி பொருட்களை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார். அமைச்சர் அன்பரசன், இ.கருணாநிதி எம்எல்ஏ உடன் உள்ளனர்.

# கழுதூரில் வெற்றி நிச்சயம் இலவச தையல் பயிற்சி நிறைவு; பெண்களுக்கு சான்றிதழ்களை அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்



**கடலூர், ஜன.09:** கடலூர் மாவட்டம் திட்டக்குடி அருகே, கழுதூரில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் வெற்றி நிச்சயம் இலவச தையல் பயிற்சி நிறைவு செய்த பெண்களுக்கு, சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

கே.எஸ்.டெவேலப்மெண்ட் டிரஸ்ட் தையல் பயிற்சி நிறுவனர் சுபா தலைமை வகித்து பேசுகையில்,"பெண்கள் அனைத்து துறைகளிலும் சாதித்து வரும் நிலையில், கிராமப்புற பெண்கள் மத்தியில் வேலை வாய்ப்பை பெருக்க வேண்டும் எனும் நோக்கத்தில், பெண்களுக்கு தொடர்ந்து தையல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக, இலவச தையல் பயிற்சி நிறைவு செய்துள்ள நிலையில், அரசு மூலம் வழங்கும் தையல் திட்டங்களை பெற்று, சுய தொழில் செய்து முன்னேற்றம் காண்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும். பயிற்சி நிறைவு செய்த பெண்கள் வீட்டில் முடங்காமல், குழுவாக இணைந்து தையல் தொழில் செய்ய முன்வந்தால் அதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும்," என்றார். பயிற்சி நிறைவு செய்த பெண்களுக்கு தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சான்றிதழ் வழங்கினார். நிகழ்ச்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கருணாநிதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் பயிற்சி மைய மேலாலர் கண்ணன் நன்றி கூறினார்.

# ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவிலில் கோலாட்ட வைபவம்



**வந்தவாசி , ஜன 09:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவிலில் நேற்று மார்கழி மாதம் பஜனைக் குழுவினர் சார்பில் கோலாட்டம் வைபவம் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் ஆண்டாள் கோஷ்டியினர் திருப்பாவை பாடல்களை பாடியவாறு கருடக் கொடியை வலம் வந்தனர். பிறகு மூல மூர்த்திகளுக்கு பால், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

# கன்னிமாரா நூலகத்தில் புதிய பிரிவுகள் துவக்கம்



**சென்னை, ஜன.09:** சென்னையின் அடையாளங்களில் ஒன்றாக திகழும் கன்னிமாரா நூலகத்தில் ரூ 4.58 கோடி மதிப்பில் பல்வேறு புதிய வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. நவீன சிறுவர் நூலகம், அறிவியல் மையம், புதுப்பிக்கப்பட்ட குடிமையியல் பிரிவு, சொந்த நூல் படிக்கும் பிரிவு, நவீன மாநாட்டுக் கூடம் போன்ற இந்த வசதிகளை துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்.

விழாவில் அமைச்சர்கள் சேகர்பாபு, அன்பில்மகேஷ் பொய்யாமொழி, மத்திய சென்னை எம்பி. தயாநிதி மாறன், பரந்தாமன் எம்எல்ஏ, கவுன்சிலர்கள் பங்கேற்றனர்.

## அதிமுக மாநில கொள்கை பரப்பு துணைச்செயலாளருக்கு காவிரி டெல்டா விவசாயிகள் சங்கம் வாழ்த்து



**தஞ்சாவூர், ஜன.09:** அதிமுக மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளருக்கு காவிரி டெல்டா விவசாயிகள் சங்கம் வாழ்த்து.

அதிமுக பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே பழனிச்சாமி அவர்கள் தஞ்சாவூர் மாநகரக் கழக செயலாளர் என் எஸ் சரவணன் அவர்களை மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளராக நியமனம் செய்துள்ளதை அடுத்து, காவிரி டெல்டா விவசாயிகள் சங்கத் தலைவர்,அதிமுக தஞ்சாவூர் மேற்கு மாவட்ட விவசாய பிரிவு தலைவர் ஏகேஆர்.ரவிச்சந்தர் அவர்கள் என். எஸ். சரவணன் அவர்களை நேரில் சந்தித்து சந்தன மாலை அணிவித்து அவர் பணி சிறக்க வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். வருகிற சட்டமன்ற தேர்தலில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் கழக வெற்றிக்கு அயராது உழைப்போம் என உறுதி ஏற்றார்.

## வைகுந்த ஏகாதசி பெருவிழா



அருள்மிகு ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி திருக்கோயில் சின்னபெருமாள் ( எ) தீர்த்த பேரர் தீர்த்தவாரி கண்டருளினர் வைகுந்த ஏகாதசி பெருவிழா இராப்பத்து பத்தாம் திருநாள்.

## திருக்குறள் திருப்பணிகள் திட்ட 22- ஆவது நிகழ்வு




பாளையங்கோட்டை குழந்தை இயேசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று (08.01.2026)மாலையில் திருக்குறள் திருப்பணிகள் திட்ட 22- ஆவது நிகழ்வு பயிலரங்கக் குழுத் தலைவர் கவிஞர் பே. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

## பொங்கல் பரிசு தொகுப்பு



**சங்கராபுரம், ஜன.09:** சங்கராபுரம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட ரங்கப்பனூர் ஊராட்சியில் தமிழர்களின் பாரம்பரிய பொங்கல் திருநாளை முன்னிட்டு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு பச்சரிசி,சர்க்கரை கரும்பு, வேட்டி,சேலை மற்றும் ரூபாய் 3000 ரொக்க பணத்துடன் கூடிய பொங்கல் பரிசு தொகுப்பு ஊராட்சி மன்ற தலைவர் அர்ச்சனா காமராஜன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் சங்கராபுரம் வடக்கு ஒன்றிய செய லாளர் வழக்கறிஞர் அசோக்குமார், மாவட்ட கவுன்சிலர் அஸ்வினி செந்தில்குமார்,ஒன்றிய பொருளாளர் நல்லதம்பி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் அஸ்வினி செந்தில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூராட்சியில் நியாய விலை கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.3000,பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் வேட்டி சேலை பேரூராட்சி செயலாளர் ஜெய்கணேஷ் வழங்கினார். நிகழ்ச்சியில் பேரூராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**ராணிப்பேட்டை, ஜன.09:** ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட லாலா பேட்டை,அக்ராவரம் ஆகிய பகுதிகளில் 7440 அட்டை தாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு, விலையில்லா வேட்டி, சேலைகள், மற்றும் ரூபாய் 3000 ரொக்க பணம் ஆகிய பரிசுத்தொகுப்புகளை நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்... உடன் ஊராட்சி மன்ற தலைவர்கள் ஏ.கே. முருகன்,கோகுல் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.



வில்லிவாக்கம்சிட்கோ நகரில் பொங்கல் தொகுப்பு வழங்குவதை அமைச்சர் சேகர்பாபு,மேயர் பிரியா துவக்கி வைத்தனர்.



திருவொற்றியூர் 5வதுவட்டத்தில் பொங்கல் பரிசு தொகுப்பை கே.பி.சங்கர் எம்எல்ஏ வழங்கினார்.

## ஆவின் பால் விலையில் மாற்றமில்லை!

**சென்னை, ஜன.9:**

ஆவின் பச்சை நிற பால் பாக்கெட் விலை உயர்த்தப்பட்ட தாக சமூக வலைத்தளங்களில் பரவும் செய்தி வதந்தி என தமிழ்நாடு அரசின் தகவல் சரிபார்ப்பகம் அறிவித்துள்ளது. ஆவின் பால் விலை, லிட்டருக்கு மூன்று ரூபாய் குறைக்கப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருமடங்காக 6 ரூபாய் விலை உயர்த்தப்பட்டிருப்பதாக சமூக வலைத்தளங்களில் பதிவு பகிரப்பட்டு வந்த நிலையில், இது தவறான தகவல் என அரசு தெளிவுபடுத்தியுள்ளது. தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்ட அறிக்கையில், கடந்த 2021-ஆம் ஆண்டு முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்றவுடன் ஆவின் பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது ஆவின் நிறுவனம் அறிமுகப்படுத்தியிருப்பது கிரீன் மேஜிக் பிளஸ் என்ற புதிய வகை பால் பாக்கெட் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய பால் பாக்கெட்டில் கூடுதலாக வைட்டமின் ஏ மற்றும் டி செறிவூட்டப்பட்டு உள்ளதுடன், கொழுப்புச்சத்து 4.5 சதவிகிதமாகவும், இதர சத்துக்கள் 9 சதவிகிதம் எஸ்.என்.எப். ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது என்று விளக்கப்பட்டுள்ளது. கொழுப்புச்சத்து 4.5 சதவிகிதம் மற்றும் இதரச் சத்துக்கள் 8.5 சதவிகிதம் எஸ்.என்.எப் கொண்ட பழைய ஆவின் கிரீன் மேஜிக் நிலைப்படுத்தப்பட்ட பால் பாக்கெட் தற்போதும் அதே விலையில் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், இதன் உற்பத்தியும் நிறுத்தப்படவில்லை என்றும் தகவல் சரிபார்ப்பகம் தெரிவித்துள்ளது. தவறான தகவலை பரப்ப வேண்டாம் என்று அரசு எச்சரித்துள்ளது.

## முட்டை கொள்முதல் விலை குறைப்பு

**நாமக்கல், ஜன.9:**

நாமக்கல் மண்டலத்தில் கொள்முதல் செய்யப்படும் முட்டைகளுக்கு தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு என்ற தனியார் அமைப்பு விலை நிர்ணயம் செய்து வருகிறது. அந்த விலையை கோழிப் பண்ணை யாளர்களும் கடைப்பிடித்து வருகின்றனர். கிறிஸ்துமஸ், புத்தாண்டு கொண்டாட்டங்களால் கடந்த சில நாட்களாக முட்டை கொள்முதல் விலை 6 ரூபாய் 40 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழுவின் நாமக்கல் மண்டல ஆலோசனைக் கூட்டத்தில், முட்டை கொள்முதல் விலையை மேலும் 20 காசுகள் குறைக்க முடிவு செய்யப்பட்டது. அதன் படி முட்டை கொள்முதல் விலை புதனன்று 5 ரூபாய் 80 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## தேரோட்டத்தில் நகை திருட்டு: 2 பெண்கள் கைது

**சிவகாசி, ஜன.9:**

சிவகாசியில் தேரோட்டத்தில் நகை திருடிய 2 பெண் களை போலீசார் கைது செய்தனர். சிவகாசி அருகே விஸ்வநத்தம் கிராமத்தைச் சேர்ந்த வர் முத்துலட்சுமி ( 58). இவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு சிவகாசியில் நடைபெற்ற தேரோட்ட நிகழ்ச்சியில் சாமி தரிசனம் செய்தார். அப்போது பையில் வைத்தி ருந்த பணப்பை காணாமல் போனது. அதில் இருந்த வங்கி ஏ.டி.எம். அட்டை, ஸ்மார்ட் கார்டு, பான்கார்டு, இ.எஸ்.ஐ. கார்டு, 37 கிராம் எடையுள்ள தங்க செயின் மற்றும் பணம் ஆகியவையும் திருடு போனது. இதுகுறித்து சிவகாசி நகர் காவல்நிலையத்தில் முத்து லட்சுமி புகார் செய்தார். அதன் பேரில் போலீசார் தேரோட்டம் நடைபெற்ற பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராவில் பதிவுகளை ஆய்வு செய்தனர். இதில் மூதாட்டியிடம் நகை மற்றும் பணத்தை திருடிய சிவகாசி புதுத்தெருவை சேர்ந்த முனியம்மாள், ஆறுமுகத்தாய் என்பது உறுதியானது. அதனைத் தொடர்ந்து 2 பேரை யும் போலீசார் கைது செய்தனர்.

## போக்சோ வழக்கில் தலைமறைவு குற்றவாளி கைது

**திருவில்லிபுத்தூர், ஜன.9:**

மம்சாபுரம் காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதி யில் உள்ள தனியார் பள்ளியில் படித்து வந்த மாணவி ஒரு வர், முகநூல் மூலம் அறிமுகமான சேலம் மாவட்டம் ஆத்தூர் நயினார் பாளையத்தைச் சேர்ந்த கணேசன் என்பவருடன் பழகி வந்துள்ளார். இந்நிலையில் கணேசன் அழைத்ததன் பேரில் சேலம் சென்று அவரோடு நெருக்கமாக பழகியுள்ளார். இதனை மாணவி பெற்றோரிடம் கூறியதன் அடிப்படையில் பெற் றோர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தனர். அதன் அடிப்படையில் மகிளா நீதிமன்ற உத்தரவின் பேரில் மம்சா புரம் காவல்துறையினர் வழக்கு பதிந்து தனிப்படை அமைத்து 2024 நவம்பர் மாதம் முதல் தலைமுறைவாக இருந்த கணேசனை தீவிரமாக தேடி வந்தனர். இந்நிலையில் தனிப்படையினர் செவ்வாயன்று சேலம் மாவட்டம் நயினார் பாளையத்தில் கணேசனை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

## பெண்களுக்கான சிறந்த நகரங்கள் பட்டியலில் பெங்களூரு மீண்டும் முதலிடம்

**பெங்களூரு, ஜன.9:**

*2025 ஆம் ஆண்டிற்கான, இந்தியாவில் பெண்களுக்கான சிறந்த நகரங்கள் பட்டியலில் பெங்களூருமீண்டும்முதலிடத்தை பிடித்துள்ளது.*

*வேலை செய்யும் இடங்களின் கலாச்சாரம் குறித்து ஆய்வு செய்யும் அவதார் குரூப் என்ற நிறுவனம், பெண்களின் பங்களிப்பு, பாதுகாப்பு, தொழில் வளர்ச்சி, ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கடந்த ஆண்டு(2025) நாட்டில் உள்ள 125 நகரங்களில் ஆய்வு நடத்தியது.*

*இந்த ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:*

*பெண்களுக்கான சிறந்த நகரங்கள் பட்டியலில் முதல் 10 நகரங்களில் பெங்களூரு மீண்டும் முதலிடம் பிடித்துள்ளது. பெண்கள் நடத்தும் ஸ்டார்ட்-அப்களுக்கு முதலீடு ஈர்ப்பதில் பெங்களூரு முதன்மையான மையமாகத் திகழ்கிறது.*

*அடுத்து, சென்னை, புனே, ஐதாராபாத், மும்பை, குருகிராம், கோல்கட்டா, ஆமதாபாத், திருவனந்தபுரம், கோவை ஆகிய நகரங்கள் இடம் பிடித்துள்ளன.*



*பெண்களுக்கான சிறந்த 5 நகரங்கள் (2025 தரவரிசை):*

*பெங்களூரு, கர்நாடகா (உள்ளடக்கிய குறியீடு: 53.29)*

*சென்னை, தமிழ்நாடு ( 49.86)*

*புனே, மஹாராஷ்டிரா (46.27)*

*ஐதராபாத், தெலுங்கானா ( 46.04)*

*மும்பை, மகாராஷ்டிரா (44.49)*

*பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் பெங்களூரு முதலிடத்தில் உள்ளது. அதேசமயம், பாதுகாப்பு, பொதுச் சேவைகள் மற்றும் போக்குவரத்து வசதி போன்ற சமூக உள்ளடக்கம் சார்ந்த காரணிகளில் சென்னை தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது.*

*கடந்த ஆண்டு 9-வது இடத்தில் இருந்த குருகிராம், இந்த ஆண்டு 6-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.*

*இந்தியாவின் மிகவும் உள்ளடக்கிய நகரங்கள் பட்டியலில் தென்னிந்திய நகரங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. முதல் 10 இடங்களில் ஐந்து நகரங்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவை.*

## ‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ புதிய திட்டம் இன்று தொடக்கம்

**சென்னை, ஜன.9:**

*சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த திட்டம் தொடங்க முடிவு எடுக்கப்பட்டதாக பள்ளிக் கல்வித் துறை அமைச்சா் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.*

*அவர் மேலும் கூறியதாவது: தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களுக்குள்ள கனவுகளையும், மாநில வளா்ச்சி தொடா்பான கனவுகளையும் வெளிப்படுத்தும் வகையில் ‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ திட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளது. இதன்மூலம் 91லட்சம் குடும்பங்கள் பயன்பெறும்.*

*சுமாா் 50,000 தன்னாா்வலா்கள் இந்தத் திட்டத்தில் இடம்பெறுவாா்கள். இவா்கள் ஒவ்வொரு குடும்பத்தினரையும் நேரடியாகச் சந்தித்து, அரசின் திட்டங்களால் அந்தக் குடும்பம் பெறும் பயன்கள் மற்றும் அடுத்ததாக அந்தக் குடும்பத்தின் கனவுகள் என்ன என்பதைக் கேட்டுப் பதிவு செய்வாா்கள்.*




*அந்த விண்ணப்பம் செயலியில் பதிவு செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனிப்பட்ட அடையாள எண் உருவாக்கப்பட்டு ‘கனவு அட்டை’ வழங்கப்படும். இளைஞா்களின் கனவுகளை நிறைவேற்ற தனி இணையதளம் உருவாக்கப்படும். வெளிநாடு வாழ் தமிழா்களின் கருத்துகளும் பெறப்படும். மாவட்டம் வாரியாக ஒரு மாதம் பெறப்படும் இந்தத் தகவல்கள் ஒன்றிணைக்கப்பட்டு, 2030-ஆம் ஆண்டை இலக்காக வைத்து கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளப்படும்.*

*தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள இந்தத்”திட்டத்தை ஜன. 9-ஆம் தேதி திருவள்ளூா் மாவட்டம், பொன்னேரியில் முதல்வா் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறாா் என்றாா்.*

*‘உங்கள் கனவைச் சொல்லுங்கள்’*

*அதைத் தொடர்ந்து அவர்களுடைய 3 முக்கிய விருப்பங்களைத் தர வேண்டும். இந்த படிவம் பெற்றவுடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு பதிவு எண்ணுடன் ஒரு கனவு அட்டை வழங்கப்படும். ஒரு குடும்பத்தில் தனியாக இளைஞர் ஒருவர் தனது எண்ணங்களை வெளிப்படுத்த விரும்பினால் அவர்கள் இணையதளம் மூலமாக விருப்பங்களைத் தரலாம். 2030 ஆம் ஆண்டுக்குள் நாம் என்னென்லாம் செய்ய வேண்டும்? என்னவெல்லாம் செய்ய முடியும்? என்று ஒரு ஆவணத்தை உருவாக்க முடியும்.*

*நமது முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை ஜனவரி 9ஆம் தேதி திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் தொடங்கி வைக்கவுள்ளார் என்றார்.*

## 2,500 ஆண்டுகள் முந்தைய கல்வட்டங்கள் கண்டுபிடிப்பு!

**பென்னாகரம், ஜன.9:**

*தருமபுரி மாவட்டம், பென்னாகரம் அருகே கலப்பம்பாடி செஞ்சிமலைகாடு பகுதியில் பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் இருப்பது குறித்து தகவல் அறிந்த பென்னாகரம் வரலாற்று மையத்தைச் சோந்த ஒருங்கிணைப்பாளா்களான ஆசிரியா்கள் பெருமாள், கோவிந்தசாமி, சந்தோஷ் குமாா், வரலாற்று ஆசிரியா்கள் கணேசன், திருப்பதி ஆகியோா கொண்ட குழுவினா செஞ்சிமலை காடு பகுதியில் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் களஆய்வு மேற்கொண்டனா். அப்போது, பாண்டவா் மடுவு என்ற இடத்தில் பெருங்கற்கால ஈமச் சின்னங்களை கண்டறிந்தனா்.*

*இதுகுறித்து வரலாற்று ஆசிரியா்கள் கூறுகையில், பெருங்கற்காலம் நாகரிக வாழ்க்கையின் தொடக்க காலம் ஆகும். இக்கால மக்கள் இறந்தவா்களை அடக்கம் செய்யும் வழக்கத்தை கொண்டிருந்தனா். நினைவுச் சின்னங்களை அமைக்க பெரிய கற்களை பயன்படுத்தி உள்ளனா். இத்தகைய நினைவுச் சின்னங்களுக்கு கல்வட்டம், கல்திட்டை, கற்பதுக்கை போன்ற பெயா்கள் உள்ளன. இத்தகைய நினைவுச் சின்னங்கள் தருமபுரி மாவட்டத்தில் அதிக அளவில் காணப்படுகின்றன.*

*கலப்பம்பாடி செஞ்சிமலை காடு பகுதியில் 100-க்கும் மேற்பட்ட சிறியதும் பெரியதுமான பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் கற்பதுக்கைகளுடன் கூடிய கல்வட்டங்கள் ஆகும். பெரும்பாலான கல்வட்டங்கள் எந்தவித சேதமும் அடையாமல் முழுமையாக உள்ளன. மேலும், இப்பகுதியில் ஏராளமான புதிய கற்காலத்தைச் சாா்ந்த கல் ஆயுதங்களும் கிடைக்க வாய்ப்புள்ளன.*

*கல் ஆயுதங்களை கோயில்களில் வைத்து இப்பகுதி மக்கள் தெய்வங்களாக வழிபட்டு வருகின்றனா்.*

*இவ்வாறான வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்க தொல்லியல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என வரலாற்று ஆா்வலா்கள் கோரிக்கை விடுத்துள்ளனா்.*

## நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனுக்கு எதிரான புத்தகம் பறிமுதல்! உயர் நீதிமன்றம் உத்தரவு!

**சென்னை, ஜன.9:**

*திருப்பரங்குன்றம் விவகாரத்தை சுட்டிக்காட்டி சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜி. ஆர். சுவாமிநாதனுக்கு எதிரான புத்தகம், சென்னை 49வது புத்தகக் கண்காட்சியில் விற்பனை செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டது.*

*நீதிபதிக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் உள்ள இந்த புத்தகத்தின் விற்பனைக்குத் தடை விதிக்க வேண்டும் என வேலூரைச் சேர்ந்த நவீன் பிரசாத் என்பவர் வழக்கு தாக்கல் செய்தார். அந்த மனுவில், புத்தகக் கண்காட்சியில் இந்த புத்தகத்தை விற்க அனுமதித்தால், அது நீதி நிர்வாகத்தில் தலையிடுவதைப் போல ஆகிவிடும் என்பதால் இந்தப் புத்தகத்தை விற்கக் கூடாது என அரசுக்கு மனு அனுப்பியும் எந்த நடவடிக்கையும் இல்லை என கூறப்பட்டுள்ளது.*

*இந்தப் புத்தகத்தை பறிமுதல் செய்து விற்பனைக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*இந்த வழக்கு, தலைமை நீதிபதி எம். எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது.*

*அப்போது, மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ. ஆர். எல். சுந்தரேசன், களங்கப்படுத்தும் வகையில் வார்த்தைகள் உள்ளன. இருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கலாம் என்றார்.*

*அப்போது, குறுக்கிட்ட*





*தலைமை நீதிபதி, மிகவும் அவதூறான, களங்கம் ஏற்படுத்தும் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதுகுறித்து அளிக்கப்பட்ட புகார் மீது விசாரணை நடத்தியிருக்க வேண்டும். அதற்கும் நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமா என நீதிபதிகள், தமிழக அரசுக்கு கேள்வி எழுப்பினர்.*

*மிகவும் தீவிரமான இந்த விவகாரம் தொடர்பான புகார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. கண்காட்சியில் இந்தப் புத்தகத்தை விற்பனை செய்ய எப்படி அனுமதி வழங்கப்பட்டது எனவும் கேள்வி எழுப்பினர்.*

*மேலும், அறிவுசார் தளமான புத்தகக் கண்காட்சியில் இதுமாதிரியான செயல்களுக்கு அனுமதி வழங்க முடியாது எனவும் தெரிவித்தனர்.*

*தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்குரைஞர் பி.எஸ்.ராமன், புத்தகக் காட்சி நாளை முதல்வரால் துவங்கி வைக்கப்பட உள்ளது. இதுபோன்ற செயல்களை முதல்வரும் விரும்பவில்லை. புத்தகக் காட்சி அரசால் நடத்தப்படவில்லை. பதிப்பாளர்களால் நடத்தப்படுகிறது. இந்தப் புத்தகக் கண்காட்சியில் இந்தப் புத்தகம் விற்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்படும். அதற்கேற்ப காவல் துறை நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி தெரிவித்தார்.*

*இதையடுத்து, புத்தகப் பதிப்பாளர் கீழைக்காற்று பதிப்பகம் மீது தாமாக முன்வந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதிகள், இதுதொடர்பாக மூன்று வாரங்களில் பதிலளிக்க பதிப்பகத்துக்கு உத்தரவிட்டனர்.*

**தமிழ்நாடு இ பேப்பர்.காம்**

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



### நலம் தரும் மருத்துவம்

## சர்க்கரை அளவை சீராக வைக்க இதைச் செய்யுங்கள்!

இன்றைய அவசர உலகில், மாறிவரும் உணவுப் பழக்கவழக்கங்களால் சர்க்கரை நோய் (DIABETES) என்பது அனைத்து வயதினரையும் பாதிக்கும் ஒரு பொதுவான நோயாக மாறிவிட்டது. நீரழிவு நோயாளிகள் தங்கள் உணவில் எப்போதும் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும், இல்லாவிட்டால் அவர்களின் நிலைமை மோசமாக மாறக் கூடும். அதுவும் குளிர் காலங்களில் நீரழிவு நோயாளிகள் சர்க்கரையின் அளவை பராமரிப்பது சவாலான காரியமாக இருக்கும்.

காலை வேளையில் வெறும் வயிற்றில் இருக்கும் போது நாம் முதலில் சாப்பிடும் உணவுகள், இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவில் உடனடி விளைவுகளை ஏற்படுத்தும். அதனால், வெறும் வயிற்றில் நாம் எடுத்துக் கொள்ளும் உணவின் விளைவுகளை அறிந்துக் கொண்டு செயல்பட வேண்டும்.

சர்க்கரை அளவை குறைக்கும் உணவை உண்டால், சர்க்கரை குறைகிறதா என்பதை தெரிந்துகொள்ள, முதலில் சர்க்கரை நோய் பரிசோதனை இயந்திரம் வாங்குங்கள்...

வெறும் வயிற்றில் காலையில் என்ன சாப்பிடலாம்?

1. காலையில் எழுந்த உடனே ஒரு டம்ளர் அளவில் வெதுவெதுப்பான நீரைப் பருகுவது உடலின் வளர்சிதை மாற்றத்தை சீராக வைக்கும். முதலில் நீர் அல்லது திரவ நிலையில் உள்ள (காபி, டீ தவிர்த்து) பானங்களை அருந்துவது இரைப்பைக்கு நலம் தரும் செயலாக இருக்கும்.

2. அதன் பின்னர் இரவு முழுவதும் ஊறவைத்த 5 பாதாம் பருப்புகள் அல்லது இரண்டு வால்நட் சாப்பிடுவது உடலுக்குத் தேவையான ஆரோக்கியமான கொழுப்பை வழங்கும்.

3. சர்க்கரை நோயாளிகள் காலையில் எழுந்தவுடன் சத்தான நார்ச்சத்து மிகுந்த உணவுகளை உட்கொள்வது ஆரோக்கியத்திற்கு நல்ல பலன் தரும்.

காலை உணவில் முளைகட்டிய தானியங்கள், சிறு தானியங்களில் செய்த உப்புமா, பொங்கல், கஞ்சி போன்றவற்றை செய்து சாப்பிடலாம். இவற்றில் கலோரிகள் குறைவாக இருப்பதோடு, இரத்தத்தில் சர்க்கரை அளவை உடனடியாக ஏற்றாமல் இருக்கும்.

4. உணவில் வெள்ளரிக்காய் மற்றும் பச்சைக் காய்கறிகளின் சாலட் போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். இவை பசி உணர்வை கட்டுப்படுத்துவதுடன் உடலை நீரேற்றமாக வைத்திருக்க உதவும்.

5. இன்சுலின் சுரப்பை மேம்படுத்த உதவும் நெல்லிக்காய் சாறு அல்லது பாகற்காய் சாறு , கிரீன் டீ போன்றவைகளை வெறும் வயிற்றில் குடிக்கலாம்.

வெறும் வயிற்றில் தவிர்க்க வேண்டிய உணவுகள் ?

சில தினசரி உணவுகள் அனைவருக்கும் சரியாக இருந்தாலும், நீரழிவு நோயாளிகளுக்கு சர்க்கரை அளவை சட்டென்று உயர்த்திவிடும் அபாயம் கொண்டவை. அதனால், காலையில் இந்த உணவுகளை தவிர்த்து விடுங்கள்.

1. இனிப்பு மிக்க ஊட்டச்சத்து பானங்கள், இனிப்பு கலந்த தேநீர் மற்றும் காபி ஆகியவை தவிர்க்கப்பட வேண்டியவை. இது மட்டுமல்லால் இயற்கையான இனிப்பு கொண்ட பழச்சாறுகளையும் காலையில் பருகக் கூடாது.

2. மைதாவில் செய்த பிஸ்கட், கேக், வெள்ளை பிரட் ஆகியவை முதலில் தவிர்க்கப்பட வேண்டியவை. இவை உடனடியாக இரத்தத்தில் சர்க்கரை அளவை உயர்த்தும்.

3. சீனி மற்றும் வெல்லத்தில் செய்யப்பட்ட இனிப்பு பண்டங்கள், மிட்டாய்கள், இனிப்பு பலகாரங்கள் ஆகியவையும் தவிர்க்க வேண்டும்.

4. இயற்கையில் கிடைக்கும் இனிப்பு மிகுந்த வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், உலர் திராட்சை, பேரீச்சம் பழம், அத்திப்பழம் மற்றும் உலர வைக்கப்பட்ட பழங்களையும் தவிர்க்க வேண்டும். இவற்றில் அதிக சர்க்கரையும், அதிக கலோரிகளும் நிறைந்துள்ளன.

5. காலையிலேயே வறுத்த அல்லது பொரித்த உணவுகளைச் சாப்பிடுவது செரிமானக் கோளாறுகளை உண்டாக்கி, சர்க்கரை அளவையும் பாதிக்கும்.

மேற்கூறியவற்றை கடைப்பிடிப்பதன் மூலம் காலையிலேயே இரத்த சர்க்கரை உயர்வாகாமல் கட்டுக்குள் வைத்திருக்க முடியும். இதுமட்டுமல்லாமல் தினமும் குறிப்பிட்ட நேரத்தில் உணவு உண்ணப் பழகிக் கொள்ளுங்கள். நீரழிவு நோய்க்கான மருந்துகளையும் சரியான நேரத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். தினசரி நடைப்பயிற்சி, போதுமான அளவில் தூக்கம் ஆகியவற்றையும் நடைமுறைப் படுத்துங்கள்.

## தொழிலாளியை வெட்டியவர் கைது

**தேனி, ஜன.9:**

தேனி அரண்மனைப்புதூரைச் சேர்ந்த வேலுச்சாமி மகன் மணிகண்டன்(46). தேனி, ராஜா களம், கண்ணாத் தாள் கோயில் தெருவைச் சேர்ந்த தங்கம் மகன் வினோத் குமார்(36). இருவரும் டைல்ஸ் பதிக்கும் தொழிலாளிகள். இதில் மணிகண்டனிடமிருந்த டைஸ்ல் பதிக்கும் உப கரணங்களை வினோத்குமார் வாங்கி பயன்படுத்தி வந்துள்ளார். மணிகண்டன் வினோத்குமாரின் வீட்டுக்குச் சென்று தனது உபரகணங்களை திரும்பக் கேட்ட போது, இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது, வினோத்குமார் மணிகண்டனை அரி வாளால் வெட்டியதாக கூறப்படுகிறது. இதில் பலத்த காய மடைந்த மணிகண்டன் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதுகுறித்துதேனி காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து வினோத்குமாரை கைது செய்தனர்.

## பேருந்தில் சென்ற பெண்ணிடம் நகை திருட்டு

**தேனி, ஜன.9:**

தேனியிலிருந்து வீரபாண்டிக்கு பேருந்தில் சென்ற பெண் வைத்திருந்த 19 பவுன் தங்க நகைகள் திருடு போனதாக வீரபாண்டி காவல்நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு, காந்திநக ரைச் சேர்ந்த மகேந்திரன் மனைவி சுமிதா. இவர், தேனியிலிருந்து வீரபாண்டிக்கு அரசுப் பேருந்தில் சென்றுள் ளார். வீரபாண்டியில் பேருந்திலிருந்து கீழே இறங்கி பார்த்த போது சுமிதா பையில் வைத்திருந்த 19 பவுன் எடை யுள்ள தங்க நகைகள் திருடு போனது தெரிய வந்துள் ளது. இதுகுறித்து சுமிதா அளித்த புகாரின் மீது வீர பாண்டி காவல்நிலைய போலீசார் வழக்குப் பதிந்து விசா ரிக்கின்றனர்.

## பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகம் குறித்து புகார்

**தூத்துக்குடி, ஜன.9:**

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் மொத்தம் 957 நியாயவிலைக் கடைகளில் மொத்தம் 5,41,007 குடும்ப அட்டைகள் உள்ளன. நடைமுறையில் உள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்கள் இதன் மூலம் பயன்பெறுவர் எனவும், மின்னணு குடும்ப அட்டையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களில் எவரேனும் ஒருவர் மட்டும் நியாய விலைக் கடைக்குச் சென்று தங்களது கைவிரல் ரேகையினை பதிவு செய்து பொங்கல் பரிசுத் தொகுப்பு பெற்றுக் கொள்ளலாம் எனவும், இந்த நிலையில் மேற்சொன்ன பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகம் குறித்த புகார்கள்/ குறைகள் ஏதுமிருப்பின் பொதுமக்கள் மாவட்ட கலெக்டர் அலுவலக கட்டுப்பாட்டு அறைக்கு 0461-2341471 என்ற தொலைபேசி எண்ணில் புகார் அளிக்கலாம்.

# விமானங்களில் பவர் பேங்க் பயன்படுத்த தடை: பயணிகளின் பாதுகாப்பு கருதி மத்திய அரசு நடவடிக்கை

**புதுடெல்லி, ஜன.9:**

விமானப் பயணங்களின்போது பவர் பேங்க் போன்ற சார்ஜர் சாதனங்களை பயன்படுத்துவதற்கு இந்திய விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) தடை விதித்துள்ளது.





புதுப்பிக்கப்பட்ட விமானப் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை டிஜிசிஏ வெளியிட்டுள்ளது. அதன் கீழ் இந்த புதிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து டிஜிசிஏ வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: விமானப் பயணிகள் இனி பவர் பேங்குகளை பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள். இதில், விமான இருக்கையின் அருகேயுள்ள மின் பிளக்குகளில் பவர் பேங்கை சொருகி மொபைல்போன், லேப் டாப்பை சார்ஜ் செய்வதும் அடக்கம். பவர் பேங்குகள் மற்றும் அதுபோன்ற லித்தியம் பேட்டரிகளை கைப்பைகளில் மட்டுமே எடுத்துச் செல்ல வேண்டும்.

அதனை மேல்பக்க கம்பார்ட்மன்ட்களில் வைக்கக் கூடாது என்று விதிமுறைகளில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. லித்தியம்-அயன் பேட்டரிகளால் ஏற்படும் தீ விபத்துகளை தவிர்க்க இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச விமான நிறுவனங்கள் ஏற்கெனவே இதேபோன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளன. இவ்வாறு சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பயணிகளின் இணக்கத்தை உறுதி செய்வதற்கும், விமானப் பயணத்தின் போது பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும், விமான நிறுவனங்கள் பயணத்துக்கு முந்தைய அறிவிப்பு மற்றும் விமானப் பணியாளர் விளக்கங்கள் மூலம் இந்த புதிய தடையை அமல்படுத்த தொடங்கியுள்ளன.

அதன்படி, விமானப் பயணிகள் இனி கையடக்க சார்ஜர்களை விமானத்தில் கொண்டு செல்லலாம். ஆனால் விமானப் பயணத்தின்போது அவற்றை பயன்படுத்த முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள், விமானப் பயணத்தின்போது தொலைபேசிகள், டேப்லெட்டுகள் அல்லது வேறு எந்த கருவிகளையும் சார்ஜ் செய்ய பவர் பேங்குகளை பயன்படுத்த முடியாது என்பதாகும்.

மேலும், இந்த சாதனங்களை சார்ஜ் செய்ய அல்லது இயக்குவதற்கு விமான இருக்கையின் அருகே மின் பிளக்குகளை பயன்படுத்துவதற்கும் இந்த விதி பொருந்தும். இந்த புதிய விதிமுறை மூலம் விமானப் பயணிகள் இனி தங்களது பயணத்துக்கு முன்பாக மொபைல்போன், லேப் டாப்களில் தேவையான அளவு சார்ஜ் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

# திருவண்ணாமலை கோவிலில் தீப மை பிரசாதம் விற்பனை தொடக்கம்

**திருவண்ணாமலை, ஜன.9:**

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலின் ஐந்தாம் பிரகாரத்தில், திருமஞ்சன கோபுரம் அருகே தீப மை விற்பனை தொடங்கியது.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த நவம்பர் மாதம் 24-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி கோலாகலமாக நடந்தது. விழாவின் சிகர நிகழ்ச்சியாக கடந்த 3-ந் தேதி கோவில் பின்புறம் உள்ள 2,668 அடி உயர மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட்டது. தொடர்ந்து 11 நாட்கள் பக்தர்களுக்கு மகா தீபம் காட்சியளித்தது.

இதன் பின்னர் மகா தீபம் ஏற்றப்பட்ட கொப்பரை 2,668 அடி மலை உச்சியில் இருந்து அருணாசலேஸ்வரர் கோவிலுக்கு கொண்டு வரப்பட்டது. கடந்த 3-ந் தேதி ஆருத்ரா தரிசனத்தன்று தீபச்சுடர் மை (தீப மை) அருணாசலேஸ்வரர் கோவிலில் ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந்தருளும் நடராஜருக்கு வைக்கப்பட்டது.

இந்த நிலையில், திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலின் ஐந்தாம் பிரகாரத்தில், திருமஞ்சன கோபுரம் அருகே தீப மை விற்பனை இன்று தொடங்கியது.

ஒரு மை டப்பா ரூ.10 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கு 20 டப்பாக்கள் வரை வழங்கப்படும்.

காலை 10 முதல் 1 மணி வரை, பிற்பகல் 3 முதல் மாலை 6 மணி வரை விற்பனை நடைபெறும் என கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

# சுற்றுச்சூழல் போட்டியில் வென்ற பள்ளிகளுக்கு பரிசு

**சென்னை, ஜன.9:**

தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை சார்பில், நடைபெற்ற சுற்றுச்சூழல் தொடர்பான விநாடி-வினா போட்டியில் வென்ற பள்ளிகளுக்கு, சுற்றுச்சூழல் துறை செயலர் சுப்ரியா சாஹூ பரிசுகளை வழங்கினார்.




தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறையின் கீழ் இயங்கும், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் சார்பில், காலநிலைக் கல்வியறிவு முன்னெடுப்பின் கீழ், மாணவர்களுக்கு கோடைக்கால மற்றும் குளிர்கால இயற்கை முகாம்கள், காலநிலை மாற்றம் குறித்து பள்ளி ஆசிரியர்களுக்கான உறைவிடப் பயிற்சி முகாம்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு 'சூழல் அறிவோம்' எனும் தலைப்பிலான விநாடி-வினா ஆகியவை பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து நடத்தப்பட்டது.

அதன்படி, மாநிலம் தழுவிய "சூழல் 2.0" விநாடி-வினா போட்டி கடந்த அக்.23-ம் தேதி தொடங்கப்பட்டது. இணைய வழியில் நடத்தப்பட்ட இந்த விநாடி-வினாவின் முதற்கட்ட போட்டிகளில் அணிகளுக்கு இருவர் என சுமார் 17,000 அணிகள் என, 34,000 மாணவர்கள் பங்கேற்றனர். அனைத்து மாவட்டங்களிலும் முதற்கட்ட போட்டியில் வெற்றி பெற்ற 10 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, சென்னை, சேலம், மதுரை, திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை திருச்சி ஆகிய மண்டலங்களில் மண்டல அளவிலான கடந்த நவ.18, 19 தேதிகளில் இணைய வழியில் போட்டிகள் நடத்தப்பட்டன.

அதைத் தொடர்ந்து, சென்னை பிர்லா கோளரங்கில் உள்ள அறிவியல் நகர அரங்கில் "சூழல் 2.0" விநாடி வினாவின் இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது. அதில் நாமக்கல் மாவட்டம். அனியபுரம், லிட்டில் ஏஞ்சல்ஸ் மெட்ரிக்குலேசன் பள்ளி முதலிடத்தையும், கன்னியாகுமரி மாவட்டம், வெள்ளமூடி, ஸ்டெல்லா மேரீஸ் சிபிஎஸ்இ பள்ளி 2-ம் இடத்தையும், சென்னை, கலைமகள் வித்யாஷ்ரம் பள்ளி 3-ம் இடத்தையும் பிடித்தன.

பரிசளிப்பு விழாவில், சுற்றுச்சூழல் துறை செயலர் சுப்ரியா சாஹூ பங்கேற்று, முதல் 3 இடங்களை பிடித்த அணிகளுக்கு முறையே ரூ.50 ஆயிரம், ரூ.30 ஆயிரம், ரூ.20 ஆயிரம் மற்றும் ஆறுதல் பரிசாக ரூ.10 ஆயிரம் வழங்கினார்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## ஆலந்தூர் - வண்ணாரப்பேட்டை இடையே 3 நிமிடத்துக்கு ஒரு மெட்ரோ ரயில்

**சென்னை, ஜன.9:**

சென்னையில் தற்போது 2 வழித்தடங்களில் 54 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினசரி சுமார் 3 லட்சம் பேர் பயணிக்கின்றனர். விரைவான, பாதுகாப்பான, சொகுசான பயணம் காரணமாக மெட்ரோ ரயில்களில் பயணிப்போர் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது. குறிப்பாக, காலை, மாலை வேளையில் மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. இந்நிலையில், பயணிகள் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக, விமான நிலையம் - விம்கோ நகர் வழித்தடத்தில் ஆலந்தூர் -வண்ணாரப்பேட்டை இடையே 'பீக் அவர்ஸில்' 3 நிமிடத்துக்கு ஒரு மெட்ரோ ரயில் இயக்கப்படும். தொலைந்துபோன மெட்ரோ ரயில் பயண அட்டைகள் மற்றும் சிங்கார சென்னை அட்டைகளில் மீதமுள்ள தொகையை எந்தச் சூழ்நிலையிலும் வேறு அட்டைக்கு மாற்றப்படவோ அல்லது திரும்பப் பெறவோ முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கூடுதலாக 5 சிறப்பு ரயில்கள் அறிவிப்பு: திருநெல்வேலி, தூத்துக்குடிக்கு இயக்கம்

**சென்னை, ஜன.9:**

தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தாம்பரம் - திருநெல்வேலி: திருநெல்வேலியில் இருந்து ஜன.13, 20 ஆகிய தேதிகளில் அதிகாலை 3.45 மணிக்கு அதிவிரைவு சிறப்பு ரயில் (06058) புறப்பட்டு, அதேநாள் மதியம் 2 மணிக்கு தாம்பரத்தை வந்தடையும்.

மறுமார்க்கமாக, தாம்பரத்தில் இருந்து ஜன.13, 20 ஆகிய தேதிகளில் பிற்பகல் 3 மணிக்கு சிறப்பு ரயில் (06057) புறப்பட்டு, மறுநாள் அதிகாலை 2 மணிக்கு திருநெல்வேலியை அடையும்.

திருநெல்வேலியில் இருந்து ஜன.14-ம் தேதி அதிகாலை 3.45 மணிக்கு சிறப்பு ரயில் (06154) புறப்பட்டு, அதேநாள் மதியம் 1.15 மணிக்கு செங்கல்பட்டை வந்தடையும். மறுமார்க்கமாக, செங்கல்பட்டில் இருந்து ஜன.14-ம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு சிறப்பு ரயில் (06153) புறப்பட்டு, மறுநாள் அதிகாலை 2 மணிக்கு திருநெல்வேலியை அடையும்.

திருநெல்வேலியில் இருந்து ஜன.12, 19 ஆகிய தேதிகளில் அதிகாலை 12.30 மணிக்கு சிறப்பு ரயில் (06166) புறப்பட்டு, அதேநாள் மதியம் 1.30 மணிக்கு தாம்பரத்தை வந்தடையும். மறுமார்க்கமாக, தாம்பரத்தில் இருந்து ஜன.12, 19 ஆகிய தேதிகளில் மாலை 4.40 மணிக்கு சிறப்பு ரயில் (06165) புறப்பட்டு, மறுநாள் காலை 8 மணிக்கு திருநெல்வேலியைச் சென்றடையும்.

இந்த ரயில் தாம்பரத்தில் இருந்து விழுப்புரம், மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை வழியாக திருநெல்வேலி செல்கிறது.

# வரப்போகுது புதிய மாற்றம்..! ஆதார் சேவையிலும் ஏஐ தொழில்நுட்பம்..!

தகவல் தொழில்நுட்பத் துறையில் செயற்கை நுண்ணறிவு எனும் ஏஐ தொழில்நுட்பம் புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. பல்வேறு துறைகளில் ஏஐ தொழில்நுட்பத்தின் ஆதிக்கம் மேலோங்கி வரும் நிலையில், ஆதார் கார்டு சேவையிலும் இதனைப் பயன்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக 'ஆதார் விஷன் 2032' என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.




செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கம்ப்யூட்டிங் மற்றும் பிளாக்செயின் உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து, நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு நிறைந்த டிஜிட்டல் சேவைகளை வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். இதில் தனிநபர் தரவுகள் பாதுகாப்பான முறையில் கையாளப்படும்.

மத்திய அரசின் 'ஆதார் விஷன் 2032' திட்டம், ஆதார் சேவையை அடுத்த தலைமுறைக்கு தயார்படுத்தும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. நாட்டின் அடையாள மேலாண்மை அமைப்பை காலத்திற்கேற்றவாறு 2032 ஆம் ஆண்டுக்குள் நவீனப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கம்.

இன்றைய டிஜிட்டல் உலகில் சைபர் பாதுகாப்பு மோசடிகள், டிஜிட்டல் அரெஸ்ட் மற்றும் தனிநபர் தரவுகள் திருடப்படுவது உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் நடக்கின்றன. இதிலிருந்து ஆதார் அமைப்பைஎப்படி பாதுகாக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு 'ஆதார் விஷன் 2032' என்ற திட்டம் ஆதார் சேவையை மறுவரையறை செய்யும்.

1. ஏஐ: செயற்கை நுண்ணறிவு எனும் ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அங்கீகாரம் கொண்ட அமைப்புகளின் துல்லியத்தை அதிகரிப்பது மட்டுமின்றி, மோசடிகளைக் குறைக்கவும் முடியும்.

2.குவாண்டம்கம்ப்யூட்டிங்: எதிர்காலத்தில் வரக் கூடிய அச்சுறுத்தல்களில் இருந்து ஆதார் அமைப்பைப் பாதுகாப்பதே குவாண்டம் கம்ப்யூட்டிங்கின் வேலை.

3. பிளாக்செயின்: தரவுகள் சரிபார்ப்பை பாதுகாப்பானதாக மாற்றுவதற்கு பிளாக்செயின் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். இது வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும்.

இந்த 3 அதிநவீன தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும் போது, ஆதார் சேவை அதிக பாதுகாப்பு நிறைந்ததாக மாறும். மாபெரும் டிஜிட்டல் மாற்றத்தை நோக்கி பயணிக்கும் மத்திய அரசின் இந்தப் புதிய திட்டத்திற்கு, இந்தியதனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) உயர் நிலை நிபுணர் குழு ஒன்றை அமைத்துள்ளது.

இந்தக் குழுவிற்கு ஆதார் அமைப்பின் தலைவர் நீலகண்ட மிஸ்ரா தலைமை வகிக்கிறார். சட்டம், தொழில்நுட்பம், சைபர் பாதுகாப்பு, பொது நிர்வாகம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) உள்ளிட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் இந்தக் குழுவில் உள்ளனர். இந்தியாவில் ஆதார் கார்டு முக்கியமான தனிநபர் அடையாள அட்டையாக இருக்கிறது. இதன் பாதுகாப்பு அம்சத்தை மேம்படுத்துவதில் மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. இந்நிலையில் மத்திய அரசின் இந்த புதிய திட்டம் உலகளாவிய டிஜிட்டல் யுகத்தில், ஒரு புதிய மைல் கல்லாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதோடு தற்போதைய செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் இந்தத் திட்டத்திற்கு பெரும்பங்காற்ற உள்ளது.



# "பூர்வ ஜென்மக் கடன்"




ராகவன் ஹவுஸ் ஓனரிடமிருந்து வந்திருந்த அந்த நோட்டீசை மீண்டும் படித்தான். "வாடகை அடுத்த மாதம் முதல் இரு மடங்கு."

அதில் எழுதியிருந்த எழுத்துக்கள் ராகவனின் நெஞ்சை நசுக்கின.

"இது என்ன நியாயம்?"

"இவ்வளவு வாடகையா? .. நமக்குக் கட்டுபடியாவாது... வேற வீடு பார்த்துடலாம்."மனைவி லதா சத்தம்போட்டாள்.

அடுத்த இரண்டு நாட்கள் கணவன் மனைவி இருவருமாய்ச் சேர்ந்து வீடு தேடினார்கள். கிட்டத்தட்ட ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் ஒரு வீடு கிடத்தது. சிறியதாயிருந்தாலும் சுத்தமாயிருந்தது. வாடகையும் குறைவு. ஆனால் வீட்டு ஓனர் கடைசியில் ஒரு கண்டிஷன் போட்டார். "நாய், பூனை எதுவும் வரக் கூடாது.... வீட்டுக்குள்ளார வளர்க்கவும் கூடாது."

லதாவுக்கு அது பிரச்சனை இல்லை.

"நல்லதுதானே? நம்ம சுமையும் குறையும்." என்றாள்.

ராகவன் எதுவும் பேசவில்லை.

வீட்டுக்கு வந்ததும்,வாசலோரத்தில் சுருண்டு படுத்திருந்த அந்த நாயைப் பார்த்தான்.

எங்கிருந்து வந்ததென்றே தெரியாத அந்த நாய் கடந்த எட்டு வருடமாய் போட்டதைத் தின்று கொண்டு, விசுவாசமாய்க் காவல் காத்து தீபாவளிக்குப் பயந்து நடுங்கி, அவனுடைய காலடியிலேயே வளர்ந்தது.

அன்றிரவு லதா கேட்டாள். "இந்த நாய்க்காக டபிள் வாடகையை ஒத்துக் கொள்ளப் போறீங்களா?... நம்ம கஷ்டத்தை யோசிங்க."

ராகவன் மெதுவாக அந்த நாயை பார்த்தபடி கேட்டான். 'எங்கியோ பொறந்த இந்த நாய்... ஏன் நம்ம வீட்டு வாசல்ல வந்து நின்னிச்சு?... அதுக்கப்புறம்... கடந்த எட்டு வருஷமா நம்ம சாப்பாட்டை தின்னு, நம்ம காலடியேலே படுத்து தூங்கிச்சு.. அது ஏன்?"

லதாவிடம் பதிலில்லை.

"எல்லாம் அந்த ஆண்டவன் கணக்கு,"

சரியாய்ச் சொல்லணும்ன்னா "பூர்வ ஜென்மக் கடன்" அதைத் திருப்பித் தரத்தான் இந்த ஏற்பாடு."

அந்த நாய் மெதுவாக எழுந்து ராகவனின் பாதத்தருகே வந்து உட்கார்ந்தது. வால் அசையவில்லை. கண்களில் மட்டும் ஒரு சீரியஸான நம்பிக்கை.

லதாவின் கண்கள் ஈரமாயின. எதுவும் பேசாமல் நாயின் தலையை தடவினாள். "வாடகை உயர்ந்தாலும் பரவாயில்லை... இது இங்கேயே இருக்கட்டும்," மெதுவாக சொன்னாள்.

அந்தப் பழைய வீட்டினுள் இன்று புதிதாய்ப் பிறந்த மனங்கள்.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# மிர்ச்சி அல்வா !



" ஏன்னா ! " பார்யாள் பங்கஜம் அழைக்க சோஃபாவில் அமர்ந்தபடி பேப்பர் படித்துக்கொண்டிருந்த சீனிவாசன் திரும்பி ' என்ன ' என்பதுபோல்பார்த் தார்.

" எங்காத்துக்கு போயிட்டு வந்துட றேன். பனிரெண்டு மணிக்கு வந்து தளிகை பண்ணி போடறேன். பிரேக் ஃபாஸ்டுக்கு உங்க பிள்ளையாண்டானுக்கு எட்டு இட்லி கட்டிக் கொடுத்தது போக பாக்கி நாலு இட்லி இருக்கு . அத வச்சு அடஜஸ்ட்?பண்ணிக் கோங்க !" என கூறிவிட்டு நடையைக் கட்டினாள் பங்கஜம்.

பிள்ளை ரகு தன் நண்பண் ஒருவனு டன் திருப்பதி போவதாகச் சொல்லி யிருந்தான். அதிகாலையில் எழுந்த பங்கஜம் குளித்துவிட்டு மட மடவெ ன்று ஸ்டவ் பற்றவைத்து குக்கரில் மூன்று தட்டில் இட்லி வைத்தாள். இட்லி வெந்ததும் நாலு நாலு இட்லி களாக இரண்டு பேப்பர் தட்டில் மிள காய்ப் பொடி தடவி வைத்தாள்.

அவற்றை எடுத்துக்கொண்ட ரகு தன் பெற்றோரிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டபோது காலை மணி ஐந்து. நாலரை மணிக்கு வேகவைத்த இட்லி இப்போது எப்படியிருக்கும் ? ஆறி அவலாய் போயிருக்கும். தொட்டுக் கொள்ளசட்னி இருந்தாலாவது பர வாயில்லை. மிளகாய் பொடியை வைத்துக்கொண்டு சாப்பிடவே ண்டும்.

சீனுவாசனுக்கு இட்லி சாப்பிடும் ஆசையே விட்டுப் போச்சு ! ஆயினும் அவருக்கு பேசாமல் இட்லி உப்புமா பண்ணி சாப்பிட்டாலென்ன என்ற ஐடியா உதித்தது.

உடனே எழுந்தவர் கிச்சனுக்குள் நுழைந்தார். இட்லி குக்கரைத் திறந்து தட்டிலிருந்த நாலு இட்லிகளை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு கையால் நன்றாக பிசைந்து வைத்து க்கொண்டார்.

பிறகு ஸ்டவ்வை பற்றவைத்து வாண லியை அதன்மீது வைத்து கொஞ்சம் எண்ணையை ஊற்றினார். இதற்குள் உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு சிறி தளவில் எடுத்து தயாராய் வைத்தவர் அவற்றை காயும் எண்ணையில் போட் டார். கூடவே கொஞ்சம் கடுகையும் போட்டு நன்கு கரண்டியால் கிளற கடுகு வெடித்தது. பருப்பும் பொன்னி றமாக மாறியது.

மிளகாய்த்தூள் பாக்கெட்டைவாணலிக்கு நேராகப் பிடித்து வாகாக சாய்க்க சட்டென நிறையத் தூள் கொட்டி விட் டது.பார்க்க பயங்கர சிவப்பு நிறத்தில் இருந்தது வாணலியல் உள்ள கரை சல்.!

பாத்திரத்தில் வைத்திருந்த இட்லி துகள்களை வாணலியில் போட்டு கரண்டியால் கிண்டினார். நன்றாக கிண்டியதும் ஸ்டவ்வை அணை த்தவர், ஒரு ஸ்பூனைக் கொண்டு வாணலியில் உள்ள இட்லி உப்பு மாவில் கொஞ்சம் எடுத்து நன்றாக ஊதி வாயில் போட்டுக்கொள்ள சுர்ர் என்று காரம் மண்டையில் உறை த்தது. மூக்கில் தண்ணிர் வந்தது. இதை சாப்பிட்டால் நிச்சயம் வயிற்றுப் போக்கு ஏற்படும் அதே சமயம் பொருள் வேஸ்ட் ஆகவும் கூடாது, என்ன வழி என்று யோசனைசெய்த சீனுவாசனுக்கு ஒரு ஐடியா தோன்றி யது.

இன்னொரு வாணலியை ஸ்டவ் பற்ற வைத்து அதன்மீது வைத்தார். நான்கு மேஜைக்கரண்டி நெய்யை வாணலி யில் ஊற்றினார். நெய் காய்ந்ததும் ரெடியாக வைத்திருந்த முந்திரிப்ப ருப்பு மற்றும் ஏலக்காய் போட்டு கரண்டியால் கிண்டநன்கு சிவந்ததும் இட்லி உப்புமாவை எடுத்து அதில் போட்டு நன்றாக கிளறினார்.

நெய்யில் தள தளவென்று இட்லி உப் புமா குதித்துக்கொண்டிருந்த நேரம்இரண்டு டம்ளர் சர்க்கரையை அதில் சேர்த்து மீண்டும் நன்கு கிளறினார். பிறகு ஸிம்மில் வைத்துவிட்டு ஒரு தட்டைக்கொண்டு வாணலியை மூடிய வர் ஹாலுக்குள் பிரவேசித்துகொஞ்ச நேரம் ஆஸுவாசப்பட்டுக்கொண்டார்.

பத்து நிமிடம் கழிந்ததும் உள்ளேயிருந்து ஒரு விநோதமான நெடிவர மீண்டும் கிச்சனுக்குள் நுழைந்து இடுக்கியால் தட்டை திறந்து பார்க்க வாணலியில் இருந்த வஸ்து அல்வா போல் கண் சிமிட்டியது !

சோர்ந்துபோயிருந்த சீனுவாசனின் முகம் விரிந்தது ! ஸ்பூனினால் கொஞ் சம் அல்வாவை எடுத்து ஊதி வாயில் போட்டார். காரம் கொஞ்சம் குறைந் திருக்க சர்க்கரையால் இனிப்பு கூடியிருந்தது.

ஒரு புதுவிதமான அல்வா கிண்டிய சந்தோஷம் கலந்த திருப்தி ஏற்பட அதற்கு மிர்ச்சி அல்வா என்ற பெயர் இட்டார் சீனிவாசன்.



- வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# ஆன்மிக களஞ்சியம்

# முனையாடுவார் நாயனார் வரலாறு

தொடர்-44



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி


அறைகொண்டவேல் நம்பி முனையடுவார்க் கடியேன்" என்று திருத்தொண்டத் தொகை

முனையடுவார் நாயனார் என்பவர் சோழநாட்டில் திருநீடூரில் வேளாள குலத்தில் தோன்றியவர். சிவபெருமான் திருவடியில் நிறைந்த பேரன்புடையவர்; பகைவர்களைப் போர்முனையில் வென்று பெற்ற பெருநிதியங்களைச் சிவனடியார்க்கு மாறாதளிக்கும் வாய்மை உடையவர்; போரில் பகைவர்களுக்குத் தோற்றவர்கள் தம்மிடம் வந்து துணைவேண்டினால் நடுவு நிலையில் நின்று அவர்களோடு ஆள்வினையாற் கூலி பேசிக்கொண்டு அவர்களுக்காகப் போர்செய்து பொருள் ஈட்டிச் சிவனடியார்களுக்குச் சொன்னபடியே நிறையக் கொடுத்து அவர்களை அறுசுவைக்கறிகளுடன் திருவமுது செய்வித்துக் கொண்டிருந்தார். முனையடுவார் நாயனார் நெடுங்காலம் ஈசனடியார்களுக்கான திருப்பணி புரிந்திருந்து உமையொருபாகர் திருவருளாற் சிவலோகத்துப் பிரியாது உறையும் பெருவாழ்வு பெற்றார்.

போர் முனையிற் கொல்லும் தொழிலே புரினும் அடியர்க்கு அமுதளித்தல் பெரும் சிவத்தொண்டு என்பதை இவரது வரலாறு உணர்த்துகிறது.

கழற்சிங்கர் நாயனார் வரலாறு

_கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்" - திருத்தொண்டத்தொகை.



கழற்சிங்க நாயனார் பல்லவர் குலத்திலே தோன்றியவர். சிவனடி அன்றி வேறொன்றை அறிவினிற் குறியாதவர்; வடபுலவேந்தரை வென்று அறநெறியில் நின்று நாடாண்ட வேந்தராகிய இவர் ஒரு நாள் திருவாரூரை அடைந்து திருக்கோயிலை வணங்கச் சென்றார். அப்பொழுது திருக்கோயிலை வலம்வந்து திருப்பூ மண்டபத்தை அடைந்த பட்டத்தரசி அங்கு கீழே வீழ்ந்து கிடந்த மலரொன்றை எடுத்து மோந்தாள். அவள் கையில் புதுமலரைக் கண்ட அங்குவந்த செருத்துணையார் என்னும் சிவனடியார் இவள் இறைவனுக்குச் சாத்தும் மலரை மோந்தாள் என்று வெகுண்டு அம்மலரை எடுத்து மோந்த மூக்கினை கத்தியால் அரிந்தார். பட்டத்தரசி கீழே விழுந்து அரற்றி அழுதாள். உள்ளே பூங்கோயில் இறைவரைப் பணிந்து வெளியேவந்த கழற்சிங்கர், அரசியின் புலம்பலை அறிந்து வந்து மிகவும் வெகுண்டு 'அச்சமின்றி இந்தக் கொடுஞ்செயலைச் செய்தவர் யார்?' என வினவினார் .அருகே நின்ற செருத்துணையார், 'இவள் இறைவர்க்குச் சாத்துதற்குரிய மலரை எடுத்து மோந்தமையாலே நானே இதைச் செய்தேன்' என்றார். அப்போது கழற்சிங்கர் அவரை நோக்கி, 'பூவை எடுத்த கையையன்றோ முதலில் வெட்டுதல் வேண்டும்? என்று சொல்லித் தம் உடைவாளை உருவிப் பட்டத்தரசியின் கையைத் தடிந்தார். இத்தகைய அரிய தொண்டினைச் செய்த கழற்சிங்க நாயனார் சைவநெறி தழைத்தோங்க அரசாண்டு சிவபெருமான் திருவடி நீழலில் அமர்ந்திருக்கும் பெருவாழ்வு பெற்றார்.

தொடரும்...

# நாக தோஷ பரிகாரம் பற்றிய சிறப்பு தகவல்கள்

**ராகு, கேது தோஷத்தால் கஷ்டங்களை அனுபவிப்பவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள நாக தோஷ பரிகாரம் பற்றிய 50 சிறப்பு தகவல்களை படித்து பலன் பெறலாம்.**

**நாக தோஷ பரிகாரம் பற்றிய 50 சிறப்பு தகவல்கள்**

1. “கால சர்ப்பயோகம் கொண்ட ஜாதகர்கள், ராகு காயத்திரியையும் கேது காயத்திரியையும் ஆயுள் முடியுமட்டும் தினமும் தங்களால் முடிந்த அளவு ஜபித்துக் கொண்டே வருவது மிகச் சிறந்த பரிகாரம்.

2. ஜோதிட சாஸ்திரத்தில் நிழற்கிரகங்கள் என்று ராகு கேதுவை வர்ணக்கப்பட்டாலும் இவர்கள் இரண்டு பேரும் சனி பகவானின் பிரதிநிதிகளாகத் திகழ்கிறார்கள்.

3. கிரந்தங்களிலும் பல்வேறு ஓலை சுவடிகளிலும் ராகு-கேதுவின் பெருமைகளைப் பற்றியும் அவர்கள் ஒவ்வொரு ராசிகளில் சஞ்சரிக்கும்போது என்ன என்ன செய்வார்கள் என்பதைப் பற்றி நிறைய செய்திகள் உள்ளன.

4. ஜாதகத்தில் லக்னத்தில் இருந்து 1, 5, 9 இந்த ஸ்தானங்களில் சனி, ராகு, கேது, போன்ற கிரகங்கள் இருக்கும் பொழுது அது நாகதோஷம் உடைய ஜாதகமாகிறது.

5. நாக தோஷம் உடையவர்களுக்கு உடலில் ஏதோ ஒரு இடத்தில் நாகம் போன்ற உருவம் கொண்ட மச்சமோ, அல்லது தழும்போ இருக்கும் என்று சொல்வதில் உண்மை இல்லை.

6. ஜாதகத்திலே நாக தோஷம் இருப்பவர்களுக்கு நான்கு, பதி மூன்று, இருபத்தி இரண்டு, முப்பத்தி ஒன்று, இந்த தேதியில் பிறந்தவர்களுக்கும், அல்லது பெயரின் கூட்டு எண் நான்கு வந்தாலும், இவர்களுடைய கண்களுக்கு பாம்புகள் அடிக்கடி தென்படும்.

7. நாக தோஷங்கள் எதனால் ஏற்படுகிறது என்று பார்த்தால் முன் ஜென்மத்தில் ஆண் நாகமும், பெண் நாகமும் ஒன்றாக இணைந்து இருக்கும் பொழுது அதை துன்புறுத்தினால், இந்த ஜென்மத்தில் அவருடைய ஜாதகத்தில் லக்னத்துக்கு ஏழாம் இடத்தில் ராகு என்ற கருநாகம் நின்று கணவனுக்கு தோஷத்தை எற்படுத்தும்.

8. பாம்பு தன்னுடைய பசிக்காக இரையை தேடி செல்லும் பொழுது அதை துன்புறுத்தினால் இந்த ஜென்மத்தில் அவருடைய ஜாதகத்தில் தொழில் ஸ்தானமான லக்னத்துக்கு பத்தாம் இடத்தில் ராகுவோ, கேதுவோ நின்று, தொழில் ஸ்தானத்துக்கு தோஷத்தை உருவாக்கும்.

9. பாம்பு முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் காலத்திலும், அல்லது தனது குட்டிகளுடன் ஒன்றாக இருக்கும் பொழுது அதை துன்புறுத்தினால் இந்த ஜென்மத்தில் அவருடைய ஜாதகத்தில் லக்னத்துக்கு ஐந்தாம் இடமான புத்திர ஸ்தானத்தில், ராகுவோ, கேதுவோ நின்று நாக தோஷத்தை ஏற்படுத்தும்.

10. புராண காலங்களில் நாகதோஷம் எதற்காக பார்க்கப்பட்டது என்றால், ஒருவர் சன்னியாசம் பெற்று காடுகளிலும், மலைகளிலும், கடுமையான தவங்கள் செய்வதற்கு கடுமையான விஷ ஐந்துகளினால் இவருக்கு ஆபத்து ஏற்படுமா என்பதை அறிந்த பின்னரே அவருக்கு சன்னியாசம் கொடுக்கப்பட்டது. நாக தோஷம் இதற்காகத்தான் பார்க்கப்பட்டது. நாளடைவில் அது ஒரு பயப்படக் கூடிய தோஷமாக பார்க்கப்பட்டது.



11. கும்ப கோணத்தில் இருக்கும் திருநாகேஸ்வரம், ஆந்திர மாநிலத்தில் திருப்பதிக்கு அருகில் உள்ள திருகாளகஸ்தி, சென்னை அருகில் உள்ள கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு, சென்று வணங்கி வருவது நாக தோஷங்களை நீக்கும் பரிகாரமாகும்.

12. ஒவ்வொரு மாதமும் திரியோதசி திதியன்று, சிவன் கோவில்களில் பிரதோஷ வழிபாடு நடைபெறுகிறது. பிரதோஷ வேளையில் மாலை 4.30 மணியில் இருந்து 6 மணிக்குள் இவ்வழிபாடு நடைபெறும். ராகு கேதுவால் ஏற்படும் நாக தோஷத்தை போக்க இது சிறந்த வழிபாடாகும்.

13. சர்ப்ப பரிகாரங்கள் செய்யும்போது மிகுந்த ஆசாரத்துடன் செய்ய வேண்டும். சைவ உணவு விரதம் மேற்கொள்ள வேண்டும். தான தர்மங்களை மனம் கோணாமல், மனமுவந்து நம்மால் முடிந்த அளவு செய்ய வேண்டும்.

14. நாகப் பிரதிஷ்டம் என்பது ஆண் பாம்பும் பெண் பாம்பும், நாகப்பாம்பும், சாரைப் பாம்பும் இணைவது போன்று கல்லில் வடித்து அரசும், வேம்பும் சேர்ந்திருக்கும் இடத்தில் பிரதிஷ்டை செய்தால் விசேஷம் என்று மனுநீதி என்ற நூலில் கூறப்பட்டிருக்கிறது.

15. திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலில் கோமதி அம்மன் ஆலயம் உள்ளது. நாக தோஷம் உள்ளவர்கள் இந்தக் கோவிலுக்கு வெள்ளிக்கிழமை அன்று வந்து பாம்பு புற்றுக்கு பால், பழம் வைத்து வழிபடுகின்றனர். இவ்வாறு 11 வாரம் தொடர்ந்து புற்றுக்கு பால், பழம் வைத்து வழிபட்டு வந்தால் நாக தோஷத்தால் தடைப்பட்டு வரும் திருமணம் விரையில் நடைபெறும்.

16. ராமேஸ்வரம் சென்று மூன்று நாள் தங்கி கடலில் நீராடி ராமலிங்க சுவாமியை வணங்கி வந்தால் கர்ப்ப தோஷம் பரிகாரமடைந்து புத்திரர் பிறப்பார்கள்.

17. தங்கம் அல்லது வெள்ளி சிறு ஐந்து தலை நாகம் செய்து வீட்டில் வைத்து நாற்பது நாள்கள் பாலபிஷேகம் செய்து, பூசித்து பிறகு ஒருவருக்கு புது வேட்டி துண்டு தாம்பூலம் தட்சணையுடன் நாக விக்கிரகத்தையும் தானம் செய்யலாம்.

18. கருங்கல்லில் நாகப் பிரதிஷ்டை செய்து ஆறு, குணம் அருகில் வைத்து நாற்பது நாள்கள் பாலபிஷேகத்துடன் பூசித்து தினமும் 108 முறை வலம் வந்தால் நாக தோஷம் நிவர்த்தியாகும்.

19. இரண்டு நாகங்கள் பின்னிக் கொண்டு ஒன்றின் முகத்தை ஒன்று பார்க்குமாறு கல்லில் வடித்து அரசமரத்தின் அடியில் பிரதிஷ்டை செய்து நாற்பது நாள்கள் விளக்கேற்றி வைத்து பூசித்தால் நாகதோஷம் விலகும்.

20. கண்ணன் நடனமாடுவது போலவும், அவனுக்கு ஐந்து தலை நாகம் குடை பிடிப்பது போலவும் கல்லில் வடித்து வேம்பும் அரசும் இணைந்திருக்கும் குளக்கரையில் பிரதிஷ்டை செய்து நாற்பது நாள் விளக்கேற்றி வலம் வந்து வணங்கினால் நாகதோஷம் நிவர்த்தியாகும்.

21. சிவலிங்கத்திற்கு ஐந்து தலை நாகம் குடை பிடிப்பது போல் சிலை வடித்து நதிக்கரை அல்லது, குளக்கரையில் பிரதிஷ்டை செய்து, நாற்பது நாள் பூசித்து வலம் வந்தால் நாகதோஷம் பரிகாரமாகும்.

22. குளம் அல்லது நதிக்கரையில் அரசு, வேம்பு கன்றுகளை நட்டு, முறையாகத் திருமணம் செய்து குறைந்தது நூறு தம்பதிகளுக்கு விருந்தும் தட்சணை தாம்பூலம் அளித்தால் நாகதோஷம் நிவர்த்தியாகி புத்திரர்கள் பிறப்பதுடன் வாழ்க்கையும் இன்பமாக அமையும்.

23. வசதி உள்ளவர்கள் ஓர் ஏழைக்கு பயிர் நிலம் வாங்கி தானம் அளித்தால் நாகதோஷம் நிவர்த்தியாகும்.

24. ராகு காலத்தில் பாம்புப் புற்றுக்கு முட்டை, பால் வைத்து வழிபாடு செய்வது நற்பலன்களை உண்டாக்கும்.

25. கோமேதகக் கல் வைத்த மோதிரம் அணியலாம். இதனால் ராகுவினால் உண்டாகும் அசுப பலன்கள் குறையும்.

**-எம்.அசோக்ராஜா**
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி-620015

**தினம் ஒரு தலைவர்கள்**

# ஷேக் பிஹ்காரி வரலாறு

ஜார்கண்டின் சோட்டாநாக்பூர் பகுதி, ஒரு துணிச்சலான இந்தியரான ஷேக் பிஹ்காரியின் பிறப்பிடமாகும், அவர் தனது மக்களுக்காகப் பேசியதற்காக ஆங்கிலேயர்களின் அட்டூழியங்களை எதிர்கொண்டார், இறுதியாக, தூக்கு மேடையை எதிர்கொண்டார், ஆனாலும் அவர் தேசியக் கதையிலோ அல்லது நவீன இந்தியாவின் வரலாற்றுப் புத்தகங்களிலோ பாடப்படாமல் இருக்கிறார்.


ஷேக் பிகாரியின் தந்தை ஷேக் புலந்து, சிறிய சுதேச மாநிலமான அவுர்கரில் ஒரு போர்வீரராக இருந்தார். ஒரு காலத்தில் அவுர்கரின் இளவரசர் ஒரு மானின் பால் குடிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். ஜார்க்கண்டின் பழங்குடி நல ஆராய்ச்சி நிறுவனத்தின் பதிவின்படி, ஷேக் புலந்து இளவரசருக்காக ஒரு பாலூட்டும் மானைப் பிடித்தார். ராணி மகிழ்ச்சியடைந்து, வருவாய் வசூலுக்காக ஷேக் புலந்துவுக்கு 12 கிராமங்களை பரிசாக அளித்தார்.

அவருக்கு வெகுமதியாக ஒரு அரச வாள் மற்றும் தலைப்பாகை வழங்கப்பட்டது. அந்த வாள் இன்னும் ஜாரியாகரில் (கோவிந்த்பூர்) கிடைக்கிறது, மேலும் விஜயதசமியின் போது ஊர்வலத்தில் காட்சிப்படுத்தப்படுகிறது. ஷேக் பிகாரி 1819 ஆம் ஆண்டு இன்றைய ஓர்மன்ஜி காவல் நிலையத்தில் அமைந்துள்ள குடியா (கோதயா) கிராமத்தில் பிறந்தார். 1857 ஆம் ஆண்டு நாட்டில் சுதந்திரப் போர் வெடித்தபோது அவருக்கு 38 வயது. அவர் மிகவும் பயிற்சி பெற்ற மற்றும் திறமையான நபராக இருந்தார், மேலும் ஓர்மன்ஜி கட்டங்காவின் ராஜா திகாயித் உம்ராவ் சிங்கால் திவானாக நியமிக்கப்பட்டார். அவர் அனைத்து சமூகங்களிலிருந்தும் உறுப்பினர்களைக் கொண்ட பர்காகர்-ஹட்டியாவைச் சேர்ந்த தாக்கூர் விஸ்வநாத் ஷாஹி நிறுவிய ஒரு தன்னார்வ அமைப்பான முக்திவாஹினியின் உறுப்பினராகவும் இருந்தார்.

1857 ஆம் ஆண்டு கலகத்தில் ராஜா உம்ராவ் சிங், அவரது தம்பி கன்சி சிங் மற்றும் அவர்களது திவான் ஷேக் பிகாரி ஆகியோர் காட்டிய மதிப்பு ஓர்மஞ்சி பகுதியில் நாட்டுப்புறக் கதையாகும். ஜூலை 31, 1857 அன்று ராஞ்சி மாவட்டத்தில் ஜமதார் மாதவ் சிங் மற்றும் சுபேதார் நாதிர் அலி கான் ஆகியோர் டோரண்டாவின் இராணுவத்தின் கிளர்ச்சியைத் தலைமை தாங்கினர்.

சுதுபாலு பள்ளத்தாக்கு மற்றும் ஓர்மன்ஜி ஆகியவை இந்தக் கிளர்ச்சியின் மையங்களாக இருந்தன. இராணுவ நடவடிக்கைகளில் திறமையான மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்ட பிகாரி, சுபேதார் நாதிர் அலி மற்றும் ஜமாதர் மாதவ் சிங் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பில் பணியாற்றினார். பிரிட்டிஷ் கேப்டன் கிரஹாமும் அவரது மூன்று அதிகாரிகளும் ஹசாரிபாக் நோக்கி தப்பி ஓடினர், கிளர்ச்சியாளர்கள் அவர்களின் துப்பாக்கிகளைக் கைப்பற்றினர். இந்த துப்பாக்கிகளை ராஞ்சி நோக்கி திருப்பியவர் ஷேக் பிகாரி தான். ஆகஸ்ட் 2, 1857 அன்று, சுதுபாலுவின் இராணுவம் ராஞ்சி நகரத்தின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்தியது.

சோட்டாநாக்பூர் ஆணையர், ET டால்டன் (டால்டோங்கஞ்ச் நகரம் அவரது பெயரிடப்பட்டது), மாவட்ட நீதிபதி டேவிஸ், நீதிபதி ஓகாஸ் மற்றும் பலாமு துணைப் பிரிவு அதிகாரி (SDO) பிரீச் ஆகியோர் பகோதருக்கு தப்பி ஓடினர். இதில், சாய்பாசா மற்றும் புருலியாவில் புரட்சியை நசுக்க ஆங்கிலேயர்கள் சீக்கிய வீரர்களின் உதவியை நாடினர். சீக்கிய வீரர்கள் செப்டம்பர் 2 முதல் செப்டம்பர் 4 வரை ஹசாரிபாக்கில் முகாமிட்டனர். இதற்கிடையில், ஷேக் பிகாரி ஹசாரிபாக்கை அடைந்தார், சீக்கிய இராணுவத்தின் மேஜர் பிஷன் சிங்கை அவர் வென்றார். இது சீக்கிய வீரர்கள் இந்திய புரட்சியாளர்களுடன் சேர வழிவகுத்தது. ஷேக் பிகாரி சந்தால் பர்கானாஸில் சந்தால் கிளர்ச்சிக்கு வழி வகுத்தார். 1855 ஆம் ஆண்டில், சிடோவும் கன்ஹூவும் சந்தால் பர்கானாவில் கிளர்ச்சிக் கொடியை உயர்த்தினர்; அவர்கள் ஹசாரிபாக் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இருவரும் சிறையில் இறந்தனர். இருப்பினும், நாட்டுப்புறக் கதைகளின்படி, ஜூலை 30, 1857 அன்று, புரட்சியாளர்கள் ஹசாரிபாக் சிறைச்சாலையின் சுவரை உடைத்து சிடோவையும் கன்ஹூவையும் விடுவித்தனர். சுதுபாலு பள்ளத்தாக்கின் முற்றுகையை ஷேக் பிகாரியை நிர்வகித்த பிறகு, கிளர்ச்சியில் அவரது பங்கு வெளிச்சத்திற்கு வந்தது.



இதன் பிறகு திகாயித் உம்ராவ் சிங் மற்றும் ஷேக் பிகாரி ஆங்கிலேயர்களின் இலக்குகளாக மாறினர். டால்டன் இருவருக்கும் மிரட்டல் விடுத்தார், அவர்கள் அவரைப் பற்றி கவலைப்படவில்லை. ஆகஸ்ட் 10, 1857 அன்று, இருவரும் மற்ற புரட்சியாளர்களுடன் சேர்ந்து பாபு குன்வர் சிங்கின் நண்பருக்கு உதவ ஜகதீஷ்பூரிலிருந்து அணிவகுத்துச் சென்றனர். முக்திவாஹினி புரட்சிகரப் படை டோரண்டாவிலிருந்து புறப்பட்டு குரு (குடு) விதானம் வழியாக சார்தாவை அடைந்தது. செப்டம்பர் 30, 1857 அன்று, சத்ரா நகரில் உள்ள ஃபன்சிஹரி தலாப் அருகே 3,000 புரட்சியாளர்கள் கொண்ட ஒரு படை முகாமிட்டிருந்தபோது, மேஜர் ஆங்கிலேயர் தலைமையிலான பிரிட்டிஷ் இராணுவம் அவர்களைத் தாக்கியது. அக்டோபர் 2 ஆம் தேதி கடுமையான போர் நடந்தது. சுபேதார் ஜெய்மங்கல் பாண்டே மற்றும் சுபேதார் நாதிர் அலி கான் ஆகியோர் தங்கள் படைகளை வழிநடத்தினர், ஷேக் பிகாரியும் இதில் ஈடுபட்ட போராளிகளில் ஒருவர். ஒரு மணி நேரப் போர் ஆங்கிலேயர்களின் வெற்றிக்கு வழிவகுத்தது. வெற்றி பெற்ற இராணுவம் மறுநாள் 150 புரட்சியாளர்களை தூக்கிலிட்டது. அவர்களில் 77 பேர் உடல்கள் ஒரு கூட்டுப் புதைகுழியில் புதைக்கப்பட்டனர். ஜெய்மங்கல் பாண்டே மற்றும் நாதிர் அலி கான் இருவரும் அக்டோபர் 4, 1857 அன்று தூக்கிலிடப்பட்டனர். மற்றவர்களுடன், ஷேக் பிகாரி பிடிபடுவதிலிருந்தோ அல்லது கொல்லப்படுவதிலிருந்தோ தப்பினார், அவர் தனது பிரச்சாரத்தைத் தொடர்ந்தார். சந்தால் கிளர்ச்சியை அடக்கிய பிறகு, மேஜர் மெக்டொனால்ட் ஷேக் பிகாரியின் இராணுவத்தை எதிர்கொள்ள சட்டுபாலு பள்ளத்தாக்குக்குச் சென்றார். ஷேக் பிகாரி மற்றும் திகைத் உம்ராவ் சிங் ஆகியோர் பிரிட்டிஷ் இராணுவம் முன்னேறுவதற்கான வழியைத் தடுத்தனர். அவர்கள் பள்ளத்தாக்குக்குச் செல்லும் சாலையின் மீது இருந்த பாலத்தை சேதப்படுத்தினர், மரங்களை வெட்டி வழியைத் தடுக்க அவற்றைப் பயன்படுத்தினர், மேலும் ஒரு சாதகமான நிலையில் இருந்து ஆங்கிலேயர்களைத் தாக்கினர். அனைத்து தோட்டாக்களையும் தீர்ந்துபோன பிறகு, அவர்கள் மலையடிவாரத்தில் இருந்து முன்னேறி வந்த இராணுவத்தின் மீது கற்களை உருட்டத் தொடங்கினர், இருப்பினும் ஆங்கிலேயர்கள் ஒரு ரகசிய பாதை வழியாக அவர்களை அடைந்தனர். பிரிட்டிஷ் வீரர்கள் ஷேக் பிகாரி மற்றும் திகாயித் உம்ராவ் சிங்கைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். ஜனவரி 7 ஆம் தேதி, நீதிமன்றம் அவர்களுக்கு மரண தண்டனை விதித்தது. திகாயித் உம்ராவ் சிங் மற்றும் ஷேக் பிகாரி தூக்கிலிடப்படவிருந்த நாளில், எல்லா இடங்களிலிருந்தும் மக்கள் சுட்டுபாலு பள்ளத்தாக்கிற்கு திரளத் தொடங்கினர். இந்தக் காட்சி ஆங்கிலேயர்களைப் பயமுறுத்தியது, மேலும் மெக்டொனால்ட்ஸ் அவர்களை ராஞ்சி-ஓர்மன்ஜி சாலையில் உள்ள மோர்ஹாபாடி தாகூர் மலையில் உள்ள ஒரே ஆலமரத்தின் இரண்டு கிளைகளில் தூக்கிலிட்டது. புரட்சியாளர்களை அச்சுறுத்துவதற்காக இருவரின் உடல்களும் தூக்கிலிடப்பட்ட ஆலமரம் ஃபான்சியாரி பனியன் என்றும், மோர்ஹாபாடியில் உள்ள ஒன்று ஃபான்சி டோங்ரி என்றும் அழைக்கப்படுகிறது. அவர்களின் வீரம் மற்றும் தியாகத்தின் கதை உள்ளூர்வாசிகளின் நினைவிலும், ராஞ்சி நகரத்தின் ரவுண்டானாவில் உள்ள அவர்களின் சிலைகளிலும் பொறிக்கப்பட்டிருந்தாலும், பிகாரி மற்றும் அலி நாட்டின் பிற பகுதிகளில் அறியப்படாமலும், பாடப்படாமலும் உள்ளனர்.

# U/A சென்சார் பெற்ற 'வா வாத்தியார்'?



தீவிர எம்ஜிஆர் ரசிகரும், போலீஸ் அதிகாரியுமான கார்த்தி எதிர்கொள்ளும் சவால்களை மையமாக கொண்டு 'வா வாத்தியார்' எடுக்கப்பட்டுள்ளது.

'வா வாத்தியார்' திரைப்படம் கடந்த மாதமே உலகம் முழுவதும் வெளியாகும் என படக்குழு அறிவித்து இருந்தது.

நலன் குமாரசாமி இயக்கத்தில் "வா வாத்தியார்" படத்தில் நடித்து முடித்துள்ளார் கார்த்தி. கதாநாயகியாக கீர்த்தி ஷெட்டி நடித்துள்ளார். இவர் தமிழில் எல்ஐகே, ஜீனி ஆகிய படங்களில் நடித்துள்ளார்.

கார்த்தியின் 26-வது படமான இதனை ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் தயாரித்துள்ளது. சந்தோஷ் நாராயணன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.சத்யராஜ் இப்படத்தில் வில்லனாக நடித்துள்ளார். மேலும் நடிகர் ராஜ் கிரண் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். தீவிர எம்ஜிஆர் ரசிகரும், போலீஸ் அதிகாரியுமான கார்த்தி எதிர்கொள்ளும் சவால்களை மையமாக கொண்டு 'வா வாத்தியார்' எடுக்கப்பட்டுள்ளது.

'வா வாத்தியார்' திரைப்படம் கடந்த மாதமே உலகம் முழுவதும் வெளியாகும் என படக்குழு அறிவித்து இருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் வெளியாகவில்லை.

இந்த நிலையில், 'வா வாத்தியார்' திரைப்படத்திற்கு U/A சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாக உள்ளது. இதனை தொடர்ந்து படம் வெளியாகும் தேதி குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, விஜய் நடித்துள்ள 'ஜன நாயகன்', சிவகார்த்திகேயனின் 'பராசக்தி' படங்களுக்கு இதுவரை தணிக்கை சான்றிதழ் வழங்காதது குறிப்பிடத்தக்கது.



தமிழ் திரையுலகில் பிரபலமான நடிகைகளில் ஒருவர் ஸ்ரீதேவி விஜயகுமார். நடிகர் விஜயகுமாரின் மகளான இவர், தமிழில் வெளிவந்த காதல் கொண்டேன், தித்திக்குதே ஆகிய படங்களில் நடித்திருக்கிறார்.

இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கும் நடிகை ஸ்ரீதேவி தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை அதில் தொடர்ந்து பதிவு செய்வார். இந்த நிலையில், சிவப்பு நிற உடையில் அசத்தலான போட்டோஷூட் நடத்தியுள்ள ஸ்ரீதேவி, அந்த புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவு செய்துள்ளார்.

# 'தலைவர் தம்பி தலைமையில்' வெளியீட்டுத் தேதியை அறிவித்த படக்குழு




பை பெற்றது 'ப்ளாக்' திரைப்படம். இப்படத்தை பாலசுப்பிரமணி கேஜி இயக்கியிருந்தார். ஜீவாவின் ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடிக்க சாம்.சி எஸ் இசையமைத்திருந்தார். திரைப்படம் ஒரு டைம் லூப் கதையம்சத்தில் உருவாகி மக்களின் ஆதரவை பெற்றது.

இதனை தொடர்ந்து, ஜீவாவின் 45 ஆவது படமாக 'தலைவர் தம்பி தலைமையில்' உருவாகி உள்ளது. இப்படத்தி 'Falimy' படத்தை இயக்கி புகழ்பெற்ற இயக்குனர் நிதிஷ் சகாதேவ் இயக்கி உள்ளார். ராவண கோட்டம் படத்தை தயாரித்த கண்ணன் ரவி இப்படத்தை தயாரித்துள்ளார்.

தம்பி ராமையா, இளவரசு, பிராதனா நாதன், ஜென்சன் திவாகர் உள்ளிட்ட பலரும் நடித்துள்ள இப்படத்திற்கு விஷ்ணு விஜய் இசையமைத்துள்ளார். ஏற்கனவே இப்படத்தின் டீசர் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில், அரசியல் கலந்த நகைச்சுவை படமாக உருவாகி உள்ள 'தலைவர் தம்பி தலைமையில்' படம் வருகிற 30-ந்தேதி உலகமெங்கும் வெளியாக உள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது.

# RAYA... யாஷ் பிறந்தநாளில் புதிய போஸ்டரை வெளியிட்ட டாக்ஸிக் படக்குழு



டாக்ஸிக் படத்தில், கியாரா அத்வானி, நயன்தாரா, உள்ளிட்ட பலர் நடிப்பில் பிரமாண்டமாக இந்த படம் உருவாகி வருகிறது.

டாக்ஸிக் படம் மார்ச் மாதம் 19-ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

கன்னட சினிமாவின் முன்னணி நடிகர் யாஷ். ராக்கி என்ற படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார். அதைத் தொடர்ந்து இவர் பல்வேறு படங்களில் நடித்தார். இவர் நடிப்பில் வெளியான கே.ஜி.எஃப். திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. இந்தப் படத்தில் நடித்து இந்திய சினிமாவை திரும்பி பார்க்க வைத்தார் யாஷ்.

இதைத் தொடர்ந்து நடிகர் யாஷ் "டாக்சிக்" என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை இயக்குனர் கீதா மோகன்தாஸ் இயக்குகிறார். இப்படம் டிரக் மாஃபியா உலகில் நடக்கும் கேங்ஸ்டர் டிராமாவாக இருக்கும் என படக்குழு தெரிவித்து இருந்தது.

இப்படத்தில், கியாரா அத்வானி, நயன்தாரா, உள்ளிட்ட பலர் நடிப்பில் பிரமாண்டமாக இந்த படம் உருவாகி வருகிறது. இப்படம் மார்ச் மாதம் 19-ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

கியாரா அத்வானி, நயன்தாரா, ருக்மணி வசந்த், ஹீமா குரேஷி, தாரா சுதரியா ஆகியோரின் கதாபாத்திர பெயர்களுடன் போஸ்டர்களை படக்குழு வெளியிட்டு அப்டேட் கொடுத்தது.

அந்த வகையில் நாயகன் யாஷ்-ன் கதாபாத்திர பெயர் குறித்த போஸ்டரை அவரின் பிறந்தநாளான இன்று படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த படத்தில் அவரது பெயர் ராயா என அறிவித்து புதிய போஸ்டரை வெளியிட்டுள்ளது. இதனை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர்.

# நான் அஜித்குமாரின் வெறித்தனமான ரசிகை - மனம் திறந்த ஸ்ரீலீலா





அஜித்தை சந்தித்த நடிகை ஸ்ரீலீலா அவருடன் செல்பி எடுத்து கொண்டார்.

பராசக்தி படத்தின் ப்ரோமோஷன் பணிகளில் ஸ்ரீலீலா ஈடுபட்டுள்ளார்

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக விளங்குபவர் அஜித் குமார். சினிமா தாண்டி கார் பந்தயத்திலும் கலக்கி வரும் நடிகர் அஜித் குமார், சமீபத்தில் ஸ்பெயினில் நடந்த 24 மணி நேர கார் பந்தயத்தில் 3-வது இடம் பிடித்தார். இதனை தொடர்ந்து இந்த ஆண்டில் (2026) அபுதாபியில் நடைபெறும் கார் பந்தய போட்டிகளிலும் அஜித்குமார் ரேசிங் அணி கலந்து கொள்கிறது. இதற்கு முன்னதாக மலேசியாவில் நடைபெற்று வரும் கார் பந்தய போட்டியில் அஜித்குமார் ரேசிங் அணி பங்கேற்றது. அப்போது அஜித்தை சந்தித்த நடிகை ஸ்ரீலீலா அவருடன் செல்பி எடுத்து கொண்டார்.

இந்நிலையில் பராசக்தி படத்தின் ப்ரோமோஷன் பணிகளில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலீலா நடிகர் அஜித்குமாரின் குறித்து பேசியுள்ளார்.

நேர்காணலில் பேசிய ஸ்ரீலீலா, "நான் அஜித்குமாரின் வெறித்தனமான ரசிகை. அவர் அற்புதமான மனிதர். எனக்கும் ரேஸிங்கில் ஆர்வம் உண்டு" என்று தெரிவித்தார்.

இதனிடையே, ஏகே 64 படத்தில் அஜித்துக்கு ஜோடியாக ஸ்ரீலீலா நடிக்கவுள்ளதாக தகவல் பரவி வருவது குறிப்பிடத்தக்கது.

# திருமணமான ஒரே மாதத்தில் 'குட் நியூஸ்' சொன்ன சமந்தா



'சுபம்' என்ற படத்தில் சிறப்பு தோற்றத்தில் தலைகாட்டியிருந்தார்.

தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக ஜொலித்த சமந்தா, பல்வேறு பிரச்சனைகளால் சினிமாவில் இருந்து ஒதுங்கினார். விமர்சனங்களையும், சர்ச்சைகளையும் கடந்து தற்போது மீண்டும் நடிக்க வந்துள்ளார். பட தயாரிப்பாளராகவும் மாறியுள்ளார். கடந்த மாதம் இயக்குனர் ராஜ் நிடிமொருவை, கோவையில் ரகசிய திருமணம் செய்துகொண்டார் சமந்தா. அதன்பிறகு தேனிலவு கொண்டாட்டங்கள் முடிந்தநிலையில் மீண்டும் படப்பிடிப்பில் பிசியாகி இருக்கிறார்.

இதற்கிடையில் ரசிகர்களுக்கு அவர் குட் நியூஸ் கொடுத்துள்ளார். அதாவது அவரது நடிப்பில் உருவாகியுள்ள 'மா இண்டி பங்காரம்' என்ற தெலுங்கு படத்தின் டிரெய்லர் விரைவில் வெளியாக போகிறது என்பது தானாம் அது. 3 ஆண்டுகள் கழித்து வெளிவரும் அவரது படத்தின் அறிவிப்பு ரசிகர்களை குஷிப்படுத்தி இருக்கிறது. அதேவேளை பலரும் 'நாங்க வேற குட் நியூஸ் எதிர்பார்த்தோமே...' என்றும் சமூக வலைத்தளங்களில் 'கமெண்ட்' அடித்து வருகிறார்கள்.

சமந்தா கடைசியாக 'குஷி' (2023) என்ற தெலுங்கு படத்தில் நடித்திருந்தார். அதன்பின்னர் 'சுபம்' என்ற படத்தில் சிறப்பு தோற்றத்தில் தலைகாட்டியிருந்தார்.

விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் பாண்டியன் ஸ்டோர்ஸ் 2 சீரியலில் மீனா என்கிற கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் நடிகை ஹேமா ராஜ்குமார். இவர் சின்னத்திரையில் முன்னணி நடிகைகளில் ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரையுலக பிரபலங்கள் தங்களது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிடும் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகும். அந்த நடிகை ஹேமா ராஜ்குமார் சமீபத்தில் துபாய்க்கு சென்று, அங்கு பாலைவனத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

# 20 ஆண்டுகளுக்குப் பிறகு... ரீ ரிலீஸ் ஆகிறது சீமானின் 'தம்பி'




சீமான் இயக்கத்தில், மாதவன் நடிப்பில் கடந்த 2006ல் 'தம்பி' படம் வெளியானது.

பிப்ரவரி மாதம் தம்பி படத்தை திரைக்கு வரவுள்ளதாக கூறப்படுகிறது.

சமீப காலமாக 90கள் மற்றும் 2000களின் ஹிட் படங்கள் பலவும் 4K தொழில்நுட்பத்தில் மீண்டும் ரீ ரிலீஸ் செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வரிசையில் ரீ ரிலீஸ் கலாச்சாரத்தில் சீமானின் 'தம்பி' படமும் இணைந்துள்ளது. சீமான் இயக்கத்தில், மாதவன் நடிப்பில் கடந்த 2006ல் வெளியான 'தம்பி' திரைப்படம் 20 வருடங்களுக்குப் பிறகு ரீ ரிலீஸ் செய்யப்பட உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

வரும் பிப்ரவரி மாதம் தம்பி படத்தை திரைக்கு கொண்டு வர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக படக்குழு தெரிவித்துள்ளது.

# ஜன நாயகன் சர்ச்சையிலிருந்து விலகி நிற்கும் விஜய்



ஹெச்.வினோத் இயக்கத்தில் விஜய் நடித்த படம் ஜன நாயகன். பூஜா ஹெக்டே, மமிதா பைஜூ ஆகியோர் இப்படத்தில் நடித்துள்ளனர். கேவிஎன் நிறுவனம் இப்படத்தை தயாரித்திருந்தது.

தவெக மூலம் அரசியல் பிரவேசம் செய்துள்ள விஜய் இது தனது கடைசி படம் என்று தெரிவித்துள்ளார்.

இப்படம் பொங்கலை முன்னிட்டு ஜனவரி 9-ம் தேதி திரையரங்குகளில் வெளியாக இருந்தது. ஆனால், இதுவரை படத்திற்கு தணிக்கை சான்றிதல் வழங்கப்படவில்லை.

எனவே தயாரிப்பு நிறுவனம் உயர்நீதிமன்றத்தை அணுகியது. படத்தில் மத உணர்வுகளை புண்படுத்தும் நோக்கில் காட்சிகள் உள்ளதாவும், அதை நீக்கிய பின்னரே சான்றிதழ் அளிப்போம் எனவும் சென்சார் வாரியம் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

இதனால் இதுவரை சான்றிதழ் கிடைக்காததால் நாளை படத்தை ரிலீஸ் செய்வது முடியாத காரியம் என்பதால் படத்தின் ரிலீசை ஒத்தி வைப்பதாக தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

இதனால் விஜய் ரசிகர்கள் ஒரு புறம் சோகத்தின் இருக்க மறுபுறம் விஜய்யின் படத்தை சென்சார் வாரியம் மூலம் மத்திய அரசு குறிவைத்து அரசியல் அழுத்தம் தருவதாக பலர் குற்றம்சாட்டி வருகின்றனர்.

அமலாக்கத்துறை, சிபிஐ போல சென்சார் வாரியாதையும் மிரட்டல் கருவியாக மோடி அரசு மாற்றி உள்ளதாக காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் இந்த விவகாரத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.

ஜனநாயன் சர்ச்சை குறித்து திரைபிரபலங்கள் குரல் எழுப்பினாலும், தயாரிப்பாளர் சங்கம், தென்னிந்திய நடிகர்கள் சங்கம், திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கம் உள்ளிட்ட எவையும் கண்டனம் தெரிவிக்கவில்லை.

இதற்கு ஒரு படி மேல் ஜனநாயன் ஹீரோ விஜய் இந்த விவகாரத்தில் எந்த கருத்தும் இதுவரை தெரிவிக்காதது விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது.

சென்சார் வாரியம் மத்திய அரசின் கீழ் வருவதால் அரசியலில் பாஜகவுக்கு Soft corner உடன் செயல்படும் விஜய், சினிமா விஷயத்திலும் எதற்கு வம்பு என இருக்கிறாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மலேசியாவில் நடந்த ஜன நாயகன் இசை வெளியீட்டு விழாவில், தனது படம் என்றாலே பிரச்சனை வரும் என விஜய் பேசியிருந்தார். அது மாநில அரசை குறிவைத்தே அவர் கூறியதாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால் தற்போதைய பிரச்சனை மத்திய வளையத்துக்குள் வருகிறது.

இதே இடத்தில் மாநிலத்தில் ஆளும் திமுக இருந்திருந்தால் விஜய் வேறுமாதிரி ஹேண்டில் செய்திருப்பாரோ என்று தோன்றுவது இயல்பே. ஆனாலும் சில தீவிர விஜய் ரசிகர்கள் cum ஆதரவாளர்கள் இந்த விஷயத்தில் பாஜகவும் - திமுகவும் கூட்டு என கருத்து சொல்லி வருகின்றனர்.

எதுவாக இருந்தாலும் விஜயின் மௌனம் இது மத்திய விவகாரம் என்பதாலேயே இருக்கும் என ஊகிக்கலாம். அண்மையில் கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் விசாரணைக்கு நேரில் ஆஜராக சிபிஐ, விஜய்க்கு சம்மன் அனுப்பியது.

சிபிஐ சம்மன், ஜனநாயகன் சென்சார் என இரண்டையும் வைத்து விஜய்க்கு 2026 சட்டமன்றத் தேர்தல் ஆதாயத்துக்கு விஜய்க்கு அழுத்தம் தரப்படுகிறதா என்றும் யோசிக்க வேண்டி உள்ளது. காங்கிரஸ் ஏற்கனவே இந்த Theory -ஐ முன்வைத்து வருகிறது. மேலும் பல Theoryகள் சமூக வலைத்தளங்களில் உலா வருகின்றன. அவை பின்வருமாறு,

Theory 1 : அதிமுக பாஜக கூட்டணிக்கு வர தவெகவுக்கு அழுத்தம் தரப்படுகிறது.

Theory 2: விஜய் தனித்தே போட்டியிடட்டும், ஆனால் பிரசாரத்தில் திமுகவை மட்டுமே டார்கெட் செய்ய வேண்டும், எந்த காரணம் கொண்டும் மத்திய பாஜகவை விமர்சிக்க கூடாது.

Theory 3: விஜயே அனுதாபத்துக்காக இப்படி எல்லாம் செய்கிறார்.

எதுவாக இருந்தாலும் விஜய் வாய் திறந்த பேசினால் தீர்வு கிடைக்கும் அல்லது குறைந்தபட்சம் ரசிகர்கள் cum ஆதரவாளர்களுக்கு தெளிவு பிறக்கும். எது எப்படியோ ஜனநாயகன் பொங்கலுக்கு சென்சார் வாரியம் பொங்க வைத்திவிட்டதே நிதர்சனம்.

பின் குறிப்பு: இதேபோல சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயனின் 'பராசக்தி' படத்திற்கும் இதுவரை தணிக்கை சான்றிதழ் கிடைக்கவில்லை. இப்படம் ஜனவரி 10 அன்று வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ள சூழலில் இதுவரை தணிக்கை சான்றிதழ் கிடைக்காததால் படத்திற்கான முன்பதிவை தொடங்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இந்தி திணிப்புக்கு எதிரான மொழிப்போரை அடிப்படையாக கொண்டு இப்படம் எடுக்கப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.



# 'அநியாயத்தின் உச்சகட்டம்'

ஜனநாயகன் படத்திற்கு ஆதரவாக சனம் ஷெட்டி தனது இன்ஸ்டாவில் வீடியோ வெளியிட்டுள்ளார்.

பொங்கல் அன்னைக்கு படம் வரலைன்னா என்ன... படம் வர்ற நாள் தான் நமக்கு பொங்கல்

விஜய் நடிப்பில் நாளை வெளியாக இருந்த படம் 'ஜன நாயகன்'. படத்திற்கு தணிக்கை சான்றிதழ் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும் சான்றிதழ் வழங்குவதற்கு சென்சாருக்கு உத்தரவிட வேண்டும் எனவும் ஜனநாயகன் படத்தயாரிப்பு நிறுவனம் சென்னை ஐகோர்ட்டில் மனுதாக்கல் செய்தது.

மனுவை விசாரித்த கோர்ட் வழக்கு விசாரணையை நாளைக்கு தள்ளி வைத்தது. இதையடுத்து தயாரிப்பு நிறுவனமான கே.வி.என்.நிறுவனம் படத்தின் ரிலீஸ் தேதியை தள்ளி வைப்பதாக அறிவித்தது. இதனால் ரசிகர்கள் மட்டுமின்றி திரைப்பிரபலங்களுக்கும் ஏமாற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில், ஜனநாயகன் படத்திற்கு ஆதரவாக நடிகை சனம் ஷெட்டி தனது இன்ஸ்டா பக்கத்தில் வீடியோ வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோவில், "அநியாயத்தின் உச்சகட்டம் இதுவெல்லாம். ஆனா நீங்க பண்ணுங்க... நீங்க பண்ண பண்ண அவங்க மேலே மேல போயிட்டே இருப்பாங்க... பொங்கல் அன்னைக்கு படம் வரலைன்னா என்ன... படம் வர்ற நாள் தான் நமக்கு பொங்கல்... சும்மாவே ஜன நாயகன் வேற லெவல் பிளாக்பஸ்டர் தான்... என்னமோ நினைச்சி தெரியாம நீங்க பண்ண விஷயத்தால சினிமா வரலாற்றிலேயே யாருமே மறக்க முடியாத யாருமே எதிர்பார்க்காத சம்பவம் நாங்க பண்ணிக்காட்டுவோம்... வைட் பண்ணுங்க... வைட் பண்ண நாங்க ரெடி அந்தளவுக்கு படம் ஓர்த்... நீ வா தல நாங்க இருக்கோம்..." என்று தெரிவித்தார்.

# கலைக்கல்லூரியில் டாக்டர் மாணவர்களா? - ஸ்ரீலீலா பேச்சால் விழுந்து விழுந்து சிரித்த SK

பராசக்தி டிரெய்லர் 53 மில்லியன் பார்வைகளை கடந்து சாதனை படைத்துள்ளது.



பராசக்தி படத்தின் ப்ரோமோஷன் பணிகளில் படக்குழு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள படம் பராசக்தி. சிவகார்த்திகேயனின் 25வது படமான இதில் ஜெயம் ரவி, அதர்வா, ஸ்ரீலீலா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இந்தி திணிப்புக்கு எதிரான மொழிப்போரை அடிப்படையாக கொண்டு எடுக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார்.

இப்படத்தின் டிரெய்லர் ஜனவரி 5 வெளியானது. இதுவரை இந்த டிரெய்லர் 53 மில்லியன் பார்வைகளை கடந்து சாதனை படைத்துள்ளது.

ஜனவரி 10 ஆம் தேதி பராசக்தி படம் வெளியாகவுள்ள நிலையில், படத்தின் ப்ரோமோஷன் பணிகளில் படக்குழு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

கேரளாவில் உள்ள ஒரு கலைக்கல்லூரியில் ப்ரோமோஷன் பணிகளில் பராசக்தி படக்குழு ஈடுபட்டது. அப்போது மாணவர்களிடம் பேசிய நடிகை ஸ்ரீலீலா இங்கு எத்தனை டாக்டர் உள்ளனர் என்று கேட்டுள்ளார். கலைக்கல்லூரியில் எத்தனை டாக்டர் உள்ளனர் என்று ஸ்ரீலீலா கேட்டதால் அரங்கில் சிரிப்பலை ஏற்பட்டது. சிவகார்த்திகேயனும் அதர்வாவும் இதனை கேட்டு விழுந்து விழுந்து சிரித்தனர்.



நடிகை சித்தி இத்னானி மிகவும் கவர்ச்சியாக இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார். அதில் அவர் மஞ்சள் நிற உடையில் எப்படி இருக்கிறார் என பாருங்க.

வெந்து தணிந்தது காடு படம் மூலமாக பிரபலம் ஆன சித்தி இத்னானி,அதன் பிறகு பிரபல நடிகையாக மாறினார். தற்போது தெலுங்கிலும் அவர் கவனம் செலுத்தி வருகிறார்.

# எவ்வளவு கேவலமான எண்ணம்



விஜய் நடிப்பில் நாளை வெளியாக இருந்த படம் 'ஜன நாயகன்'. படத்திற்கு தணிக்கை சான்றிதழ் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும் சான்றிதழ் வழங்குவதற்கு சென்சாருக்கு உத்தரவிட வேண்டும் எனவும் ஜனநாயகன் படத்தயாரிப்பு நிறுவனம் சென்னை ஐகோர்ட்டில் மனுதாக்கல் செய்தது.

மனுவை விசாரித்த கோர்ட் வழக்கு விசாரணையை நாளைக்கு தள்ளி வைத்தது. இதையடுத்து தயாரிப்பு நிறுவனமான கே.வி.என்.நிறுவனம் படத்தின் ரிலீஸ் தேதியை தள்ளி வைப்பதாக அறிவித்தது. இதனால் ரசிகர்கள் மட்டுமின்றி திரைப்பிரபலங்களுக்கும் ஏமாற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில், ஜனநாயகனுக்கு ஆதரவாக திரைத்துறையினர், அரசியல்வாதிகள் பதிவு வெளியிட்டு வருகின்றனர். அந்த வகையில் இயக்குனர் அமீர் ஜனநாயகனுக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளார்.

அந்த பதிவில் அவர் கூறியிருப்பதாவது:-

ஒரு சினிமாவை ரிலீஸ் பண்ணவிடாமல் தடுத்துட்டா அவங்கள தன் வழிக்கு கொண்டு வரலாம்ன்ற எண்ணம் எவ்வளவு கேவலமானது.

தமிழ்நாட்டில் அதிகாரத்தை யார் கையில் கொடுக்க வேண்டும் என்று மக்கள் தான் முடிவு செய்வாங்க அயோக்கிய அரசியல்வாதிகள் அல்ல.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.






## கனவிலும் நீ தானே

கண்ணாடியில் முகம் பார்த்து
காதல் வசம் கொண்டாயோ...

தன்னிச்சையாக என்னை
பார்த்து பரவசமானாயோ...
மலர்ந்த உன் அழகு
மயக்குதே என் மனசை
வாடி இருந்த என் மனசு
வம்புக்கு இழுக்குதே...

கொண்டையிலே மல்லி பூ
சுண்டி இழுக்குதே...
குடிசை வீட்டுக்குள்ளே
குடும்பம் நடத்த தவிக்குதே...

பொண்ணுக்குள் பெண்மை
தேனா இனிக்குதே சிந்திய
தேன் முத்தாய் வளருதே...

நீ கொடுத்த உயிர்தான்
இந்த உலகை
ஆளுதே...
நீ இன்றி
இவ்வுலகம்
வாழாதே....!!



**பொன்.கருணா**
நவி மும்பை

---

புல்வெளியில் பனித்துளிகள்
அழகை
ரசிக்காத
பசுவுக்கு
அடங்கா பசி
அள்ளித்தின்றது.



**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி


---



உன்னிடம் காதலை சொல்லி
நீ மறுத்து இருந்தால் கூட
இத்தனை வலித்திருக்காது
ஏனோ பல வருடம் கழித்தும்
வலிக்கிறது என்
மறைக்கப்பட்ட
பெருங்காதலால்!

**லி.நௌஷாத் கான்**

---



## கனவிலே வந்த காந்தி!

கனவிலே.. கனவிலே..
காந்தி வந்தாயே...
காதிலே.. அழுதபடி
ஏதோ சொன்னாயே.!

மனதிலே.. மனதிலே..
காந்தி வந்தாயே..
மறுபடியும்..மறுபடியும்
ஏதோ சொன்னாயே.!

அமைதியை.. அமைதியை..
தேடு என்றாயே.!
தமதுயிர் தந்தும் நீ..
தவித்து நின்றாயே.!

மதுவினை..மதுவினை
ஒழிக்க இயலாது..
மனதிலே கவலையில்
சிலையும் ஆனாயே..!

பொய்யிலே பணத்திலே
மதியினை இழந்தே..
மெய்யினை தேடியே..
மீண்டும் வந்தாயே.!

கற்பனை.. கற்பனை..
காந்தியின் கனவோ..
கற்சிலை யானது..
காந்தியின் கனவோ?

நேரவழி நடப்பவர்..
யாரும் இல்லையே..
சத்திய சோதனை
முடிய வில்லையோ..?

கைத்தறி.. கதருடை..
இராட்டையும் இன்றி
கைத்தடி ஊன்றியே..
காந்தி வந்தாயே.!

போர்களின் நடுவிலே
யாழ் இசை எங்கே.?
புதியதோர் உலகிலே
காந்தியம் எங்கே.?

தேடியே..தேடியே..
தேம்பி அழுதாயே..
தேவனே.! காந்தியே..
ஏதோ சொன்னாயே.!

**வே.கல்யாண்குமார்.**

---



## காதலே !

கை கூடியவர்களுக்கு
உன் அருமை புரியவில்லை
கை கூடாதவர்களுக்கு
உன் பெருமை மறக்கவில்லை
--------------------
திரைப்படத்தில் கை
தட்டுவோம் சொந்த வீட்டில்
கை முறிப்போம்
--------------------
அன்றும் இன்றும் என்றும்
கவிஞர்களின் பாடுபொருள்
--------------------
நிலவும் நீயும் ஒன்று
தூரத்தில் மிக அழகு
--------------------
ஆண்களுக்கு மிகவும்
பிடிக்கும் சகோதரி ,
மகள் வயப்பட்டால்
பிடிக்கவே பிடிக்காது .
--------------------
சமந்தப்பட்டவர்களுக்கு
மகிழ்ச்சி
சமந்தமில்லாதவர்களுக்கு
இகழ்ச்சி
--------------------
கண் இல்லை உண்மை
கண் இல்லாதவர்களும்
வயப்படுகிறார்கள்
--------------------
வென்றால் வாழ்க்கை
தோற்றால் சுவடு

**கவிஞர் இரா .இரவி**

---

## குறள்வெண் செந்துறை!பந்து!

கோள வடிவே பந்தாகும்
கூடை ஆட்டம் ஆடிடலாம்
நாளும் மகிழ்ந்தேஇன்புறலாம்
நல்ல வலிமைபெற்றிடலாம்!
துள்ளும் பந்தும் உண்டப்பா
துன்பம் நீக்கும் பந்தப்பா
தள்ளும் பந்தும் கண்டிடுமே
தாவிப் பிடிக்க
மகிழ்ந்திடுமே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

---

## பிறமொழி கலந்து பேசக் கூசு!

இயல் இசை நாடகம் முத்தமிழ்
முத்திரை தமிழ் !
ஈடு இணையற்ற உயர்தனிச்
செம்மொழி தமிழ் !

திருக்குறளால் பெருமை
பெற்ற மொழி தமிழ் !
திருவள்ளுவரால் உலகம்
அறிந்த மொழி தமிழ் !

எண்ணிலடங்காச்
சொற்களின் சுரங்கம் தமிழ் !
எண்ணிட இனித்திடும் மொழி
நம் தமிழ் !

உலகின் முதல் மொழி தமிழ்
உணர்ந்திடுக ! உலகில்
பன்னாட்டு மொழி தமிழ்
அறிந்திடுக !

உலகம் முழுவதும் ஒலிக்கும்
நம் தமிழ் ! உலக நாடுகளை
வியப்பில் ஆழ்த்தும் தமிழ் !

இலக்கியங்களின் இமயம் நம்
தமிழ் ! இலக்கணங்களின்
இருப்பிடம் நம் தமிழ் !
எழுத்திலும் பேச்சிலும்
நிலைத்த ஒரே செம்மொழி !
இனிமையான செம்மொழி
சிதைப்பதை நிறுத்துக !

தமிழா தமிழை,
தமிழாகப் பேசு! தமிழா
தமிழை, தமிழாக எழுது !

ஒரு குடம் பாலுக்கு
ஒரு துளி நஞ்சு ! ஒப்பற்ற
தமிழுக்கு, பிறமொழி நஞ்சு !

என்ன வளம் இல்லை தமிழ்
மொழியில் ! ஏன் கையை ஏந்த
வேண்டும் பிறமொழியில் !

ஆங்கிலச் சொற்கள்
கலப்பது மடமை ! ஆங்கிலக்
கலப்பின்றி பேசுவது கடமை !

தமிழில் பிறமொழி கலந்து
பேசக் கூசு
! தமிழில்
பிறமொழி
கலவாமல் பேசு !



**கவிஞர்**
**இரா.இரவி!**

---

1. நீர்:
கையிலிருக்கும் தண்ணீர்
பாட்டிலை விற்று வீட்டில்
வந்து பானைத்தண்ணீர்
அருந்தினாள்!!!.

2. நகை:
வைரத்தோடு வேண்டும்–
என்றேன் தக்காளியோடு
வந்து நின்றார்
என்னவர்!!!!.

3. ஊர்:
பல பாரினைக் கடந்து
தன் ஊருக்கு சென்றனர்
நூறு நாள் வேலையாட்கள்!!!!.

4.கைப்பேசி:
பேசுவதற்காக வாங்கி தர–
இன்று நானும் கைப்பேசியும்
கணவன் – மனைவியாக!!!!

5. குடை:
மழைக்காக குடை எடுத்துச்
சென்றேன்– "குடைக்குள்
மலை" என்றான்.

6. பொட்டு:
வீடெல்லாம் தேடி
கிடைக்காமல் வெறும்
நெற்றியோடு காபி
கொடுத்தேன்– தன் கையில்
வைத்துள்ள பொட்டினை
இட்டுவிட்டார்.

7. புடவை:
விதவிதமாக கட்டுகிறாயே–
உன் அலமாரி நிறைய
உள்ளதா?– எனக்கேட்க– வீடு
நிறைய உள்ளது என்றாள்!!!!.



8. முத்தம்:
சூடாக முத்தம் கொடுக்க
வேண்டும் என எண்ணி–
சூடான காபியை வாயில்
ஊற்றிக்கொண்டான்!!!!

9. மூதேவி:
அனைவரிடமும் அவளை
மூதேவி என்றான்– அவள்
அவன் கையில் ₹20000 தன்
சேமிப்பைக் கொடுத்தாள்!!!.

10.உரிமை:
ஒருமையில் அழைக்காதே–
என்றான். உடனே !" சரிடா"
என்றாள்!!!!!

11.பணம்:
சுனாமி சுருட்டியது அவரை
அவர் சுருட்டினார் –
பணத்தை!!!!!


12.நோக்கம்:
அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்
அவர்கள் தந்தைகளும் –
நோக்கினர்!!!



13. கொண்டை:
சிறுக்கொண்டை–
மருமகள்
பெரிய
கொண்டை–
மாமியார் என சிரித்துக்
கொண்டே தன் டோபாவினை
சரிசெய்தாள்!!!.

**பானு**
பாண்டிச்சேரி

---



## மூன்றெழுத்தில் அப்பா

" குழந்தைகளிடம் விளையாட
நேரமில்லை அப்பா .... "

அப்பா விளையாட வரும்
போது குழந்தைகள்
உறக்கத்தில் ..."
அப்பாவின் வேலை பளு
பிஞ்சுகளுக்கு தெரிவதில்லை
புரிவதில்லை ..."

அப்பாவின் ஏக்கம் எல்லாம்
கனவில் மட்டும் தான்
என்பது குழந்தைகளுக்கு
புரிவதில்லை ..."

அம்மாவின் தாலாட்டும்
அனைப்பும் பாசமும்
நுகரும் பிள்ளைகள் .... "

அப்பாவின் அடிமனம்
வெளிமனம் ஆசை ஆனந்தம்
எல்லாம் பிள்ளைகளே ..."

பிள்ளையின் கல்வி வீட்டின்
சேமிப்பு மனைவியின் தேவை
எதிர்காலம் ....."

ஓடி ஓடி உழைத்து பணம்
சேர்த்து ஒவ்வொரு
தேவையும் பூர்த்தி
ஆகும் வேளையில் ...."

அப்பா பெறும் மன நிறைவு
வெளியில் தெரியாத
ரகசியம் ...."

இருந்தும் தூங்கும் வேளையில்
தலையை வருடி உச்சி
முகர்ந்து
குழந்தைகளை
ரசிக்கும்
அப்பா அந்தக்
குடும்பத்தின்
வரமேமணமே...."




**ஆர். சீதாராமன்**
சீர்காழி

---

## நூல் விமர்சனம்

நம்பிக்கையுடன் ..பா .விஜய் .
நூல் ஆசிரியர் வித்தகக்
கவிஞர் பா .விஜய் .
நூல் விமர்சனம்
கவிஞர் இரா .இரவி .
கற்பகம் புத்தகாலயம்
4/2,சுந்தரம் தெரு ,தியாகராய
நகர் ,சென்னை .600017.
விலை ரூபாய் 100.




இனிய நண்பர் வித்தகக் கவிஞர் பா .விஜய் .அவர்கள் ,144 தடை உத்தரவு கேள்விப் பட்டு இருக்கிறோம் .இந்த நூலில் 144 பக்கங்களில் மடை திறந்த வெள்ளமாக வாழ்வியல் வெற்றி மந்திரங்களை வைர வரிகளால் செதுக்கி உள்ளார் . ஒவ்வொரு பூக்களின் பாடலுக்காக தேசிய விருது பெற்றவர் .மதுரை வரும்போதெல்லாம் என்னை சந்திக்கும் இனியவர் .இந்த நூலை எனக்கு பரிந்துரை செய்தவர் தமிழ்த்தேனீ முனைவர் இரா .மோகன் அவர்கள் .இன்று காலையில்தான் சொன்னார்கள் உடன் சென்று வாங்கி வந்து படித்தேன் வியந்தேன் .இவ்வளவு நாள் படிக்காமல் இருந்து விட்டோமே என்று வருந்தினேன் . வித்தகக் கவிஞர் பா .விஜய் திரைப்படப் பாடல் ஆசிரியர் என்பதையும் தாண்டி மிகச்சிறந்த மனிதர் .நல்ல சிந்தனையாளர் .புதிய தலைமுறை இதழில் தொடர் எழுதி வரும் எழுத்தாளர் சின்னச் சின்ன வரிகளின் மூலம் சிந்தையை செதுக்கும் விதமாக வடித்துள்ளார் . இளைஞர்கள் அவசியம் படிக்க வேண்டிய அற்புத நூல் .சிந்தைனையாளர் வெ.இறையன்பு சொல்வார்கள் " நாம் புரட்டுவது புத்தகம் அல்ல நம்மை புரட்டுவதே புத்தகம் ."அந்த வகை நூல்தான் இது .மிக வித்தியாசமாக உள்ளது .நாட்க்குறிப்பு போன்ற வடிவமைப்பு .ஒரே கல்லில் மூன்று மாங்காய் எனபது போல ஒரே நூலில் வரலாற்று பொது அறிவு விடைகள் ,சிந்தனை மிகுந்த வைர வரிகள் ,அறிஞர்களின் பொன்மொழிகள் மூன்றும் உள்ளது .படித்து விட்டு வைத்து விடும் சராசரி நூல் அல்ல இது .பத்திரமாக வைத்து இருந்து மனதில் சோர்வு வரும்போது படித்தால் சாதனை புரிய உதவும் சாதனை நூல் .

நூலில் உள்ள அனைத்தும் பிடித்து இருந்தாலும் பதச் சோறாக சில மட்டும் உங்கள் பார்வைக்கு .அல்ல அல்ல உங்கள் சாதனைக்கு .

கிழமைகள் பற்றி திங்கள், செவ்வாய் ,புதன் ,வியாழன், வெள்ளி ,சனி ,ஞாயிறு என்றுதான் எல்லோருக்கும் தெரியும் .ஆனால் இவரது விளக்கம் பாருங்கள் மிக நுட்பம் .
திங்கள் --- திட்டம்
செவ்வாய்---- செயல்
புதன் --- புத்துணர்ச்சி
வியாழன் ---விடா முயற்சி
வெள்ளி ---- வெற்றி
சனி ---- சாதனை
ஞாயிறு ---சிந்தனை .

கிழமைகளின் முதல் எழுத்தை வைத்து தன்முன்னேற்றச் சொற்களை விதைத்து வாழ்வில் நம்பிக்கை விதைத்து உள்ளார் .பாராட்டுக்கள் .

பஞ்சாங்கம் பார்த்து இது ராகு காலம் ,எம கண்டம் என்று சொல்லி பொன்னான நேரத்தை வீணடிக்கும் மூட நம்பிக்கைகளை தகர்க்கும் விதமாக உள்ள வைர வரிகள் இதோ .
நல்ல நேரம் ---24 மணி நேரமும்
ராகு காலம் -- உழைக்கத நேரம்
கேட்ட நேரம் -- தீயன தோன்றும் நேரம் கேள்வியின் மூலம் வாசகனை சிந்திக்க வைக்கிறார் .

நகங்கள் கூட நாளுக்கு 0.01. அங்குலம் வளர்கிறது நாம் ? நாம் உடலால் வளரும் வளர்ச்சி வளர்ச்சி அல்ல. உள்ளத்தால் வளரும் வளர்ச்சியை குறிப்பிடுகிறார் .இந்த கேள்வியை உலகில் பிறந்தா ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி . அருவியின் வீழ்ச்சி நதியின் எழுச்சியாகிறது ! வெறிகொள் ! வெல்வதற்கு! திட்டமிடு திட்டமிடா உழைப்பு பாலைவனத்தில் ஆழ்குழாய்த்திட்டம் !

திட்டமிடுதலின் அவசியத்தை நன்கு உணர்த்தி உள்ளார் . நம்பிக்கை வரிகளின் மூலம் படிக்கும் வாசகரின் நரம்பில் முறுக்கு ஏற்றி ,நாடியை துடிக்க வைத்து ,செல்களை வெற்றியை நோக்கிய செயல்களில் ஈடுபடும் வண்ணம் எழுதி உள்ளார் .தமிழ்மொழி எழுத்துக்கள் வலிமை மிக்கது என்பதை உணர்த்தி உள்ளார் .

விமர்சனத்தில் எதை எழுதுவது எதை விடுவது என்று முடிவு எடுக்க முடியாதபடி நூலில் உள்ள அனைத்தும் அருமை .பெருமை .

மகிழ்ச்சியாய்ச் சிரி ! கவலைகளைப் பிய்த்துக் காற்று மண்டலத்திற்கு அப்பால் வீசு ! நீ அடுத்தவர் மீது கொண்ட நம்பிக்கை என்பது காசோலை நீ உன் மீது கொண்ட நம்பிக்கை என்பதுஏ.டி .எம் .அட்டை! சரியான விமர்சனத்தை இதய மேடையில் ஏற்று ! தவறான விமர்சனத்தைக் குப்பைக் கூடையில் கொட்டு! தவறான விமர்சனத்தை பொருட்படுத்தி காலத்தை ,சக்தியை விரயம் செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தி உள்ளார் .

ஆடுகளம் அடிச்சுவடு படாமல் இருந்தால் புல் முளைத்து விடும் ! மனிதன் உழைக்காமல் இருந்தால் தவறு என்பதை உணர்த்துகின்றார் . தமிழர்க்கு வீரம் அழகு கோழையாய் வாழ்வது இழுக்கு .s பேடிகள் வாழ்வதில்லை ! உயிரோடு சமாதியாகிறார்கள் ! லட்சியவாதிகள் முடிவதில்லை ! சரித்திரங்களாய் வாழ்கிறார்கள்.! கைக்குட்டைகள் கண்டு பிடிக்கப்பட்டது கண்ணீர் துடைக்க அல்ல! வேர்வை துடைக்க ! கவலைகொள்ளாதீர் !என்று சொல்லி உழைப்பின் மேன்மையை மென்மையாக விளக்கி உள்ளார் .

கர்வம் வை கிராம் கணக்கில் ! நம்பிக்கை வை கிலோ கணக்கில் ! ஒவ்வொரு விடியலையும் நம்பிக்கையுடன் எதிர் கொள் ! ஒவ்வொரு இரவிலும் நம்பிக்கையுடன் தூங்கப் போ !

விழி ! சோர்வைக் கிழி ! உன்னைப் பிழி ! தெரியும் ஒளி ! பாட்டுகோட்டையான பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் போல தூங்காதே என்ற கருத்தை எழுதி உள்ளார் .திருக்குறள், சித்தர் பாடல்கள் உள்ளிட்ட தமிழ் இலக்கியங்கள் பல படித்து அறிந்து ஆராந்து இந்த நூல் எழுதி உள்ளார் . தந்தை பெரியார் வழியில் சிந்தித்து பகுத்தறிவு விதைக்கும் கருதும் உள்ளது . இறந்தவன் கைரேகைக்கும் ஆயுள் காலம் சொல்லும் ஜோசியம் ! புகழ் பெற்று விளங்க வீட்டை இடித்து வாஸ்து வைக்காதே ! வியர்வை வழித்து முயற்சி செய்! ஒரு சிலர் மற்றவரை குறை சொல்வதையே வேலையாக வைத்து இருப்பார்கள். அவர்களுக்கு அறிவுரை சொல்லும் விதமாக உள்ள வைர வரிகள் இதோ! எதிலும் குறை சொல்லாதே ! சொன்னால் அதுதான் நீ சரி செய்ய வேண்டிய முதல் குறை ! மொத்தத்தில் இந்த நூலில் குறையே சொல்ல முடியாத அளவிற்கு எல்லாம் நிறையே .நூல் ஆசிரியர் வித்தகக் கவிஞர் பா .விஜய். அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகள் .வாழ்த்துகள் .

---



அந்த கள்ளச்சிரிப்பில்
வெல்லமாய்
கரைந்து போனேனடி!

சூடு பட்டவன் ஒருபோதும்
கனவுகளுக்கு
ஆசைப்படுவதில்லை!

அந்த ஆழப் பார்வைக்கு
அப்படி என்ன தான் அர்த்தம்?!

நீயில்லா இரவொன்றில்
நிம்மதியின்றி தவிக்கிறேன்–
அந்த குளிர் இரவும் களிறின்
மதத்தை சிந்தையில்
நீருட்டுதே!

வாழ்க்கை
வாழ்வதற்கே என
புரிந்தது தொலைத்த
பிறகு!

நீ பூச்சூடிதான் தேவதையென
நிரூபிக்க வேண்டிய
அவசியமில்லையடி!
அளவில்லாத சந்தோசமே
கனப்பொழுதில் வலித்திடும்
மனம் குளிர கெஞ்சலோடு
கேட்கிறேன் கொஞ்சம்
அழுத்தமாய் கட்டிப்பிடி!

அளவில்லாத அன்போடு
அகங்காரம் விட்டு
மனதார சொல்கிறேன்
என் பலமும் நீ தான்
என் பலவீனமும் நீ தான்!

பொய் பேசும் உன் தேன்
இதழ்களை விட மை பூசும்
உன் காந்த கண்கள் தான்
பேரழகு!



**லி.நௌஷாத் கான்**






## கனவே கலையாதே.

கனவு கண்டேன்...
அவன் எனக்கு மாலை
இடுவது போல்!
கனவு கண்டேன்...
அவன் என் மேல் மலர்
தூவுவது போல்!
கனவு கண்டேன்...
அவன் என்னைத் தூக்கிச்
செல்வது போல்!
கனவு கண்டேன்...
அவன் எனக்குத் தாலி
கட்டுவது போல்!
இவை அனைத்தும் என்
திருமணக் கோலமல்ல...
நான் இறந்தபின், என்
காதலன் நிகழ்த்திய
என் இறுதி யாத்திரை என்று
உணர்ந்தபோது –
கனவுக்குள்ளேயே ஒருமுறை
இறந்து போனேன்!
கண் விழித்துப் பார்த்தேன்...
நிஜத்தில் நான்
இறக்கவில்லை! ஆனால், என்
காதல் மட்டும் அங்கே...
மலர் தூவிய படுக்கையில்
சடலமாய்க் கிடந்தது!
கண்முன்னே காதல்
இறந்ததைக் கண்டு
உயிருடன் இருந்தும்
பிணமானேன் நான்! கனவு
கசப்பாய் இருந்தாலும் அது
கலையாமல் இருக்கட்டும்.
இறுதி யாத்திரை கூட
என்னவன் கூடவே
இருந்ததால் கனவு



கலையாமல்
இருக்கட்டும்.
இனியவை
என்னை விலகாமல்
இருக்கட்டும்.

**ஜானகி** துறையூர்

## முடியுமா...முடியுமா



பார்க்கின்ற வின்னை அளக்க முடியுமா...
சுவாசிக்கின்ற காற்றை பார்க்க முடியுமா...
அள்ளுகின்ற தண்ணியை கில்ல
முடியுமா... உதிர்த்த வார்த்தையை சேமிக்க
முடியுமா... கால்களை தூக்காமல் நடக்க
முடியுமா... பயிர்ச்சி இல்லாமல் எதையும்
வெல்ல முடியுமா...
பெண்ணே இல்லாமல் யாரும் பிறக்க



முடியுமா...
உணவு உண்ணால் உயிர்
வாழ முடியுமா...
முடியும் என்பதே
முடியுமா....!!

**பொன்.கருணா,**
நவி மும்பை



## வீணையின் நாதம்!

வீணையின் நாதம் கேட்பதற்கு இனிமை
வாசிப்பவரின் விரல் செய்திடும் விந்தை!

மீட்டாத போது இசை வருவதில்லை வீணையை
மீட்டும் போது தான் இசையைப் பிரசவிக்கும்!

தோற்றத்தில் அழகும் கம்பீரமும் உண்டு
தந்திக் கம்பிகளில் அடங்கி உள்ளன இசைகள் !



இசைக் கச்சேரிகளின் மகுடம் வீணை
இனிய இசையால் ஈர்த்திடும் உள்ளங்களை !

பயிற்சி இருந்தால் பரவசமாக இசைக்கலாம்
பார்த்தும் கேட்டும் ரசித்து மகிழலாம்!

கண்களை மூடி இசையினைக் கேட்டால்
கனவு உலகத்திற்கும் சென்று மகிழலாம்!

எந்தமொழிப் பாடலையும் இசைக்கலாம்
எந்நாட்டவரும் ரசித்து மகிழலாம்!

மனைவி செல்லம்மாளை வீணையடி நீ எனக்கு என்று
மகாகவி பாரதியார் கவிதையில் எழுதி மகிழ்ந்தார் !

வீணையை விரும்பாதவர் உலகில் இல்லை
வீணை வாசிப்பும் கவலையை நீக்கும்!

வீணையின் நாதத்தை ரசித்துக் கேட்டால்
வீணான கவலைகள் காணாமல் போகும்!

இரண்டு எழுத்து அதிசயம் வீணை
இசையினை அருவியாகக் கொட்டிடும் குற்றாலம் !

கூட்டிசையாகவும் கேட்டு மகிழலாம்
தனி இசையாகவும் ரசித்து மகிழலாம்!

தமிழர்களின் ஆதி இசைக்கருவி வீணை
தமிழர்களின் 'யாழ்' கருவிலிருந்து பிறந்திட்டது வீணை!

எந்த வயதினரையும் ஈர்த்திடும் வீணையின் நாதம்
எல்லோரும் ரசித்து மகிழ்ந்திடும் வீணையின் நாதம் !

ஈடுபாட்டோடு இசைத்தால் இனிக்கும் இசை
ஈடுபாட்டோடு ரசித்தால் இனிக்கும் இசை !
வீணையின் நாதம் விரும்பாதோர் உலகில் இல்லை
வீணையின் நாதம் வாலிபம் காக்கும் பொய்யில்லை!

**கவிஞர் இரா. இரவி**



## விழிகளில் சந்திப்போம்!

ஒருமுறை அல்ல...
ஒவ்வொரு முறையும்
நீ திரும்பிப் பார்ப்பாய்
என்றே,
சாலையோரத்துச் செடியாய்–
உன் பார்வைக்காகக்
காத்திருக்கிறேன்!
நீ பார்க்காமல் செல்வதில்
வருத்தம் என்று
ஏதுமில்லை...
அது ஒரு அழகான,
ஏமாற்றமான எதிர்பார்ப்பு!
இருந்தும்... நீ
பார்த்திருந்தால்
கொஞ்சம் மகிழ்ந்திருப்பேன்!
ஏனெனில்... உன் ஒருமுறை
வரவைத் தவறவிட்டால்,
அடுத்த முறைக்காக நான்
காத்திருக்கும் கணங்களில்–
என் கால்களும் விழிகளும்
வேலை நிறுத்தம்
செய்கின்றன!
பாதிக்கப்படுகிறது என்
இயல்பு வாழ்க்கை!
சற்றே கருணை கொண்டு



பார்த்துப்
போ...
பத்திரமாய்ப்
போ...
மீண்டும் நம்
விழிகளில்
சந்திப்போம்!

**ஜனனி அந்தோணி ராஜ்,**
திருச்சிராப்பள்ளி.



போர்வையை
உதறினேன்
உருண்டோடியது
கனவுகள்.

**ஜயந்தி சிவக்குமார்.**
திருச்சி

## நாவின் அதிகாரம்!

எல்லா சூழ்நிலைகளிலும்
வெற்றியா தோல்வி என
நிர்ணயிப்பது உன் வாயின்
வார்த்தை! உன் வார்த்தை
தரித்திரனாக ஆக்க
முடியும் செழிப்புக்குள்ளும்
நடத்த முடியும்! உதடுகளுக்கு
ஏற்ப வறுமை வரும்!
வீண் பேச்சு ஒருவனை
ஏழையாகவும் நல்ல பேச்சு
செல்வந்திரனாகவும் ஆக்கும்!
திட்டமிட்ட வார்த்தையை
நன்மை தரும் வார்த்தை பிறர்
மனதில் விதைக்க வேண்டும்!
இனிய வார்த்தையை
பேசினால் எல்லாம் கை
கூடும்! சமாதானத்துடன்
பேசும் நாவு ஜீவனை
கொடுக்கிற கனி தரும் மரம்!
மென்மையான வார்த்தை
ஜீவனையும் சுகத்தையும்
உண்டு பன்னும்!
வார்த்தையால் சில
குடும்பங்கள் சிதறிவிடும்
சமாதானம் சமாதானம் என
கூறவேண்டும்! வாயில்
இருந்து வரும் வார்த்தை
மனிதனை தீட்டு படுத்தும்!
மதுரமானதாக
இனிமையானதாக பேச
வேண்டும்! வாயில் உள்ள
வல்லமையை அறிய
வேண்டும்! சாவுறதும்
பிழைக்கிறதும் நாவில்தான்
இருக்கு! நெல்லை
கொட்டினால் அள்ளி
விடலாம் சொல்லை
கொட்டினால் அள்ளி
விட முடியாது! நல்ல



வார்த்தையை
பேசுவோம்!
நலமுடன்
வாழ்வோம்!

**பெ.திருமுகம்**
மணமேல்குடி

## ப - திருப்பம்

நீ உண்மையில் யார்
எதற்காக இந்த ஜனனம்?
யாருக்காக நீ வாழ்கிறாய்?
பின்னால் பயன்பட எண்ணி
உடனே குவித்திட
துடிக்கிறாய்
வாலிப காமம் அழையா
விருந்தாளி எதுவானாலும்
மனம் லயித்து செய்வீர்
பிறரின் ஏகோபித்த
வாழ்த்தும் பாராட்டும்



திறம்பட
நிர்வகித்ததை
உறுதி செய்து
விடும்

**பி. பழனி**
சென்னை.




விரல் நுனியில்
அப்பிக் கொள்ளும்
ஈரம்.. ஞாபகப்படுத்திக்
கொண்டே இருக்கிறது..
ஏதோ ஒரு பிரிய
முத்தத்தை.

வீதியில் கால் பதிக்கும்போது
பூமி வாய் பிளக்கிறது
உன்னழகில் மயங்கி.
பிளவுகளைக் கடக்கும்போது
எச்சரிக்கையாய் இரு,
விழுங்கி விடக் கூடும்



பேராசை
கொண்ட
இந்த
பொல்லாத
தரை.

**ரிஷபன்**



## புத்தாண்டு பிறந்தாச்சு

தங்கம் விலை
தகிதகிக்குது வெள்ளி
விலை வின்னை நோக்கி
விலைவாசிவேகம் எடுக்குது
தேர்தல் நெருங்கி வருது
விலையில்லா பொருள்கள்
வீடுதேடி வரப்போகுது



பணமழை
பெய்ய
போகுது
மக்கள்
கவலை
எல்லாம்
நீங்கபோகுது
இப்புத்தாண்டில்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

பெரும் மமதைக்காரனென்று
சொல். பித்தலாட்டக்காரன்
என்று சொல்.

சிற்றின்பப்பிரியன் என்று
சொல். சின்னபுத்திக்காரன்
என்று சொல்.

சீதாராமன் இல்லை என்று
சொல். சிறுவயதுப் பிழைகள்
எல்லாம் சொள்



மதுபுகைக்கு
அடிமை
என்று சொல்.
மனிதனே
இல்லை என்று
சொல்.

என்னை என்ன
வேண்டுமானாலும் சொல்.

என் கவிதைகளும் என்
போல்தானா? சொல்,

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை

## ஏன் இவ்வளவு சீக்கிரம்

ஒரு கோப்பைத் தேநீர்
ஏன் இவ்வளவு சீக்கிரம்
தீர்ந்து போகிறது

மாலைப்பொழுது
ஏன் இவ்வளவு சீக்கிரம்
இருள் சூழ்ந்து விடுகிறது

நல்ல பாடல்
ஏன் இவ்வளவு சீக்கிரம்
ஒலித்து முடித்து விடுகிறது

விடைபெறும் நேரம்
ஏன் இவ்வளவு துரிதமாக
வந்து எச்சரிக்கிறது

நம் அடுத்த
சந்திப்புக்கான தருணம்
ஏன் அவ்வளவு சீக்கிரம்
வந்து தொலைக்க
மாட்டேன் என்கிறது



கேள்விக்குறியோ
ஆச்சரியக்குறியோ
நீ
போட்டுக்கொள்.

**கீர்த்தி**

## ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா!

நேரிசை வெண்பா!

உறுதியை நேர்மையை
உண்மையாய்க்கொண்ட

அறியாமை நீக்கியே
ஆன்மச்...சிறப்பை

அடைய வலிமையான
அன்பான தோளை

உடையவனே
வாவா உணர்ந்து!

ஞானத்தெளிவினை
நல்லவாறு கொண்டேதான்



கானக்குயிலாகப்
பாடியே...
தேனாய்ச்

சுவைத்திடுவீர்
நல்லொளி
சேரவே நாளும்

உவகையடைந்திடுவீர்
ஓர்ந்து!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



கனவினிலே கற்பனை
ஒத்திகை வண்ணம்
தோய்த்து வானவில்
நிறம் பூட்டி தூரிகை
தோய்தெடுத்து கண்டு
மகிழ கண் திறக்க காரிகை
உன்னைக் கண்டேன்

காண வேண்டும்
கண்டு மகிழ வேண்டும்
பேச வேண்டும் பேச்சுடனே
பகிர வேண்டும் உள்ள
மட்டும் உடனிருக்கும்
உள்ளத்து ஆசைதனை

உள்ளத்தில் உள்ளதனை
வளர்ந்து வரும் ஆசைதனை
உருமாற்றம் ஏதுமின்றி
உளமார சொல்லிவிட்டேன்
உன் விருப்பம் என் விருப்பம்
நம் விருப்பம் ஆக வேண்டும்

காலங்கள் மாறுதடி
காதலிலே தவறில்லை
உன்னை நான் அறிந்து
கொண்டு என்னை நீ



அறிந்துகொண்டு
நம் வாழ்வை
நாம் வாழ்ந்தால்
வாழுமட்டும்
இன்பமயம்.

**ஓம் குமார்**
**P N**
மதுரை



## நலன் விசாரணை

என்னைப் பற்றிய
*நலன் விசாரணை ஒன்று
மட்டுமே உன் கா த லி ன்
குறிக்கோள்!
நீ என்னைச்சந்திக்க வரும்
ஒவ்வொரு நாளுமே
எனக்குக் கந்து வட்டி
கிடைத்த நாட்கள்!
அனிச்சம் இதழ்
அட்டைப்படத்தைப் போல
உன் முகம் எந்த நேரத்தில்
பார்த்தாலும் வசீகர அழகு!
என் தேன்சிட்டு
உன்னைப்பற்றி நான்
ஒரு நாளைக்கு
ஆயிரம் கவிதைகள்
எழுதினாலும்(கூட)
என் கரம் வலிக்காது!
உன் செவிகளில்
அசைந்தாடும் ஜிமிக்கி
கம்மல் போடும் ஆட்டத்தின்
அழகு கூட எனக்குத்
திருவிழாத் தேர் தான்!
வா.... அன்பே
கவிதைகளை விட அழகாக
சிறக்கட்டும் நம் கா த ல்!

## காதலும் நீயே கவிதையும் நீயே

நீ குட்டிக் குட்டிக்
கவிதைகளை
உன் விழிகளின் பார்வையில்
சேமித்து வைத்திருப்பது
என்னமாய் அழகு!
நீ கொடியில்
உலர்த்தியிருக்கும்
சேலையில் வந்தமரும்
வண்ணத்துப்பூச்சிக்குக்கூடத்
தெரிந்திருக்கிறது பார்
உன் சுகந்தத்தின் நறுமணம்!
பின் உன் வாசனையை
எவ்வளவு சுகிப்பேன் என்று
நம் கா த ல றி யு ம்!
ஒவ்வொரு நொடியும்
உன் அன்பு எனக்குப்
பேரழகு தான்! ஏனெனில்
எனகுக்காதலும் நீயே
கவிதையும் நீயே!
இதை விட அழகாகவும்
சொல்ல ஆசைப் படுகிறேன்
அன்பே உன் இனிய
நேசத்தை!

## அமுதபானம்

என் கா த ல் கிளி
நீ பாடுவது எனக்கு
அமுதகானம் என்றால்
உன் முத்தங்க(ளே)ள்
எனக்கு அமுதபானம்!
என்னை வேட்டையாடும்
பெண் மானாக நீ செயல்
படுவதாலோ என்னவோ
உன் அன்பு எப்பொழுதுமே
எனக்கு அதிசயமானதொரு
வரம் தான்!
தொடாத குறை படாத குறை
என்று நமக்குள் சிக்கல்கள்
சினமுற்ற நேரங்களிலும் கூட
எட்டிப் பார்த்ததில்லை!
இப்பிறவி எனக்கொரு
வரமென்று உன்னைச்
சந்தித்த முதல் நாளே
அறிந்தேன் உணர்ந்தேன்!
உன் விழி காட்டுதல்
ஒன்று போதும் நம் கா த ல்
இனிதே வளர!

## மாநகர காதல்

மாநரகக் காதல்
எங்கெங்கும் வியாபித்திருக்க
நம் இருவரின் அன்போ
சிறந்த *மாநகர காதல்!
கன்னத்தில் கேட்டால்
இதழ்களில் வழங்கும்
முத்த சுரபி நீ!
உனக்குப் பிடித்ததை விட
எனக்குப் பிடித்ததையே
செய்யும் கொள்கை சுந்தரி நீ!
முகநூல் புலனத்திற்கு
வழங்கும் நேரத்தை
ஓரங்கட்டி விட்டு
நம் அன்பில் ஈடுபடும்
நவீன பெண் வள்ளல் நீ!
உன்னையன்றி வேறோர்
அழகி என் கனவிலும்(கூட)
பிரவேசம் செய்ய
வாய்ப்பேயில்லை ராணி!

## சிறைப்பாவை

என் மனதில்
அடைபட்டிருக்கும்
*சிறைப்பாவை நீ என்றாலும்
என்னை எந்த நேரமும்
ஆட்டிப் படைக்கும்
ஆனந்த அழகி நீ!
சிப்பியில் பிறக்கும்
முத்து போல என்னைக்
காதலிப்பதற்கென்றே
பிறந்த மலர்மதி நீ!
உன்னைத் தவிர வேறு
யாருமே என் கவிதைகளில்
இடம் பிடித்ததில்லை
இடம் பிடிக்கப்
போவதுமில்லை!
நீ செய்யும் குறும்பு களில்
என்னமாய் அழகாகி
விடுகிறது
இந்தப் பேரழகான கா த ல்!
உன் ரகசியச் செய்கைகள்



காட்டிக்
கொடுத்து
விட்டது
நீ பாக்யராஜ்
ரசிகை என்று!

**முத்து ஆனந்த்**
வேலூர்



## காத்திருப்பு !

எனக்கென்ன வேறு வேலை
இல்லையா ! உனக்காக
காத்திருப்பது தான்
வேலை என்று
நினைத்தாயோ...

நிதமும் என்னை காக்க
வைப்பதில் நீ
சுகம் காண்கிறாயோ...

காலையிலும்
காத்திருக்கிறேன்
மாலையிலும்
காத்திருக்கிறேன் ...
எனக்கென்ன வேறு வேலை
இல்லையோ...
இனி உனக்காக காத்திருக்க
போவதில்லை என்று
சபதத்துடன் திரும்புகிறேன்....

அதோ வருகின்றது..
உன் இருக்கையை
தாங்கிய பேருந்து !
ஜன்னலோர இருக்கையில்
பார்த்துவிட்டேன்
உன் திருமுகத்தை...
திருப்தியில்
திரும்புகின்றேன்...

இனி மாலையில்
வருவேன், நாளையும்
வருவேன் எனக்கென்ன



வேலையா, வெட்டியா...
உன்னை காண்பதை
விட பெரிதான வேலை
எதுவும் எனக்கு
இல்லை!

**எம்.பி.தினேஷ்.**
கோவை


Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


முனீஸ்வரர் துணை
கங்கோத்தரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909
+91 96770 88843
info@sevenstarslogistics.com
www.sevenstarslogistics.com



We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889





VILAMBARAM
WANTED
10 SMART FEMALE
Telecallers
Job Type: Full-time
Education : Bachelor's degree
Freshers And Experience
Both can apply.
SEO & DIGITAL MARKETING
COMPANY SINCE 2020
Dont miss this opportunity
INTERESTED CANDIDATES CAN APPLY
+91 9337501889
+91 7789941009
Job @ CHENNAI
www.vilambaram.com




உடன்குடியில்
ஸ்ரீவேல்முருகன்
டெக்ஸ்டைல்ஸ்
ஜவுளி, நகைக்கடையில்
வேலைக்கு ஆண்கள்,
பெண்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம்.
Ph: 81442 27771




WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756

Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599





ஆட்கள் தேவை
1.Supervisor
with any post graduate degree Age 45 above to 55
2.Security 2 Persons
3.Garderner
செடிகளை பராமரிக்க வேண்டும்
தேவதாஸ் மருத்துவமனை வளாகம்
நித்திரவிளை,
கன்னியாகுமரி மாவட்டம்
Cell : 6382807831




MLM PERFECT
LIMITED OFFER
HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website
www.mlmperfect.com
Call US
9853719337,7436914247




WANTED
NEWS COORDINATOR
Salary
Rs. 25000
Plus
*Salary is not a constraint for right candidate
Responsibilities:
1. Appoint Reporters and Photographers in Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office
PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
பேப்பர்பாய்
Send CV to
padmamediapublications@gmail.com
Call
9337501889

தூத்துக்குடி, திருநெல்வேலி சிப்காட் பகுதியில் உள்ள பிரபல பன்னாட்டு நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)
ASST. செக்யூரிட்டி ஆபிஸர்
சம்பளம் : 27500 (Ex.Serviceman)
செக்யூரிட்டி சூப்பர் வைசர்
சம்பளம் : 24506 (Ex.Serviceman)
செக்யூரிட்டி கார்டு
சம்பளம் : 20701 (Civil)
8 மணி நேர வேலை
System work தெரிந்தவர்களுக்கும், முன் அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்
படிப்பு : 10th Pass அதற்குமேல்
வார விடுமுறை உண்டு
வருடாந்திர ஊதிய உயர்வு
ESI / PF / போனஸ் உண்டு
வயது : 25 முதல் 50 வயது வரை
தங்கும் வசதி செய்து தரப்படும்
குறைந்த விலையில் உணவு வசதி செய்து தரப்படும்
98949 99422
99941 34169
81109 77577





Happy Anniversary
V.Ganesan - N.Gomathi




Launch Your
Own Secure
Crypto MLM
Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com



# பல்சுவை களஞ்சியம்




# செல்போனில் உள்ள தகவல்

இன்று..... அனைவரின் கையில் டச் போன் இல்லாமல் இருக்க மாட்டார்கள். தொடுதிரை என்னும் டச் போன் பல வகைகளில் இன்றியமையாத பயனுள்ள ஒரு பொருளாக உள்ளது. ஆண் பெண் பேதமின்றி எல்லா வயதினரும் பயன்படுத்தி வரும் இன்றைய உலகம் நவீன யுகமாக மாறிவரும் சூழ்நிலையில்

டச் போன் காணாமல் போனாலோ ..... அல்லது மறந்துவிட்டு நகர்ந்தாலோ ..... இழப்பது போன் மட்டுமல்ல.... நமது போன் தவறாகப்பயன்படுத்தினால் என்ன ஆகுமோ...!?!?! என்ற பயம் இனி வேண்டாம். உங்களது போன் லாக்(Lock) செய்ய எளிய வழி இருக்கிறது பின்வருமாறு செய்யுங்கள்......

**அலைபேசி பயன்படுத்துபவர்களே**

தொலைந்த மொபைலை ஒரே நிமிடத்தில் நாமே கண்டுபிடிக்கலாம்.... அனைத்தையும் லாக் கூட செய்யலாம்... செல்போன் தவறவிட்டால் பதறாமல் ..... இருந்த இடத்திலிருந்தே கண்டுபிடித்து விடலாம். அதுமட்டும் இல்லாமல், நம்முடைய தனி மனித ரகசியத்தை பற்றி கவலை கொண்டால், அல்லது மிக முக்கிய செய்திகள் மற்றும் பைல்ஸ் யாரேனும் திருட முடியும் என்று பயந்தாலோ இனி அந்த கவலையை விட்டு விடுங்கள்..... அந்த போனில் உள்ள முக்கிய தகவல்களை லாக் செய்ய முடியும். தவறவிட்ட, திருடப்பட்ட செல்போனில் உள்ள முக்கிய தகவல்களை அழிக்க முடியும். ஆச்சரியமாக இருக்கிறதா. இது உண்மை.

இந்த அத்தனை வசதிகளையும் எப்படி பயன்படுத்துவது என்று பார்ப்போம்.

find my device

find my device மூலம்இதை எளிதான செய்ய முடியும். முதலில் கூகுள் சர்ச்சில் android.com/find என டைப் செய்யுங்கள்.. பிறகு உங்கள் கூகுள் அக்கவுண்டை log in செய்ய வேண்டும்.

உங்களின் email and pass-word கொடுத்த பின்பு லாக் இன் ஆகும்.

அப்போது ஸ்க்ரீனின் இடது புறம் நாம் தவறவிட்ட செல்போன் மாடல் எண் மற்றும் அதற்கு கீழே play sound,lock ,erase என்ற 3 தகவல்கள் இருக்கும்.

ஸ்கிரீன் வலது புறம் தற்போது அந்த செல்போன் எந்த இடத்தில் உபயோகத்தில் உள்ளது என்பது map மூலமாக தெரியவரும்.

play sound கிளிக் செல்தால் செல்போன் 5 நிமிடம் ஒலிக்கும்.

lock ஆப்சனை கிளிக் செல்தால் செல்போன் லாக் ஆகி விடும்.

erase ஆப்சனை கிளிக் செல்தால் செல்போனில் உள்ள தகவல் அனைத்தும் அழிந்து விடும்.

இந்த அற்புதமான செய்தியை நாம் ஒவ்வொரு வரும் தெரிந்து வைத்துகொண்டால், என்றோ ஒரு நாள் நமக்கே பயன்படும்.

அதுமட்டும் இல்லாமல் மிக எளிதில் எந்த இடத்தில் அந்த மொபைல் இயங்கி கொண்டிருகிறது என்பதையும் தெரிந்துகொள்ள முடியும்.



# மாட்டு வண்டி

மாட்டுவண்டி.....
மாட்டின் கழுத்தை பாரம் அழுத்தாத மரபு வடிவம். வண்டியில் ஏற்றப்படும் பாரம் மாட்டின் கழுத்தை அழுத்தாதபடியான தொழில் நுட்பம் கொண்டது மாட்டுவண்டி.
வண்டியை மாடு இழுக்க மட்டுமே சக்தியை செலவழித்தால் போதும். பாரத்தை வண்டியே சுமந்து கொள்ளும்.
உயிரினங்களை வதைக்காமல் மனிதன் அதை பயன்படுத்தவேண்டும்.
இப்படி யோசித்த நமது முன்னோர்களின் அறிவுத்திறனையும், நேசத்தையும் வியக்காமல் இருக்க முடியவில்லை.
நமது முன்னோர்கள் அதை எப்படியெல்லாம் சாத்தியப்படுத்தினார்கள் என்பதை பார்க்கலாம்.
குறிப்பாக தமிழ் நாட்டில் பயன்படுத்தப்படும் "சக்கடாவண்டி" என்னும் பாரவண்டி வடிவமைப்பு, தமிழ்நாடு மட்டும் அல்லாமல், கோரமண்டல் கடற்கரை பகுதி என்று குறிப்பிடப்படும் ஒரிசா வரை ஒரே மாதிரி இருக்கிறது.
மாட்டுவண்டிகளின் சக்கரத்தின் உயரம் 5¼ அடி என்று தரப்படுத்தபட்டிருக்கிறது
இந்தத் தரப்படுத்தல் என்பது ஏன்..? என்று சற்று பார்ப்போம்.
பொதுவாக ஒரு நபரை " நெட்டையான ஆள்.." என்றோ "குட்டையான ஆள்.." என்றோ அடையாள படுத்துவது நம்மிடையே இருந்து வரும் ஒரு பழக்கம்.
இந்த குட்டை நெட்டைக்கான அடிப்படை என்று ஒன்று இருக்க வேண்டும் தானே.அதாவது சராசரி உயரம் என்பதாக.
நம்மை பொருத்த வரை நம்ம ஊரில் மனிதனின் சராசரி உயரம் என்பது 5½ அடி என்பதாகும்.
இந்த சராசரி உயரத்தின் ¾ பங்கு என்பது அதாவது "எண் சாண் உடம்பு" என்று சொல்வோமே.
அதில் ¾ பங்கான 6 சாண் என்பது 4 1/8 (நாலே அரைக்கால்) அடி ஆகும்.
இது மனிதனின் நெஞ்சு பகுதி வரை உள்ள உயரமாகும்.
மாட்டுவண்டியின் நீளமான பகுதியின் பெயர் ‘போல்’ என்பதாகும்.
இந்த போலின் முனையில் தான் மாடுகளை பூட்ட பயன்படும் நுகத்தடியை பொருத்திக் கட்டுவார்கள்.
5¼ அடி விட்டம் கொண்ட



வண்டி சக்கரத்தின் ஆரம் 2 5/8 / (இரண்டே அரையே அரைக்கால்) அடி ஆகும்.
சக்கரத்தின் மையத்தில் அச்சு சொறுகப்பட்டிருக்கும்.
இரு சக்கரங்களையும் இணைக்கும் இந்த அச்சின் மேல் தான் பாரம் தாங்கியாக செயல்படும் தெப்பக்கட்டை அமர்த்தப்பட்டிருக்கும்.
இந்த தெப்பக்கட்டையின் மேல் தான் ’போல்’ என்னும் நுகம் கட்டும் நீளக்கட்டை பொருத்தப்பட்டிருக்கும்.
இந்தப் போல் மற்றும் தெப்பக்கட்டையும் சேர்ந்து 1½ அடி உயரம் இருக்கும்.
ஆக ஒரு வண்டியை படுக்கை மட்டத்தில் சமன் (balance) பண்ணினால் வண்டியின் உயரம் 4 1/8 அடியாக இருக்கும்.
அதாவது சக்கரத்தின் ஆரத்தின் அளவும் தெப்பக்கட்டையின் உயரமும் (2 5/8 + 1 ½ ) சேர்ந்து உயரம் 4 1/8 அடியாகும்.
ஒரு மாட்டின் கழுத்து வரை உள்ள உயரம் சராசரியாக 4 1/8 அடி.
இத்தனை சராசரி உயரங்களின் அடிப்படையில் தான் நமது மாட்டுவண்டியினை வடிவமைத்திருக்கின்றனர் நமது முன்னோர்கள்.
அவர்களால் இவ்வளவு நுட்பமாக வடிவமைக்கப்பட்டுள்ள மாட்டு வண்டியை 4 1/8 அடி உயரத்தில் விரல் தொடலில் வண்டியில் ஏற்றப்படும் பாரம் மாட்டின் கழுத்தை அழுத்தாதபடி நொடிப்பொழுதில் சமன் செய்ய முடியும்.
இத்தனை துல்லிய அளவு தொழில்நுட்ப ஒருங்கிணைவே மாட்டுவண்டி.
ஒவ்வொரு பாகத்தையும் செய்ய இன்னின்ன மரவகையை தான் பயன்படுத்த வேண்டும் என்று வரையறுத்திருக்கின்றனர் நமது முன்னோர்கள்.
அந்த வரையறையில் சில:

சட்டம் - வாகைமரம்.
குறியது - வாகைமரம்
ஆரக்கால் - உன்னி
அலகு - தேக்கு
குடம் - வைமரம்
தெப்பக்கட்டை- வேங்கை
போல் - வேங்கை
நுகம் - புன்னை
நோக்காகுச்சசு - வைமரம்
தாங்குக்கட்டை- வைமரம்
பிள்ளைச்சட்டம் - வாகை
குரங்குகம்பு- கல்மூங்கில்
ஊனிகம்பு - விடத்தலை
அளி - மூங்கில்பட்டியல்

பார வண்டியின் பாகங்களைச் செய்யப் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட மர வகைகளின் சிறப்புத் தன்மையை சிறிது பார்ப்போம்.
வண்டிச் சக்கரத்தின் அலகுக்கு பயன்படுத்தும் தேக்கு மரம் வலுவானது நீண்ட காலம் உழைக்கும் தன்மை கொண்டதும் ஆகும்.
வண்டியின் நுகத்தடிக்கு மஞ்சனத்தி மர கம்பை பயன்படுத்துவதன் நோக்கம் அந்த மரத்திலுள்ள மஞ்சள் தன்மையின் மருத்துவ குணம் மாட்டின் கழுத்து உராய்வினால் ஏற்படும் புண்ணுக்கு மருந்தாகவும் பயன்படும் என்பதனாலேயே.
எடை குறைவு மற்றும் வலிமை தன்மையும் கொண்ட மூங்கிலை அளி பலகைக்கு பயன்படுத்தும் வழக்கம் இருந்து வருகிறது.
இப்படி பல வியக்க வைக்கும் தொழில்நுட்பம் கொண்டது.

# மீம்ஸ்










# விடுகதை

| | |
|---|---|
| உடம்பெல்லாம் தங்கநிறம், தலையில் பச்சை கிரீடம் அது என்ன? | அன்னாசிப் பழம் |
| குண்டுச் சட்டியில் கெண்டை மீன். அது என்ன? | நாக்கு |
| கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள் அவள் யார்? | மெழுகுத்திரிவத்தி |
| நன்றிக்கு வால் கோபத்துக்கு வாய் அது என்ன? | நாய் |
| நீண்ட உடம்புக்காரன், நெடுந்தூரப் பயணக்காரன்? | ரயில் |
| எடுக்க எடுக்க வளரும். எண்ணெயைக் கண்டால் படிந்துவிடும். அது என்ன? | முடி |



# ஜோக்ஸ்

அந்த டாக்டருக்கு சொந்தக்காரங்கன்னு சொல்லிக்க யாருமே கிடையாது !

ஏன் ?

எல்லாருக்கும் அவருதான் ஆபரேஷன் பண்ணினாரு !

————————————————

என்னங்க... செருப்பு காலை கடிக்குது!

அப்ப மாலைல போட்டுக்கங்க!

————————————————

சார்... ஆறு வருஷத்துல நீங்க போட்ட பணம் இரட்டிப்பாகும்னு சொன்னீங்களே... என்ன ஆச்சு?

நிதி நிறுவனம் : இரட்டிப்பாகும்னு தானே சொன்னோம்.. திருப்பித் தர்றதா சொல்லலையே!

————————————————

என் பொண்டாட்டிய என்ன தான் செய்றது?

ஏன் என்ன பண்றாங்க?

நான் எது செஞ்சாலும் என் பொண்டாட்டி குறுக்கே நிக்கிறா.

கார் ஓட்டி பாரேன்.

————————————————

தலைவர் எதுக்காக எடை பார்க்கும் மிஷினை பக்கத்துலயே வச்சிருக்காரு?”

“அவரைத் தேடி வர்றவங்க கிட்டே அவரோட ‘வெயிட்’டை காண்பிக்கவாம்!

-----------------------------

அந்த கட்சிக்குள்ள ஏகப்பட்ட கோஷ்டிங்க இருக்குன்னு எப்படிச் சொல்றே..?

ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருந்த தலைவரை, சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கச் சொல்லி ஒரு கோஷ்டி போராடுதே...

-------------------

டிராபிக் கான்ஸ்டபிள்:

யோவ் நடுரோட்டை விட்டு ஓரமா போய்யா. வண்டிக்காரனுங்க வந்து மோதிடப் போறானுங்க.

குடிகாரன்: என்னை ஓரமா போகச் சொல்லிட்டு நீங்க மட்டும் நடுரோட்டிலே நின்னா எப்படி.



————————————————

“நான் ஒரு முட்டாள். உன்னைப் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டேனே?”

“அது கல்யாணத்துக்கு முன்னாடியே தெரியும்... அதனால தான் சம்மதிச்சேன்... !”

————————————————

“டைம் இஸ் கோல்டுன்னு சொன்னா, நீ ஏன் ஒத்துக்க மாட்டேங்குற?”

“அதை அடமானம் வைக்க முடியாதே”

————————————————

“வெளிநாட்டிலிருந்து உன் பையன் என்ன வாங்கி வந்தான்” “நாலு செண்ட் தான்”

“ஏன்..ஒரு ஏக்கர் வாங்கிட்டு வரச் சொல்லி இருக்கலாமே...”

————————————————

கிரிக்கெட்டில் ரன் எடுக்காமல் போனால்
டக் அவுட்
ரயிலில் டிக்கெட் எடுக்காமல் போனால்

வித் அவுட்

————————————————

வீட்டில் கொசுவை கொல்லுவதற்கு

ஆல் அவுட்நீங்க இதை படிச்சிட்டு லைக் / கமெண்ட் கொடுக்காம போன நான் மூடு அவுட்

இப்படிக்கு
பாசக்கார பய புள்ளைங்க சங்கம்

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## கோயில்களில் ஒளிந்திருக்கும் அறிவியல்

### வாழை மற்றும் மாவிலைத் தோரணங்கள்



விழாக்கள் மற்றும் விசேஷ நாட்களில் கோவில்களில் வாழைமரம், மாவிலைத் தோரணங்கள் கட்டுவது ஒரு அறிவியல் காரணத்தைக் கொண்டுள்ளது. மக்கள் கூட்டத்தால் வெளியாகும் கார்பன் டை ஆக்சைட்டு மற்றும் வியர்வை போன்றவற்றால் மூச்சுத் திணறல் ஏற்பட வாய்ப்பு அதிகம். மாசுபட்ட காற்றை தூய்மைப்படுத்தி ஆக்ஸிஜன் நிரம்பிய நல்ல காற்றாக மாற்றி வழங்குபவை தான் இந்த வாழை மரமும், மாவிலைகளும். அதனால் தான் நம் முன்னோர்கள் விசேஷ நாட்களில் இவற்றை கட்டச் செய்தனர்.

### அரச மரம்



அரச மரங்கள் அதிக அளவில் பிராணவாயுவை வெளியிடுகின்றன. எனவே கோவில்களில் அரச மரத்தை நடுவது அல்லது கோவிலைச் சுற்றி இருப்பது நல்ல ஆற்றல் மற்றும் சுத்தமான காற்றைப் பெற உதவுகிறது. அதைச் சுற்றி அமர்ந்து தியானம் செய்வது உடலுக்கு மிகவும் நல்லது.

### நமஸ்காரம்



இந்திய பாரம்பரியத்தில் நமஸ்காரம் என்பது இரண்டு கைகளையும் கூப்பி, ஆள்காட்டி விரல்களின் நுனிகளை ஒன்றாக வைத்திருப்பது ஒரு அறிவியல் பூர்வமான உடலுக்கு ஆரோக்கியம் தரும் செயலாகும்.

### கோவிலை விட உயரமாக வீடு கட்டக்கூடாது

இடி இடிக்கும் பொழுது கோயில் கோபுரங்களின் உச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் கலசங்கள் அந்த மின்னதிர்ச்சியை உள்வாங்கி தரைக்கு கடத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் அந்த கோபுரத்திற்கோ, சுற்றிலும் உள்ள வீடுகளுக்கோ எந்த பாதிப்பும் ஏற்படாது. எனவே தான் இன்றைய இடிதாங்கி அறிவியல் வசதி இல்லாத அக்காலத்தில், கோயிலை விட உயரமாக கட்டடங்கள் கட்ட வேண்டாம் என்று சொல்லி வைத்துள்ளார்கள் நம் முன்னோர்கள்.



### கோவில்களில் உள்ள குடமுருட்டல்



இந்த குடமுருட்டல், கோவில் கோபுரங்களில் உள்ள கலசங்களின் மீது உள்ள அஸ்மா கலசத்தின் கதிர்வீச்சை, வானில் உள்ள அனைத்து ஆற்றல் மற்றும் சக்திகளை ஈர்த்து, கோயிலுக்குள் உள்ள கருவறைக்கு கொண்டு வருகிறது. இது கோவிலுக்குள் உள்ள ஆன்மிக ஆற்றலை வலுப்படுத்துகிறது.

### சாம்பிராணி புகை போடுவது



வீட்டில் பூச்சித்தொல்லை, கொசுத்தொல்லை, கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் போன்றவற்றின் நடமாட்டத்தை குறைக்க இந்த சாம்பிராணி போடப்படுகிறது. அத்துடன் வீட்டில் எதிர்மறை ஆற்றலைப் போக்கி நேர்மறை ஆற்றலை அதிகரிக்கச் செய்யவும் சாம்பிராணி மணம் உதவுகிறது.

### உச்சி வெயிலில் கிணத்தை எட்டிப் பார்க்கக் கூடாது:




உச்சி வெயில் காலங்களில் சூரிய ஒளி நேரடியாக கிணற்றில் விழும். இதனால் திடீரென வேதிவினை நடைபெற்று, கிணற்றுக்குள் விஷ வாயு உண்டாகலாம். அம்மாதியான சமயங்களில் கிணற்றில் எட்டிப் பார்ப்பதால் மயக்கம் ஏற்படவோ அல்லது தடுமாறி கிணற்றுக்குள் தவறி விழவோ வாய்ப்புண்டு. எனவேதான் நம் முன்னோர்கள் உச்சி வெயிலில் கிணத்தை எட்டிப் பார்க்க வேண்டாம் என்று கூறுகிறார்கள்.

**இதைப் போன்றே நகத்தை கடித்தால் தரித்திரம் ஏற்படும் என்றும், வாசல் நிலைப்படியில் மஞ்சள் தடவ சிறந்த கிருமி நாசினியான இவை வெளியே உள்ள கிருமிகளை உள்ளே வராமல் தடுக்கும் என்றும் சொல்லி இருக்கிறார்கள். ஆன்மிக அறிவுரைக்குப் பின்னால் அறிவியலும் கலந்து இருக்கிறது என்பது மறக்க முடியாத உண்மை தானே!**

## கடவுள் மீது நம்பிக்கை கொண்டிருப்பது ஒருவரை ஆன்மீகவாதியாக்குமா?

கடவுள் மீது நம்பிக்கை இல்லாதவர் ஆன்மீகத்தில் இருக்க முடியாது. ஆனால், நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், கடவுள் மீது நம்பிக்கை உள்ளவர்களும் ஆன்மீகவாதியாகிவிட முடியாது. ஏனென்றால், கடவுள் மீது நம்பிக்கை உடையவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் பெரிதாக வித்தியாசம் இல்லை. இரண்டு பேருமே தங்களுக்கு தெரியாத ஒன்றைப் பற்றி நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். உங்களது பிரச்சனை என்னவென்றால், உங்களுக்கு தெரியாததை, "தெரியாது" என்று ஒப்புக்கொள்ளும் நேர்மை உங்களிடம் இல்லை. அதனால் ஆத்திகருக்கும், நாத்திகருக்கும் பெரிதாக வேறுபாடு ஒன்றும் இல்லை. இரண்டு பேருமே தாங்கள் வெவ்வேறானவர்கள் என்று வேஷம் போடுகிறார்கள். ஆன்மீகத் தேடலில் உள்ள ஒருவர், ஆத்திகனுமல்ல, நாத்திகனுமல்ல. தனக்கு ஒன்றும் தெரியாது என்ற புரிதலால், அவர் ஒரு தேடலில் இருக்கிறார்.

நீங்கள் ஏதோவொன்றின் மேல் நம்பிக்கை வைக்கும் அந்த க்ஷணத்தில், மற்ற



அனைத்தையும் பார்க்கத் தவறி, குருடாகிவிடுகிறீர்கள். இப்போது இவ்வுலகில் உள்ள சண்டைகள் அனைத்தும், அவர்கள் காட்டிக்கொள்வதைப்போல நல்லதுக்கும் கெட்டதுக்கும் இடையில் நடப்பவை அல்ல. இது எப்போதுமே, ஒரு மனிதனின் நம்பிக்கைக்கும், இன்னொரு மனிதனின் நம்பிக்கைக்கும் இடையே உள்ள முரண்பாடாகும். நம்பிக்கைக்கான தேவை என்பது, ஆன்மீகத்தை விடவும், உளவியல் சார்ந்ததாக உள்ளது. உங்களுக்கு ஏதோவொன்றின் மேல் தொற்றிக்கொள்ள வேண்டும், பாதுகாப்பாக உணர வேண்டும், மற்றும் எல்லாமே தெரியும் என்ற உணர்வுடன் இருக்க வேண்டும்; இவை அனைத்தும் ஒரு முதிர்ச்சியில்லாத மனதின் வெளிப்பாடாகும். இந்த பிரபஞ்சத்தைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை என்றால்தான் என்ன? உண்மையில், உங்களுக்கு ஒன்றும் தெரியாது. இது அழகானதாகும்! நீங்கள், உங்களுக்குள் அழகாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பது எப்படி என்று பாருங்கள். அது உங்கள் கைகளில்தான் உள்ளது.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## பொங்கல் பரிசுத்தொகுப்பினை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்



திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க நியாய விலைக்கடையில் பொங்கல் பரிசு ரூ.3000 மற்றும் அரிசி, கரும்பு, சர்க்கரை உள்ளிட்ட பொங்கல் பரிசுத்தொகுப்பினை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்.

## 3000 நிர்வாகிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவி



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் நடந்த பொங்கல் விழாவில் துணை முதல்வர் உதயநிதி பங்கேற்று 3000 நிர்வாகிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட செயலாளர் அன்பரசன், ஆ.ராசா எம்.பி., ஆர்.எஸ்.பாரதி உள்ளனர்.



பொங்கல் பரிசு தொகுப்பு பெற்ற மகிழ்ச்சியில் தமிழக மக்கள்.

## ரூபாய் 13-இலட்சம் ஒதுக்கி அந்த பகுதி உயரத்தை சமப்படுத்தி வண்ண கற்களும், விளக்குகளும் அமைக்கக்கூடிய பணிகளுக்கான பூஜை



**காரைக்கால்,ஜன.09:**

*காரைக்கால் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட ஸ்ரீசியாமளா தேவி ஆலயம் ( பெரியாச்சி கோவில் ) கும்பாபிஷேகம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்த நமது மாண்புமிகு. A.M.H. நாஜிம், MLA அவர்கள் கும்பாபிஷேகம் செய்து முடித்த பிறகு... கோவில் உயரமாகவும் தரைப்பகுதி 2 அடி பள்ளமாக இருந்த காரணத்தால் கோயிலுக்கு வருகின்றவர்களுடைய சிரமத்தை புரிந்து கொண்டு அதிரடியாக தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 13-இலட்சம் ஒதுக்கி அந்த பகுதி உயரத்தை சமப்படுத்தி வண்ண கற்களும், விளக்குகளும் அமைக்கக்கூடிய பணிகளுக்கான பூஜையை செய்து முடித்த நமது மாண்புமிகு. A.M.H. நாஜிம், MLA அவர்கள் நேற்று அந்த பணிகளை பார்வையிட்டார்கள்..!*

## பொங்கல் பரிசு தொகுப்பு முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்.



பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் ரூ.3000 ரொக்கம் மற்றும் இலவச வேட்டி சேலைகள் வழங்கும் பணியை சென்னை பட்ரோடு நியாயவிலைக்கடையில் முதல்வர் ஸ்டாலின் நேற்று துவக்கி வைத்தார். உடன் அமைச்சர்கள் அன்பரசன், சக்கரபாணி, பெரியகருப்பன், மா.சுப்பிரமணியன், எம்.பிக்கள் டிஆர் பாலு, தமிழச்சி, எம்எல்ஏக்கள் அரவிந்த்ரமேஷ், இ.கருணாநிதி, தலைமைச் செயலாளர் முருகானந்தம் உள்பட பலர் பங்கேற்றனர்.

## ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்துக்கு விருது



ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்துக்கு தமிழ்நாடு மாநில அளவிலான பாதுகாப்பு விருதை அமைச்சர் கணேசன் வழங்கினார்.

## திரையுலகில் இயக்குநர் பாக்யராஜ் 50 ஆண்டுகாலப் பயணம்




திரையுலகில் 50 ஆண்டுகாலப் பயணம் செய்த இயக்குநர் பாக்யராஜை முதல்வர் ஸ்டாலின் வாழ்த்தினார்.

## பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ 3000



**விழுப்புரம் , ஜன.09:**

*தமிழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ முன்னிலையிலும் மற்றும் மேல்மலையனூர் ஒன்றியம் கன்னலம் ஊராட்சியில் சேர்மேன் கண்மணி நெடுஞ்செழியன் முன்னிலையில் ரொக்கம் ரூ 3000 மற்றும் கரும்பு, அரிசி,சக்கரை உள்ளிட்டிவைகளை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டன.* **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## சமத்துவ பொங்கல் திருவிழா



நன்னிலம் சட்டமன்ற தொகுதியில் சமத்துவ பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது. இதில் முன்னாள் அமைச்சர் காமராஜ் பங்கேற்றார்.

## தஞ்சையில் நேற்று பொங்கல் விழா



தஞ்சையில் நேற்று பொங்கல் விழா கொண்டாடிய திமுக மகளிர் அணியினர்.

## கல்லூரியில் பொங்கல் விழா



கோவை பீளமேடு சர்தார் வல்லபாய் பட்டேல் கல்லூரியில் நேற்று பொங்கல் விழாவை மாணவர்கள் உற்சாகமாக கொண்டாடினர்.

## குரோம்பேட்டையில் புதிய சுரங்கப்பாதை திறப்பு



**தாம்பரம், ஜன.9-**

*குரோம்பேட்டை ஜி.எஸ்.டி சாலைக்கு அருகேயுள்ள ரயில் பாதைக்கும் தெற்கே ஏராளமான புறநகர் பகுதிகளும் - குடியிருப்புகளும் உள்ளன. அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.31.62 கோடி மதிப்பில் ரயில்வே சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதை துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார். இதன் மூலம், ராதாநகர், ஜமீன் பல்லாவரம், போஸ்டல் நகர், நெமிலிச்சேரி, நன்மங்கலம் மற்றும் மேடவாக்கம் பகுதி பொதுமக்கள் - வாகன ஓட்டிகள் பெருமளவில் பயனடைவார்கள். விழாவில் அமைச்சர் அன்பரசன், எம்எல்ஏக்கள் இ.கருணாநிதி, எஸ்ஆர் ராஜா, துணைமேயர் காமராஜ் உள்பட பலர் பங்கேற்றனர்.*

## பொங்கல் பரிசு தொகுப்பு



நெல்லையில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கலை கலெக்டர் சுகுமார் முன்னிலையில் சபாநாயகர் அப்பாவு துவக்கி வைத்தார்.



நாகர்கோவிலில் ரேஷன் கடையில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்வில் பாஜக கவுன்சிலர் மீனாதேவ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



குமரி முகிலன் விளை நியாயவிலைக்கடையில் பொங்கல் பரிசுத்தொகுப்பை கலெக்டர் அழகுமீனா தலைமையில் அமைச்சர் மனோதங்கராஜ் வழங்கினார். உடன் முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன், மேயர் மகேஷ், விஜய் வசந்த்எம்.பி., ராஜேஷ்குமார் எம்எல்ஏ உள்ளனர்.



தூத்துக்குடி நியாய விலை கடையில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியினை அமைச்சர் கீதாஜீவன் நேற்று துவக்கி வைத்தார்.



ஈரோடு மாணிக்கம்பாளையம் ரேஷன் கடையில் பொங்கல் பரிசுத்தொகை மற்றும் பரிசுத்தொகுப்பை வீட்டுவசதி துறை அமைச்சர் முத்துசாமி பொதுமக்களுக்கு வழங்கினார். அருகில் கலெக்டர் கந்தசாமி, சந்திரகுமார் எம்எல்ஏ, உள்ளனர்.



கோவையில் கணபதி ராஜ்குமார் எம்.பி., பொங்கல் பரிசு தொகுப்புகளை வழங்கினார்.




## மாரத்தான் போட்டி லோகோ




கோவையில் பெண்களின் பாதுகாப்பை மையமாகக் கொண்டு பிப்ரவரி 22 மாரத்தான் போட்டி நடக்கிறது.இதற்கான லோகோவை மாநகர காவல் ஆணையர் கண்ணன் நேற்று அறிமுகம் செய்தார்.

## அன்புமணி செங்கோல் பரிசு




கடலூரில் நடந்த பாமக கூட்டத்தில் அதன் தலைவர் அன்புமணி பேசினார்.அவருக்கு செங்கோல் பரிசளிக்கப்பட்டது.

## தவெக கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம்



சென்னை பெருங்குடியில் தவெக கொள்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் நாஞ்சில் சம்பத் பேசினார்.



## மத்திய அமைச்சருக்கு வரவேற்பு

சென்னை வந்த மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவாலை பாஜக மாநிலத் தலைவர்நயினார் நாகேந்திரன் வரவேற்றார்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## ரயில் தொழிற்சாலையில் வேலை

சென்னை ரயில் பெட்டி தொழிற்சாலையில் (ஐ.சி.எப்.,) விளையாட்டு ஒதுக்கீடு காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சீனியர் கிளர்க் 2, ஜூனியர் கிளர்க் 8, டெக்னீசியன் 15 என மொத்தம் 25 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு / பிளஸ் 2/ டிப்ளமோ / டிகிரி

வயது: 18 - 25 (19.1.2025ன் படி)

கூடுதல் தகுதி: சர்வதேச, தேசிய, பல்கலை போட்டிகளில் சான்றிதழ்

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 250 கடைசிநாள்: 19.1.2026

## இந்திய கப்பல் படையில் சேர விருப்பமா...



இந்திய கப்பல் படையில் பி.டெக்., படிப்புடன் கூடிய பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மொத்தம் 44 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பிளஸ் 2வில் இயற்பியல், வேதியியல், கணிதத்தில் குறைந்தது 70% மதிப்பெண்.

வயது: 2.1.2007 - 1.1.2009க்குள் பிறந்திருக்க வேண்டும்.

பணி வாய்ப்பு: நான்காண்டு பி.டெக்., படிப்புக்குப்பின், 'பெர்மன்ட் கமிஷன்ட் ஆபிசராக' பணியமர்த்தப்படுவர்.

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, 'ஜே.இ.இ., - 2025' நுழைவுத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

கடைசிநாள்: 19.1.2026

விவரங்களுக்கு: joinindiannavy.gov.in

விவரங்களுக்கு: pb.icf.gov.in

# சுற்றுலா: ஈரோட்டில் சுற்றிப்பார்க்க கூடிய சுற்றுலா தலங்கள்

டூர் என்பதற்கும் பிக்னிக் என்பதற்கும் வித்தியாசம் உண்டு. காலையில் ஆரம்பித்து இரவுக்குள் சிற்றுலா சென்று சில இடங்களைப் பார்ப்பது பிக்னிக் எனப்படும். வெளியூரில் இரண்டு நாட்களுக்கு மேல் ஊர் சுற்றிப் பார்ப்பதைத்தான் (டூர்) சுற்றுலா என்று சொல்கிறார்கள். ஈரோட்டில் ஒரே நாளில் சுற்றிப் பார்க்கக் கூடிய ஐந்து இடங்களைப் பற்றி இந்த பதிவில் பார்ப்போம்.

### 1. 1. வ. உ. சிதம்பரனார் பூங்கா

வ. உ. சிதம்பரனார் பூங்கா பேருந்து நிலையத்திற்கு மிக அருகில், ஈரோட்டின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. ஈரோடு மாநகராட்சியால் பராமரிக்கப்படும் இந்தப் பூங்கா தோட்டங்கள், பசுமையான புல்வெளிகள் மற்றும் நல்ல நடைபாதைகளை கொண்டுள்ளது. இங்கு தினமும் ஏராளமானவர்கள் நடைப்பயிற்சி செய்கிறார்கள். குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த இடமாக இருக்கிறது. மாலை நேரத்தில் ஏராளமான பறவைகளைக் கண்டு ரசிக்கலாம். இந்தப் பூங்காவில் மகாவீர ஆஞ்சநேயர் கோவில் மற்றும் பழங்கால தர்கா போன்ற இடங்களும் உள்ளன.

### 2. 2. பவானிசாகர் அணை

ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிஆற்றின்குறுக்கேகட்டப்பட்ட உலகின் மிகப்பெரிய மண்ணால் அமைக்கப்பட்ட அணைகளில் ஒன்றாகும்/ இது நீர்ப்பாசனம், மின் உற்பத்தி மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாக திகழ்கிறது. அணையின் நீளம் சுமார் எட்டு கிலோமீட்டர் நீளம். இது ஒரு குறிப்பிடத்தக்க பொறியியல் சாதனையாகும். இந்த அணைக்கு அருகிலேயே ஒரு அழகான பூங்கா உள்ளது. குழந்தைகள் விளையாடுவதற்கும் பெரியவர்கள் ஓய்வெடுப்பதற்கும் ஒரு இனிமையான சூழலை வழங்குகிறது. சுற்றியுள்ள அடர்ந்த காடுகள் மற்றும் மலைகள் இந்த பிரதேசத்திற்கு அழகு சேர்க்கின்றன. இது ஈரோட்டில் இருந்து 80 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.



### 3. 3. கொடிவேரி அணை

இது ஈரோட்டுக்கு அருகில் உள்ள மிகவும் பிரபலமான சுற்றுலா தலங்களில் ஒன்றாகும். இங்கு நிறைய திரைப்பட காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. பவானி ஆற்றின்மீதுகட்டப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க கல் அணையாகும். இது ஆற்று நீர் பாய்ந்து செல்லும் ஒரு அருவியை கொண்டுள்ளது. அதனால் குளிப்பதற்கு மிகவும் ஏற்ற இடமாகும். இந்த அணை 24 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான விவசாய நிலங்களுக்கு நீர் அளிக்கிறது. இங்குள்ள பூங்கா குழந்தைகளுக்கு பிடித்தமான வகையில் இருக்கிறது. இங்கு பவளப்பாறை சவாரிகள் உள்ளன. இது ஈரோட்டில் இருந்து சுமார் 50 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.



### 4. 4. வெள்ளோடு பறவைகள் சரணாலயம்

இயற்கையை ரசிப்பவர்கள் மற்றும் பறவைகளை ரசிப்பவர்களுக்கு மிகவும் ஏற்ற இடமாகும். குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு பிடித்த இடமாகும். ஒரு பெரிய ஏரியைச் சுற்றிபல்வேறுவகையான உள்ளூர் பறவைகளையும் புலம்பெயர்ந்த பறவைகளையும் பார்க்கலாம். இது ஈரோட்டில் இருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

### 5. 5. பவானி கூடுதுறை

இது காவிரி, பவானி மற்றும் புராண அமுத நதிகள் சங்கமிக்கும் இடமாகும். இது ஒரு புனித யாத்திரை தலமாக இருந்தாலும் இதன் ஆற்றங்கரைகள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகள் காண்பதற்கு மிகவும் அழகானவை. இது ஈரோட்டில் இருந்து சுமார் 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

# அதிக சொத்து வரி கட்டியதில் ராஷ்மிகா முதலிடம்

**பெங்களூரு, ஜன.9:**

குடகு மாவட்டத்தில், அதிகமான சொத்து வரி செலுத்தியோர் பட்டியலில் நடிகை ராஷ்மிகா மந்தனா முதலிடத்தில் உள்ளார்.

கன்னட திரையுலகில், ' கிரிக் பார்ட்டி ' படம் மூலம், நடிகையானவர் ராஷ்மிகா மந்தனா. இவர், குடகு மாவட்டத்தை சேர்ந்தவர். முதல் திரைப்படமே வெற்றி அடைந்ததால், அடுத்தடுத்த படங்களில் வாய்ப்பு கிடைத்தது. அதன்பின், தெலுங்கு திரையுலகில் நுழைந்தார். ஸ்டார் நடிகர்களுடன் நடித்தார்.

தெலுங்கை தொடர்ந்து தமிழிலும் நடித்த ராஷ்மிகா, தற்போது பாலிவுட்டிலும் அடுத்தடுத்த படங்களில் நடித்து வருகிறார். இவர், தன் வருமானத்தை முதலீடு செய்யும் நோக்கில், 2022 ஆகஸ்டில், 'புரொடக்ஷன் எல்எல்பி' என்ற நிறுவனத்தை துவங்கினார். இவர், 2025 - 26 நிதியாண்டில், மிக அதிகமாக சொத்து வரி செலுத்தியுள்ளார்.

இவர், 4 கோடி ரூபாய்க்கும் அதிகமாக சொத்து வரி செலுத்தியுள்ளார். குடகு மாவட்டத்தில், அதிகமான வரி செலுத்தியவர்கள் பட்டியலில், இவர் முதல் இடத்தில் உள்ளார்.

# 15 ஆண்டுகால காத்திருப்பு... குரோம்பேட்டை சுரங்கப்பாதை புதிய வசதியுடன் திறப்பு



**சென்னை, ஜன.9:**

குரோம்பேட்டை ராதா நகர் ரயில்வே சுரங்கப் பாதைத் திட்டம், கடந்த 15 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த நிலையில், பணிகள் நிறைவடைந்து இன்று(ஜன. 7) திறக்கப்பட்டுள்ளது.

குரோம்பேட்டைராதாநகர் ரயில்வே கடவு எண் 27-இல் அமைக்கப்பட்ட ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதால் ராதாநகர், நெமிலிச்சேரி, ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் மிகவும் சிரமப்பட்டு வந்தனர்.

பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள், வேலைக்குச் செல்பவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் செல்ல முடியாமலும் நோயாளிகள் அவசரமாக மருத்துவமனைக்குச் செல்ல முடியாமலும் அவதியுற்று வந்தனர்.

மக்களின் கோரிக்கையை ஏற்று கடந்த 2007-ஆம் பல்லாவரம் நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ரயில்வே மற்றும் நெடுஞ்சாலைத்துறை ஒத்துழைப்புடன், 250 மீட்டர் நீளம், 7 மீட்டர் அகலம் கொண்ட ராதாநகர் ரயில்வே சுரங்கப் பாதை பணிகள் அன்மையில் நிறைவுற்றன. இந்த நிலையில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இன்று (ஜன. 7) செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில்ராதாநகர், ஜமீன் பல்லாவரம், போஸ்டல் நகர், நெமிலிச்சேரி. நன்மங்கலம் மற்றும் மேடவாக்கம் பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் சென்னை குரோம்பேட்டை ஜிஎஸ்டி சாலை - ராதா நகர் இடையில் ரூ. 31.62 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கடவு எண் 27 ரயில்வே இருவழி சுரங்கப்பாதையை திறந்து வைத்தார்.

# ஆற்காடு நகராட்சியில் பொங்கல் பரிசு தொகுப்பு அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார்



**ஆற்காடு, ஜன.9:**

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகராட்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்புகளை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார்.

ஆற்காடு நகராட்சி 20 வது வார்டுக்குட்பட்ட தர்மராஜகோவில் திடல் அருகே உள்ள நியாயவிலைகடையில் தமிழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் ஜெ.யு. சந்திரகலா தலைமை வகித்தார். ஆற்காடு எம் எல் ஏஜெ.எல். ஈஸ்வரப்பன், நகரமன்ற லைவர் தேவிபென்ஸ்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு குடும்ப அட்டை தாரர்களுக்கு வேட்டி,சேலை, கரும்பு, சர்க்கரை, பச்சரிசி, ரொக்கப்பணம் 3ஆயிரம் ஆகியவற்றை வழங்கினார்.

இந்த விழாவில் மாவட்ட திமுக அவை தலைவர் ஏ.கே. சுந்தரமூர்த்தி, நகர செயலாளர்ஏ. வி.சரவணன், நகரமன்ற உறுப்பினர்கள் சி.தட்சிணாமூர்த்தி, வி.விஜயகுமார், பி.டி.குணாளன், ஆனந்தன்,மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# திருச்சி மருத்துவமனை மீது சிறுநீரக முறைகேடு புகார் - விசாரிக்க சிறப்பு குழுவை அமைத்தது அரசு

**சென்னை, ஜன.9:**

மகாராஷ்டிர மாநிலத்தில் விவசாயிகளிடம் திருச்சியை சேர்ந்த தனியார் மருத்துவமனை மருத்துவர்களும், இடைத் தரகர்களும் சிறுநீரக முறை கேட்டில் ஈடுபட்டதாக எழுந்த குற்றச்சாட்டை விசாரிக்க தமிழக அரசு சிறப்புக் குழுவை அமைத்துள்ளது.



மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கந்துவட்டிக்கு கடன் வாங்கி, அதை திருப்பிச் செலுத்த முடியாததால், தனது சிறுநீரகத்தை விற்பனை செய்துள்ளார்.

திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனை மருத்துவர் மற்றும் தமிழகத்தை சேர்ந்த இடைத்தரகர்கள் சிலருக்கு இதில் தொடர்பு இருப்பதாக மகாராஷ்டிர சிறப்பு புலனாய்வுத் துறையினர் குற்றம்சாட்டினர்.

இதுதொடர்பாக திருச்சிக்கு வந்து அவர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக விசாரிக்க, தமிழக சுகாதாரத் துறை சிறப்புக் குழு அமைத்துள்ளது.

இதுதொடர்பாக சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது, "மருத்துவம் - ஊரக நலத்துறை கூடுதல் இயக்குநர் பிரகலாத் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவில், கண்காணிப்பு அதிகாரி, நிர்வாக அதிகாரி, இணை இயக்குநர் நிலையில் உள்ள அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

சம்பந்தப்பட்ட இடத்துக்கு நேரில் சென்று ஆய்வு செய்ய உள்ளனர்.

மகாராஷ்டிர சம்பவத்துக்கும், தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கும் தொடர்பு உள்ளதா என்பதை அவர்கள் விசாரிப்பார்கள்.

விவசாயிகளை குறிவைத்து இத்தகைய மோசடி நடக்கிறதா என்பதையும் ஆய்வு செய்யவுள்ளனர். அதுதொடர்பான ஆய்வறிக்கையை விரைவில் அக்குழு அரசிடம் சமர்ப்பிக்கும். அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றனர்.

# மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான பல்வகைத் திறன் பூங்கா: அமைச்சர் அன்பில் மகேஸ் திறந்து வைத்தார்

**சென்னை, ஜன.9:**

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான பல்வகைத் திறன் பூங்காவை சென்னை புழல் பகுதியில் செயல்பட்டு வரும் பொப்பிலி ராஜா அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார்.

பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது (2024-2025) மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் புலன் உணர்வுத்திறன், அறிவுத்திறன், பெருந்தசை இயக்கத்திறன் மற்றும் நுண்தசை இயக்கத்திறன் ஆகியவை மேம்படுவதற்காக, அவர்களின் பல்வகைப் புலன்கள் தூண்டப்பட்டு விளையாட்டு வாயிலாக கற்றல் அனுபவங்களைப் பெறத்தக்க வகையில் பல்வகைத் திறன் பூங்கா உருவாக்கப்படும் என்ற அறிவிப்பை அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிட்டார்.

இதன் அடிப்படையில், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் கீழ் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்காக தமிழகத்தில் 20 மாவட்டங்களில் மொத்தம் 20 பல்வகைத்திறன் பூங்காக்கள் அமைக்க திட்டமிடப்பட்டது. ஒவ்வொரு பூங்காவுக்கும் தலா ரூ.13 லட்சம் வீதம் ரூ.2.6கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக, சென்னை மாவட்டத்தில் புழல் ஒன்றியத்தில் பொப்பிலி ராஜா அரசு மேல்நிலைப் பள்ளியில் பல்வகைத்திறன் பூங்கா தற்போது முழுமையாக நிறுவப்பட்டுள்ளது. இதை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார். இந்தப் பூங்கா சாதாரண விளையாட்டு இடமாக இல்லாமல், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் பார்த்தல், கேட்டல், தொடுதல் மற்றும் சமநிலை போன்ற பல்வேறு உணர்திறன்களைத் தூண்டும் வகையில் சிறப்பான வடிவமைப்புடன் உருவாக்கப்பட்ட பூங்காவாகும்.

# டிஜிட்டல் அரெஸ்ட் என கூறி முதியவரிடம் ரூ.15 லட்சம் மோசடி!

**திருநெல்வேலி, ஜன.9:**

டிஜிட்டல் அரெஸ்ட்' எனக்கூறி, 78 வயது முதியவரிடம், 15 லட்சம் ரூபாயை மர்ம நபர்கள் மோசடி செய்தனர்.

திருநெல்வேலி, பெருமாள்புரம் அழகர்நகரில் வசிப்பவர் ரங்கநாதன், 78. மும்பையில் உள்ள பாபா அணு ஆய்வு மையத்தில் நிர்வாக உதவியாளராக பணியாற்றி, 2007ல் ஓய்வு பெற்றவர்.

கடந்த டிச., 27ல் அவரது மொபைல் போனுக்கு, 'வாட்ஸாப்' செயலி வாயிலாக பேசிய நபர், 'உங்கள் ஆதார் எண்ணை பயன்படுத்தி, 40 லட்சம் ரூபாய் சட்ட விரோத பணப்பரிமாற்றம் நடந்துள்ளது. இப்போது நீங்கள், டிஜிட்டல் அரெஸ்டில் உள்ளீர்கள். பிரச்னை அதிகரிக்காமல் இருக்க பணம் செலுத்த வேண்டும்' என மிரட்டினார்.

இதனால் பயந்த ரங்கநாதன், ஜன., 2ல் அவர்கள் கூறிய வங்கி கணக்கிற்கு, 15 லட்சம் ரூபாயை அனுப்பினார். அதன் பிறகும் பணம் கேட்டு போன் செய்ததால், சந்தேகமடைந்த அவர், திருநெல்வேலி மாநகர சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்தார். போலீசார் விசாரிக்கின்றனர்.

# கீழமை நீதிமன்றங்களில் இ-ஃபைலிங் முறை நிறுத்திவைப்பு: வழக்கறிஞர்கள் பணிக்கு திரும்ப முடிவு

**மதுரை, ஜன.9:**

மாவட்ட நீதிமன்றங்களில் இ-ஃபைலிங் முறை நிறுத்தி வைக்கப்பட்டதை அடுத்து, கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக நடத்தி வந்த நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தை தைகைவிட்டு ஜனவரி 9 முதல் வழக்கறிஞர்கள் பணிக்கு திரும்ப முடிவு செய்துள்ளனர்.

தமிழகத்தில் மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குகளை நேரடியாக தாக்கல் செய்யும் முறை நிறுத்தப்பட்டு, இ-ஃபைலிங் முறையில் தாக்கல் செய்வது கட்டாயமாக்கப்பட்டது. மாவட்ட நீதிமன்றங்களில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தாமல் இ-ஃபைலிங் முறையை அமல்படுத்தக் கூடாது. அதுவரை இ-ஃபைலிங் முறையை நிறுத்தி வைக்க வேண்டும். நேரடியாக மனுத் தாக்கல் செய்யவும் அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரி வழக்கறிஞர்கள் கடந்த ஒரு மாதமாக நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டம் நடத்தி வந்தனர்.



தலைமை நீதிபதியை வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து இ-ஃபைலிங் முறையை நிறுத்தி வைக்க மனு அளித்தனர். பின்னர் கீழமை நீதிமன்றங்களில் இ-ஃபைலிங் கட்டாயமாக்கப்பட்டதை எதிர்த்து வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது.

அதில், இ-ஃபைலிங் நடைமுறை கட்டாயமாக்கப்பட்டு உள்ளதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் உள்ளன. எனவே வழக்கமான முறையில் நேரடியாக வழக்குகளை தாக்கல் செய்வதற்கு அனுமதி மறுக்கக் கூடாது. இந்த சிக்கல்கள் தீரும் வரை இரண்டு முறையிலும் வழக்குகளை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை தலைமை நீதிபதி அமர்வு விசாரித்து பொங்கலுக்கு பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஒத்திவைத்தது. இந்நிலையில் கீழமை நீதிமன்றங்களில் அமல்படுத்தப்பட்டுள்ள இ-ஃபைலிங் முறையை மறு உத்தரவு வரும் வரை நிறுத்தி வைப்பதாக உயர் நீதிமன்றம் பதிவாளர் ஜெனரல் நேற்று உத்தரவிட்டார். இதையடுத்து கடந்த ஒரு மாதமாக வழக்கறிஞர்கள் நடத்தி வந்த நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தை தைகைவிட்டு பணிக்கு திரும்ப முடிவு செய்துள்ளனர்.

மதுரை மாவட்ட வழக்கறிஞர்கள் சங்க பொதுச் செயலாளர் மோகன்குமார் கூறுகையில், கீழமை நீதிமன்றங்களில் இ-ஃபைலிங் முறை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து வழக்கறிஞர்கள் சங்க சிறப்பு கூட்டம் நடத்தப்பட்டு நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டத்தை கைவிட்டு ஜனவரி 9 முதல் பணிக்கு திரும்ப முடிவு செய்யப்பட்டுள்ளது

## க்ரைம் கார்னர்

### பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.15 ஆயிரம் லஞ்சம் வாங்கிய ஆய்வாளர் கைது

**ஆத்தூர், ஜன.9:**

சேலம் மாவட்டம், ஆத்தூர் மந்தவெளி பகுதியைச் சேர்ந்தவர் ஈஸ்வரன். இவரது தாய் பச்சியம்மாள் பெயரில் உள்ள பட்டாவை தனது பெயருக்கு மாற்றம் செய்ய ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை ஆய்வாளராக பணியாற்றியவரும் பெரியசாமி, 59, என்பவரை அணுகியுள்ளார்.

பெயர் மாற்றம் செய்வதற்கு பெரியசாமி 20,000 ரூபாய் லஞ்சம் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத ஈஸ்வரன், சேலம் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் அளித்தார். அவர்கள் ரசாயனம் தடவப்பட்ட 15,000 ரூபாயை கொடுத்து அனுப்பியுள்ளனர். அவர்கள் அறிவுறுத்தலின் பெயரில், ரசாயனம் தடவிய லஞ்சப்பணத்தை பெரியசாமியிடம் ஈஸ்வரன் வழங்கினார். அப்போது அங்கு மறைந்திருந்த போலீசாரிடம் பெரியசாமி சிக்கினார். அவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கைதான முதுநிலை அலுவலர் பெரியசாமி என்பவரை லஞ்ச ஒழிப்பு போலீசார் பிடித்தபோது மயக்கம் வருவதாக சேரில் அமர்ந்து கொண்டார். அவர் மயங்கி விழுந்த நிலையில் லஞ்ச ஒழிப்பு போலீசார் காரில் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். இவர் மூன்று மாதங்களில் ஓய்வு பெற இருந்த நிலையில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாரிடம் சிக்கி உள்ளார்.

### வீரவநல்லூர் வியாபாரி கடத்தி கொலை - குற்றாலத்தில் உடல் மீட்பு, 3 பேர் கைது

**தென்காசி, ஜன.9:**

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள தனியார் விடுதி அருகில் நேற்று முன்தினம் இரவு ஆண் ஒருவர் கொலை செய்யப்பட்டு கிடந்தார். குற்றாலம் போலீஸார் விரைந்து சென்று சடலத்தை மீட்டனர். விசாரணையில், கொலை செய்யப்பட்டவர் வீரவநல்லூர் அருகே உள்ள புதுக்குடி கிராமத்தைச் சேர்ந்த ராம்குமார் (48) என்பது தெரியவந்தது. இவர், வீரவநல்லூரில் மாவு வியாபாரம் மற்றும் சமையல் பாத்திரங்கள் வாடகை நிலையம் நடத்தி வந்தார். சுந்தரபாண்டியபுரத்தைச் சேர்ந்த கார் ஓட்டுநர் அசோக் (29) என்பவரை பிடித்து போலீஸார் விசாரணை நடத்தினர். வீரவநல்லூரைச் சேர்ந்த கோழி இறைச்சி கடைக்காரர் மணிகண்டன் (30) உட்பட 3 பேர் தனது காரில் ராம்குமாரை குற்றாலத்துக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு அவர்களை இறக்கி விட்டுவிட்டு வந்துவிட்டதாகவும் கூறினார். இதையடுத்து, குற்றாலத்தில் மது போதையில் இருந்த மணிகண்டன், வீரவநல்லூரில் டெய்லர் கடை நடத்தி வரும் கவுதம் (22) மற்றும் 17 வயது சிறுவன் என 3 பேரை குற்றாலம் போலீஸார் பிடித்து விசாரணை நடத்தினர். ராம்குமார் அடிக்கடி தன்னை கேலி செய்ததால் தனது நண்பர்களுடன் சேர்ந்து அவரை குற்றாலத்துக்கு காரில் அழைத்துச் சென்று, விடுதியில் அறை எடுத்து தங்கியதாகவும், மது போதையில் இருந்த ராம்குமாரை விடுதி அருகே அழைத்துச் சென்று கொலை செய்துவிட்டு, விடுதியில் தூங்கியதாகவும் மணிகண்டன் தெரிவித்துள்ளார். இதையடுத்து போலீஸார் வழக்கு பதிவு செய்து, 3 பேரையும் கைது செய்தனர்.

# ஆவின் பச்சை நிற பால் பாக்கெட் விலை உயர்த்தப்பட்டதா? - அரசு விளக்கம்!

**சென்னை, ஜன.9:**

"ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ. 3 குறைக்கப்படும் என்ற வாக்குறுதியை திமுக அரசு நிறைவேற்றாமல் அதற்குப் பதிலாக ஆவின் பால் விலை இருமடங்கு, அதாவது லிட்டருக்கு ரூ. 6 உயர்த்தப்பட்டுள்ளதாக" சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவி வருகின்றன. இதுகுறித்து தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது.

"ஆவின்பச்சை நிறபால்பாக்கெட் விலை உயர்த்தப்பட்டதாகப் பரப்பப்படும் தகவல் வதந்தி!

கடந்த 2021-ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்றவுடன் ஆவின் பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டது.

தற்போது ஆவின் நிறுவனம் அறிமுகப்படுத்தியிருப்பது கிரீன் மேஜிக் பிளஸ் என்ற புதிய வகை பால் பாக்கெட்டாகும். இதில் கூடுதலாக வைட்டமின் ஏ மற்றும் டி செறிவூட்டப்பட்டு உள்ளதுடன் கொழுப்புச் சத்து: 4.5% இதரச் சத்துக்கள்: 9% S.N.F. உயர்த்தப்பட்டு உள்ளது.

கொழுப்புச் சத்து: 4.5% மற்றும் இதரச் சத்துக்கள்: 8.5% S.N.F கொண்ட பழைய ஆவின் கிரீன் மேஜிக் நிலைப்படுத்தப்பட்ட பால் பாக்கெட் தற்போதும் அதே விலையில் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் உற்பத்தியும் நிறுத்தப்படவில்லை. தவறான தகவலைப் பரப்பாதீர்!" என்று கூறப்பட்டுள்ளது.



மேலும் தமிழக அரசு இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் நாளென்றுக்கு ஆவின் மூலம் 31 லட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்படுகிறது. குறிப்பாக, சென்னையில் நாளொன்றுக்கு சுமார் 15 லட்சம் லிட்டர் பால் மற்றும் மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ. 30 கோடி மதிப்பிலான பால் உப பொருட்கள், 35 ஆவின் ஜங்சன் பாலகங்கள், 200 ஆவின் பாலகங்கள் மற்றும் சுமார் 860 சில்லரை விற்பனையாளர்கள் மூலமாக மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஆவின் மூலம் பொது மக்களுக்கு சமன்படுத்தப்பட்ட பால், இருமுறை சமன்படுத்தப்பட்ட பால், நிலைப்படுத்தப்பட்ட பால், நிறைகொழுப்பு பால் மற்றும் டிலைட் பால் என ஐந்து வகை பால் பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் ஆவின் பால் விலை மற்றும் வகைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. மேலும், தங்கு தடையின்றி ஆவின் பால் அனைத்து பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

எனவே, ஆவின் பால் விலையேற்றம் என வெளியிடப்படும் செய்தி முற்றிலும் தவறு மற்றும் ஆதாரமற்றது என தெரிவிக்கப்படுகிறது" என்று கூறப்பட்டுள்ளது. தற்போது ஆவினில் பச்சை நிற பால் பாக்கெட் (கிரீன் மேஜிக்) 500 மிலி ரூ. 22-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த 2024 ஆம் ஆண்டு இறுதியில் பச்சை நிற பால் பாக்கெட்டிற்குப் பதிலாக ஆவின் கிரீன் மேஜிக் பிளஸ் என்ற புதிய வகை பால் அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பிய நிலையில் நிறுத்தப்பட்டது. இந்த பால் 450 மிலி விலை ரூ. 25 ஆகும். இந்த கிரீன் மேஜிக் பிளஸ் பால் இன்று டெல்டா மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் விற்பனை செய்யப்படுவதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

# தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் மிக கனமழை

**சென்னை, ஜன.9:**

தென்கிழக்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழகத்தில் தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் இன்று (ஜன.9) மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று அதே பகுதிகளில், சென்னைக்கு தென்கிழக்கே 1270 கிமீ தொலைவில் நிலைக்கொண்டுள்ளது.

இது வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, அதற்கடுத்த 48 மணி நேரத்தில், தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளை நோக்கி நகரக்கூடும்.

9-ம் தேதி திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் கன முதல் மிக கனமழையும், ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும். 10-ம் தேதி மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் கன முதல் மிக கனமழையும், புதுக்கோட்டை, தஞ்சாவூர், அரியலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

11-ம் தேதி சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மற்றும் புதுச்சேரியில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.


10-ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிமீ வேகத்திலும், இடையிடையே 65 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

# நிலவுக்கு 2040-ம் ஆண்டுக்குள் இந்திய விண்வெளி வீரர்களை அனுப்ப திட்டம்: இஸ்ரோ முன்னாள் தலைவர் பேச்சு

**ஆமதாபாத், ஜன.9:**

குஜராத்தின் ஆமதாபாத் நகரில் நடந்த 5-வது இந்திய வானியல் சமூக கருத்தரங்கு தொடக்க நிகழ்ச்சியில் இஸ்ரோ அமைப்பின் முன்னாள் தலைவர் கிரண் குமார் கலந்து கொண்டு பேசினார்.

அவர் கூறும்போது, தற்போது இருந்து 2040-ம் ஆண்டுக்குள் விண்வெளி செயல்பாடுகளில், முழு அளவிலான திட்டங்கள் நிறைய நடைபெற உள்ளன. 2040-ம் ஆண்டில் இந்திய விண்வெளி வீரர்களை நிலவில் தரையிறக்கி பாதுகாப்பாக திருப்பி கொண்டு வரவேண்டும் என்ற ஒரு திட்டம் உள்ளது.



2040-ம் ஆண்டுக்குள் விண்வெளி நிலையம் ஒன்றை கட்டமைக்கும் பணியிலும் இந்தியா ஈடுபட்டு வருகிறது என்றார். வருங்காலத்தில் சந்திரயானின் தொடர்ச்சியான திட்டங்கள் உடனடியாக செயல்படுத்தப்படும். ஜப்பானுடன் இணைந்து லேண்டர் மற்றும் ரோவர் பணிகள் நடந்து வருகின்றன.

விண்வெளியை உற்றுநோக்குவதிலும், அண்டவெளியை புரிந்து கொள்வதிலும் இந்தியா உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. இது, இந்தியாவின் விண்வெளி பயணத்தில் கல்வி நிலையங்கள், என்ஜினீயரிங் மையங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் கூட பங்காற்ற நிறைய வாய்ப்புகளை ஏற்படுத்தி தரும் என்றார்.

ராணுவ நோக்கங்களுக்காக அல்லாமல் சமூக பயன்பாட்டிற்காக விண்வெளி தொழில்நுட்ப கட்டமைப்பை உருவாக்கிய முதல் நாடு இந்தியா மட்டுமே என பெருமையுடன் கூறினார். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நாடு முழுவதிலும் இருந்து விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், கல்வியியலாளர்கள், இளம் ஆராய்ச்சியாளர்கள் என 150-க்கும் மேற்பட்டோர் வருகை தந்துள்ளனர்.

## மார்கழி-25

**09-01-2026**

### திருப்பாவை - பாடல் -25

ஒருத்தி மகனாய் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்து கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய்..

**பொருள்:** தேவகியின் மைந்தனாக நள்ளிரவில் பிறந்தவனே! அன்று இரவே யசோதையிடம் ஒளிந்து வளர்வதற்காகச் சென்றவனே! அவ்வாறு மறைந்து வளர்வதைப் பொறுக்க முடியாத கம்சன் உன்னை அழிக்க வேண்டும் என்று நினைத்தான். அந்த கருத்து அழியும் வகையில், அவனது வயிற்றில் பயத்தால் ஏற்படும் நெருப்பை விளைவித்த உயர்ந்த குணங்களையுடைய திருமாலே! உனது அருளை யாசித்து நாங்கள் வந்தோம். அந்த அருளைத் தந்தாயானால், உனது விரும்பத்தக்க செல்வச்சிறப்பையும், பக்தர்களுக்காக நீ செய்த பணிகளையும் பாராட்டி நாங்கள் பாடுவோம். உனது பெருமையைப் பாடுவதால், துன்பங்கள் நீங்கி இன்பமாய் மகிழ்ந்திருப்போம்..

**விளக்கம்:** பக்தன் பக்தி செலுத்தும் போது, இறைவன் அவனுக்கு சேவகனாகி விடுகிறான். தனது உயிருக்குயிரான பக்தன் பிரகலாதனுக்கும் அவனது தந்தை இரணியனுக்கும் வாதம் நடக்கிறது. "உன் நாராயணன் எங்கே இருக்கிறான்?" என்று இரணியன் கேட்க, பெருமாளுக்கு கை, கால் உதறி விடுகிறது. உடனே உலகிலுள்ள எல்லா ஜீவன்களுக்குள்ளும் அவன் சென்று விட்டான். ஒரு அணுவைக் கூட அவன் பாக்கி வைக்கவில்லை. பிரகலாதன் என்ன பதில் சொன்னாலும் அதற்குள் இருந்து வெளிப்பட வேண்டுமே என்ற பயத்தில் அவன் இருந்தான். அவன் "தூண்" என்று சொல்லவே, அதற்குள்ளும் மறைந்திருந்த பகவான், நரசிம்மமாய் வெளிப்பட்டார். பக்தனுக்கு அவர் செய்த சேவையைப் பார்த்தீர்களா! தன்னிடம் பக்தி செலுத்திய பாண்டவர்களுக்காக அமாவாசை நேரத்தையே மாற்றிய தயாள குணம் படைத்த வரல்லவா! இவற்றையெல்லாம் படித்தாலே நாம் அவனை அடைந்து விடலாம் என்பது இப்பாடலின் உட்கருத்து.

### திருப்பள்ளியெழுச்சி - பாடல் -25

பூதங்கள் தோறும் நின்றாய் எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக்கண்டறிவாரை
சீதங்கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா!
சிந்தனைக்கும் அரியாய்! எங்கள் முன்வந்து
ஏதங்களறுத்து எமை யாண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே...

**பொருள்:** குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப் பெருந்துறையில் உறையும் சிவபெருமானே! சிந்தனைக்கு எட்டாதவனே! நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐந்துபூதங்களிலும் நீயே இருக்கிறாய். நீ எங்கும் போவதும் இல்லை, வருவதும் இல்லை. இவ்வாறு புலவர்கள் உன்னுடைய சிறப்பியல்புகளை கீதங்களால் பாடுகிறார்கள், பக்தர்கள் இந்தப் பெருமைகளைச் சொல்லி ஆடுகிறார்கள். இப்படி பாடியாடுபவர்களும் உன்னை நேரில் பார்த்ததில்லை. உன் திருக்காட்சியைக் கண்டவர்கள் யாருமில்லை. அப்படிப்பட்ட நீ எங்கள் முன்பாக வந்து, எங்கள் பாவங்களையெல்லாம் தீர்த்து எங்களை ஆட்கொள்ள வேண்டும். அதற்காக, உடனே துயில் நீங்கி எழுவாயாக..

**விளக்கம்:** போக்கிலன் வரவிலன் என்று சிவபெருமான் போற்றப்படுகிறார். அதாவது, இறைவன் பிறப்பும் இறப்பும் இல்லாதவன் என்று இதற்குப் பொருள். அவன் நிரந்தரமானவன், அவனுடைய மூலத்தை அறிந்து கொள்ள முயற்சிப்பவர்கள் அறிவீனர்களாகவே இருக்க முடியும். எத்தனை நூல்களை ஆய்வு செய்தாலும், இதைக் கண்டு பிடிக்க முடியாது. எனவே, நம் சக்திக்கு மீறிய அந்த பரமனைப் பாடி மகிழ்ந்தாலே அவன் நம் கண்ணுக்குத் தெரிந்து விடுவான் என்பது இப்பாடல் உணர்த்தும் கருத்து..

## வணிகச் செய்திகள்

### டீமேட் கணக்குக்கு சேவை கட்டணம் இருக்கிறதா?

நீங்கள் டீமேட் கணக்கை மட்டும் துவங்கிவிட்டு, அதில் பங்குகள் எதுவும் வாங்கிப் போடவில்லை என்றால், உங்களுக்கு ஆண்டுப் பராமரிப்புக் கட்டணம் எதுவும் விதிக்கப்படக் கூடாது.

பங்குச் சந்தை கட்டுப்பாட்டாளரான 'செபி' சிறு முதலீட்டாளர்களுக்காக 'பேசிக் சர்வீசஸ் டீமேட் அக்கவுன்ட்' எனும் 'பி.எஸ்.டி.ஏ' என்ற வழிமுறையைக் கொண்டு வந்துள்ளது.

இதன்படி, உங்கள் கணக்கில் உள்ள பங்குகளின் மதிப்பு 4 லட்சம் ரூபாய் வரை இருந்தால், ஆண்டுக் கட்டணம் பூஜ்ஜியம். 4 லட்சத்திற்கு மேல், 10 லட்சம் வரை இருந்தால், கட்டணம் 100 ரூபாய் மட்டுமே.

இருப்பினும், நீங்கள் டீமேட் கணக்குத் துவங்கும்போது சாதாரணத் திட்டத்தில் கையெழுத்திட்டிருந்தால், ஆண்டுக்கு 300 முதல் 900 ரூபாய் வரை ஆண்டு பராமரிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும்.

அந்த டீமேட் கணக்கு உங்களுக்குத் தேவையில்லை என்றால், உடனடியாக ஒரு 'குளோஷர் பார்ம்' கொடுத்து அதை மூடிவிடுவது நல்லது. இல்லையெனில், பிற்காலத்தில் நிலுவைத் தொகைக்காக நோட்டீஸ் வர வாய்ப்புள்ளது.

### பயணியர் வாகன விற்பனை 6% உயர்வு

கடந்த ஆண்டில், பயணியர் வாகன விற்பனை 6 சதவீதம் அதிகரித்து, 45.50 லட்சமாக இருந்ததாக வாகனத்துறை புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டு செப்டம்பரில் ஜி.எஸ்.டி., 2.O அறிவிக்கப்பட்டு, வரி விகிதங்கள் குறைக்கப்பட்டதால் அதிகரித்த வாகன விற்பனை, ஆண்டு இறுதி வரை நீடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, உள்நாட்டு வாகன நிறுவனங்களான மாருதி சுசூகி, மஹிந்திரா, டாடா மோட்டார்ஸ் ஆகியவற்றின், பயணியர் வாகன ஆண்டு விற்பனை வரலாறு காணாத உயர்வு கண்டது.

குறிப்பாக, எஸ்.யு.வி., விற்பனை, மொத்த பயணியர் வாகன விற்பனையில் 56 சதவீத இடம்பிடித்தது. முந்தைய ஆண்டில் இது 54 சதவீதமாக இருந்தது.

கடந்த 2025ல் 18.44 லட்சம் பயணியர் வாகன விற்பனையுடன் மாருதி சுசூகி இந்தியா நிறுவனம் முதலிடம் பிடித்தது. முந்தைய ஆண்டில் இந்நிறுவனம் 17.90 லட்சம் வாகனங்களை விற்றிருந்தது.

# முதல் கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு ஏப்ரல் 1-ந் தேதி தொடக்கம்

**புதுடெல்லி, ஜன.9:**

முதல்கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியான வீடுகள் பட்டியலிடுதல் மற்றும் கணக்கெடுக்கும் பணிகள் ஏப்ரல் 1-ந் தேதி தொடங்குவதாக மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டு உள்ளது.

இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு கடைசியாக 2011-ம் ஆண்டு நடத்தப்பட்டது. பின்னர் 2021-ம் ஆண்டு கணக்கெடுப்பு, கொரோனா காரணமாக தள்ளி வைக்கப்பட்டது. இந்த கணக்கெடுப்பு அடுத்த ஆண்டு (2027) 2 கட்டங்களாக நடக்கிறது.

இதில் முதல்கட்ட கணக்கெடுப்பு இந்த ஆண்டே தொடங்குகிறது. அதன்படி வருகிற ஏப்ரல் 1-ந்தேதி முதல் செப்டம்பர் 30-ந்தேதி வரை வீடுகளை பட்டியலிடுதல், வீடுகளை கணக்கெடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் முதல்முறையாக பொதுமக்களே தங்கள் பெயர்களை சேர்த்துக்கொள்ள முடியும். இதற்கான முறையான அறிவிப்புகளை மத்திய அரசு நேற்று வெளியிட்டது.

அதன்படி மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில், '2027-ம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின் வீட்டுப் பட்டியல் நடவடிக்கைகள் வருகிற ஏப்ரல் 1-ந்தேதி முதல் செப்டம்பர் 30-ந்தேதி வரை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், அந்தந்த மாநிலமும் யூனியன் பிரதேசமும் குறிப்பிடும் 30 நாட்களுக்குள் நடைபெறும் என்று மத்திய அரசு இதன்மூலம் அறிவிக்கிறது' என குறிப்பிடப்பட்டு உள்ளது.

# பிஎஸ்எல்வி - சி62 ராக்கெட் 12-ந்தேதி விண்ணில் பாய்கிறது

**ஸ்ரீஹரிகோட்டா, ஜன.9:**



பிஎஸ்எல்வி - சி62 ராக்கெட் வருகிற 12-ந்தேதி காலை 10:17 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஏவப்படுகிறது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழகமான இஸ்ரோ வருகிற 12-ந்தேதி பிஎஸ்எல்வி - சி 62 ராக்கெட்டை விண்ணில் ஏவ உள்ளது. இதுதொடர்பாக இஸ்ரோ தனது எக்ஸ் தள பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது:-

பிஎஸ்எல்வி - சி62 ராக்கெட்டை வருகிற 12-ந்தேதி காலை 10:17 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி மையத்தின் முதல் ஏவுதளத்தில் இருந்து ஏவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஏவுதலை ஏவுதல் காட்சிக் கூடத்தில் இருந்து பொதுமக்கள் பார்க்க ஆன்லைனில் LVG.SHAR.GOV.IN என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிஎஸ்எல்வி - சி62 ராக்கெட் மூலம் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் (டிஆர்டிஓ) உருவாக்கப்பட்ட மேம்பட்ட புவி கண்காணிப்பு-ஹைப்பர் ஸ்பெக்ட்ரல் செயற்கைக்கோளான இ.ஓ.எஸ்-என்1 (அன்வேஷா ) விண்ணில் ஏவப்படுகிறது. இது படமெடுக்கும் செயற்கைக்கோள் ஆகும்.

மேலும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஒரு ஸ்டார்ட்அப் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட கெஸ்ட்ரல் இனிஷியல் டெமான்ஸ்ட்ரேட்டர் என்ற சிறிய செயற்கைக்கோள் மற்றும் இந்தியா, மொரீஷியஸ், லக்சம்பர்க், ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஐரோப்பா மற்றும் அமெரிக்கா முழுவதும் உள்ள ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் 17 துணை செயற்கைக்கோள்களும் இந்த ராக்கெட் மூலம் ஏவ திட்டமிடப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### "இந்தியாவில் விளையாடுங்கள் அல்லது புள்ளிகளை இழக்க நேரிடும்" - வங்கதேசத்திற்கு ஐசிசி அதிரடி?




**புதுடெல்லி, ஜன.9:**

வரவிருக்கும் ஆடவர் டி20 உலகக்கோப்பையில் பங்கேற்பதற்காக வங்கதேச அணி இந்தியா வருவது தொடர்பாக, சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) மற்றும் வங்கதேச கிரிக்கெட் வாரியம் (BCB) இடையே செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பேச்சுவார்த்தை குறித்து முரண்பட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதுகாப்பு காரணங்களுக்காகத் தங்களது அணி விளையாடும் போட்டிகளை இந்தியாவிற்கு வெளியே நடத்த வேண்டும் என்ற வங்கதேசத்தின் கோரிக்கையை ஐசிசி நிராகரித்துள்ளதாக ஈஎஸ்பின் கிரிக் இன்போ செய்தி வெளியிட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வீடியோ கான்ஃபரன்ஸில் "வங்கதேச அணி உலகக் கோப்பையில் விளையாட இந்தியாவுக்குப் பயணிக்க வேண்டும், தவறினால் புள்ளிகளை இழக்க நேரிடும் (FORFEIT POINTS)" என்று ஐசிசி திட்டவட்டமாகத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இருப்பினும், அத்தகைய எந்தவொரு இறுதி எச்சரிக்கையும் ஐசிசி தரப்பிலிருந்து தங்களுக்கு வரவில்லை என்று வங்கதேச கிரிக்கெட் வாரியம் மறுத்துள்ளது.

வங்கதேச கிரிக்கெட் வாரியம் விடுத்திருந்த கோரிக்கையை அடுத்து ஐசிசி ஏற்பாடு செய்திருந்த இந்தச் சந்திப்பின் முடிவு குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமோ (BCCI) அல்லது வங்கதேச கிரிக்கெட் வாரியமோ இதுவரை எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை.

### தமிழ்நாடு டிராகன்ஸ் அபார வெற்றி



**சென்னை,ஜன.9:**

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் அக்கார்ட் தமிழ் நாடு டிராகன்ஸ் அணி வெற்றியைப் பெற்றுள்ளது.

இந்தப் போட்டி சென்னை எழும்பூரிலுள்ள மேயர் ராதா கிருஷ்ணன் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் தமிழ்நாடு டிராகன்ஸ் அணி 3-2 என்ற கோல் கணக்கில் சிறப்பாக விளையாடி சூர்மா ஹாக்கி கிளப் அணியை வென்றது.

ஆட்டம் தொடங்கிய 9-வது நிமிடத்திலேயே தமிழ்நாடு டிராகன்ஸ் அணி வீரர் செல்வராஜ் கனகராஜ் ஒரு கோல் அடித்தார். இதையடுத்து 1-0 என்ற கணக்கில் தமிழ்நாடு டிராகன்ஸ் முன்னிலை பெற்றது.

இதைத் தொடர்ந்து 13-வது நிமிடத்தில் தமிழ்நாடு டிராகன்ஸ் வீரர் பிளேக்கோவர்ஸ் ஒரு கோலடித்து 2-0 என முன்னிலையை ஏற்படுத்தினார்.

ஆனால் அதே நிமிடத்திலேயே சூர்மா அணி வீரர் ஹர் மன் பிரீத் சிங் ஒரு கோலடிக்க 2-1 என்ற நிலை ஏற்பட் டது. ஆனால் 23-வது நிமிடத்தில் தமிழ்நாடு டிராகன்ஸ் அணியின் உத்தம் சிங் ஒரு கோலடித்து அணிக்கு 3-1 என்ற கணக்கில் முன்னிலையை ஏற்படுத்தினார்.

ஆட்டத்தின் 39-வது நிமிடத்தில் சூர்மா அணியின் மணீந்தர் சிங் ஒரு கோலடித்தார். இருந்த போதும் இறுதி வரை இந்த நிலை நீடிக்கவே 3-2 என்ற கணக்கில் தமிழ் நாடு டிராகன்ஸ் அணி அபார வெற்றி கண்டது.

# வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணி: 6.5 கோடி பெயர்கள் நீக்கம்

**புதுடெல்லி, ஜன.9:**

பீகாரை தொடர்ந்து 2ம் கட்டமாக 9 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணி நடைபெற்றது. அதன்படி, தமிழ்நாடு, கேரளா, சத்தீஷ்கார், கோவா, குஜராத், மத்தியபிரதேசம், ராஜஸ்தான், உத்தரபிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய 9 மாநிலங்களிலும், அந்தமான் நிக்பார் தீவுகள், லட்சத்தீவுகள், புதுச்சேரி ஆகிய 3 மாநிலங்களிலும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தபணி நடைபெற்றது. கடந்த அக்டோபர் 27ம் தேதி தொடங்கிய இப்பணி சமீபத்தில் நிறைவடைந்தது.

இதையடுத்து, வரைவு வாக்காளர் பட்டியல் ஒவ்வொரு மாநிலமாக தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்தது. இதில், தமிழகத்தில் 97 லட்சத்து 37 ஆயிரம் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன. அதேபோல், உத்தரபிரதேசத்தில் 2.89 கோடி வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன. இந்நிலையில், 2ம் கட்டமாக 9 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணியில் வாக்காளர் பட்டியலில் இருந்து 6.5 கோடி பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிக்குமுன் 9 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களில் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 50.90 கோடியாக இருந்த நிலையில் அந்த எண்ணிக்கை தற்போது 44.40 கோடியாக குறைந்துள்ளது.

# 5 மாநில சட்டசபை தேர்தல்களுக்கான காங்கிரஸ் கட்சியின் கண்காணிப்பாளர்கள் குழு அறிவிப்பு

**புதுடெல்லி, ஜன.9:**

நாட்டில் தமிழகம், புதுச்சேரி, அசாம், கேரளா மற்றும் மேற்கு வங்காளத்தில் நடப்பு ஆண்டில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு பல்வேறு கட்சிகளும் தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், சட்டசபை தேர்தலை முன்னிட்டு 5 மாநிலங்களுக்கான கண்காணிப்பாளர்கள் அடங்கிய குழுவினரை காங்கிரஸ் கட்சி அறிவித்து உள்ளது. இதன்படி, தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு முகுல் வாஸ்னிக், உத்தம் குமார் ரெட்டி மற்றும் காஜி முகமது நிஜாமுதீன் ஆகிய 3 பேரும், கேரளாவுக்கு சச்சின் பைலட், கே.ஜே. ஜார்ஜ், இம்ரான் பிரதாப்கார்ஹி மற்றும் கன்னையா குமார் ஆகிய 4 பேரும் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். இதேபோன்று அசாமுக்கு பூபேஷ் பாகல், டி.கே. சிவக்குமார் மற்றும் பந்து திர்கே ஆகிய 3 பேரும் மற்றும் மேற்கு வங்காளத்திற்கு சுதீப் ராய் பர்மன் மற்றும் ஷகீல் அகமது கான் ஆகிய 2 பேரும் நியமிக்கப்பட்டு உள்ளனர். இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருகிறது.

# சோனியாவுக்கு கூடுதல் அவகாசம்

**புதுடெல்லி, ஜன.9:**

இத்தாலியை பூர்விகமாகக் கொண்ட சோனியா காந்தி கடந்த 1983-ம் ஆண்டு ஏப்ரலில் இந்திய குடியுரிமையை பெற் றுள்ளார். ஆனால் அவரது பெயர் டெல்லி சட்டப்பேரவை தொகுதி வாக்காளர் பட்டியலில் கடந்த 1980-ம் ஆண்டே இடம்பெற்றுள்ளது. எனவே, போலி ஆவணங்களை சோனியா காந்தி அளித்திருக்கக் கூடும். அவர் மீது வழக் குப் பதிவு செய்யக்கோரி விகாஸ் திரிபாதி என்பவர் டெல்லி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவை டெல்லி சிறப்பு நீதிமன்ற நீதிபதி விஷால் நேற்று விசாரித்தார். அப்போது சோனியா சார்பில் ஆஜரான வழக்கறிஞர், பதில் மனு தாக்கல் செய்ய கூடுதல் அவகாசம் கோரினார். இதை ஏற்ற டெல்லி நீதிமன்றம் கூடுதல் அவகாசம் அளித்தது.

# பந்தளத்தில் இருந்து சபரிமலைக்கு.. 12-ந் தேதி புறப்படும் திருவாபரண ஊர்வலம்

**திருவனந்தபுரம், ஜன.9:**



மகரவிளக்கு பூஜை சபரிமலை அய்யப்பன் கோவிலில் வருகிற 14-ந் தேதி நடக்கிறது. அன்றைய தினம் சாமி அய்யப்பனுக்கு பாரம்பரிய வழக்கப்படி திருவாபரணங்கள் அணிவிக்கப்பட்டு சிறப்பு தீபாராதனை நடைபெறும். அவ்வாறு அணிவிக்கப்படும் திருவாபரணங்கள் பந்தளம் அரண்மனையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மகரவிளக்கு பூஜையை முன்னிட்டு இந்த திருவாபரணங்கள் பந்தளம் ராஜ குடும்ப மூத்த பிரதிநிதி தலைமையில் ஊர்வலமாக சன்னிதானத்திற்கு எடுத்து செல்வது வழக்கம்.

அதன்படி இந்த ஆண்டு திருவாபரணங்கள் வருகிற 12-ந் தேதி பந்தளம் அரண்மனையில் இருந்து வலிய கோயிக்கல் சாஸ்தா கோவிலுக்கு எடுத்து செல்லப்படுகிறது. அன்றைய தினம் மதியம் சாஸ்தா கோவிலில் நடைபெறும் சிறப்பு பூஜைக்கு பிறகு திருவாபரணங்கள் 3 சந்தன பேழைகளில் சபரிமலை நோக்கி தலைச்சுமையாக ஊர்வலமாக புறப்படும்.

திருவாபரண ஊர்வலம் 12-ந் தேதி இரவு ஆயிரூர் புதியகாவு தேவி கோவிலிலும், 13-ந் தேதி லாகா வனத்துறை சத்திரத்திலும் தங்கும். திருவாபரணங்கள் 14-ந் தேதி அட்டத்தோடு வழியாக மதியம் பம்பை கணபதி கோவில் வந்து சேரும். தொடர்ந்து மாலை 6 மணிக்கு சன்னிதானத்திற்கு கொண்டு வரப்படும் திருவாபரணங்களுக்கு தேவஸ்தான மந்திரி வாசவன், திருவிதாங்கூர் தேவஸ்தான தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வரவேற்பு அளிப்பார்கள்.

தொடர்ந்து 18-ம் படி வழியாக எடுத்து செல்லப்பட்டு அய்யப்ப சாமிக்கு அணிவித்து மாலை 6.30 மணிக்கு சிறப்பு தீபாராதனை நடைபெறும். அப்போது சபரிமலை பொன்னம்பலமேட்டில் 3 முறை ஜோதி வடிவாய் அய்யப்பன் பக்தர்களுக்கு காட்சி அளிப்பார். அப்போது பக்தர்கள் சரணகோஷம் முழங்க சாமி தரிசனம் செய்வார்கள்.

மகர விளக்கையொட்டி, சபரிமலை தரிசனத்திற்கு வந்த பக்தர்கள் மலையிலேயே ஆங்காங்கே முகாமிட்டு வருவதால் சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் அலைமோதி வருகிறது.

# அமெரிக்காவில் சட்டங்களை மீறும் இந்திய மாணவர்கள் நாடு கடத்தப்படலாம்: தூதரகம் எச்சரிக்கை

**புதுடெல்லி, ஜன.9:**




அமெரிக்காவில் படிக்கும் இந்திய மாணவர்கள் சட்டங்களை மீறினால், நாடு கடத்தப்படுவீர்கள் என்று இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் கடுமையாக எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளது.

அமெரிக்காவில் அதிபர் டிரம்பின் நிர்வாகம், மாணவர் விசா நடைமுறையில் பல்வேறு புதிய மாற்றங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இந் நிலையில் அமெரிக்காவில் சட்டங்களை மீறும் மாணவர்களுக்கு முக்கிய எச்சரிக்கைகளை இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டு உள்ளது.

அதுபற்றிய விவரம் வருமாறு;

அமெரிக்காவில் சட்டங்களை மாணவர்கள் மீறினால் மாணவர்கள் விசாக்களை ரத்து செய்வதற்கும், நாடு கடத்தப்படுவதற்கும், எதிர்கால பயணங்களை தொடர முடியாமல் நீண்ட கால தகுதி இழப்புக்கும் வழி வகுக்கும்.

நீங்கள் கைது செய்யப்பட்டாலோ அல்லது ஏதேனும் சட்டங்களை மீறி நடந்து கொண்டாலோ, கைது செய்யப்பட்டாலோ உங்கள் விசாக்கள் ரத்து செய்யப்படலாம். நாடு கடத்தப்படலாம். எனவே விதிகளை பின்பற்றுங்கள், உங்கள் பயணத்தை ஆபத்தில் கொண்டுபோய் விடாதீர்கள்.

அமெரிக்க விசா என்பது ஒரு சலுகையே, அது ஒரு உரிமை அல்ல. விசா வைத்திருப்பவர்கள் உள்ளூர் சட்டங்கள், விதிகளை பின்பற்ற வேண்டும், அதற்கு இணங்கி நடக்க வேண்டும்.

இவ்வாறு அமெரிக்க தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவில் தற்போது குடியேற்ற விதிகள் மற்றும் விசா விதிமுறைகள் மிகத் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, கடந்த டிசம்பர் 26 முதல் அமெரிக்க எல்லைகளில் கட்டாய பயோமெட்ரிக் சோதனைகள் (புகைப்படம் எடுத்தல்) அமல்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் வகுப்புகளைத் தவிர்ப்பது, அனுமதியின்றி பகுதிநேர வேலைகளில் ஈடுபடுவது அல்லது போராட்டங்களில் பங்கேற்பது போன்றவை தற்போது தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

# காஷ்மீர்: ஜெய்ஷ்-இ-பயங்கரவாதிகளுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே துப்பாக்கி சண்டை

**கத்துவா, ஜன.9:**



ஜம்மு மற்றும் காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் கத்துவா மாவட்டத்தில் கஹோக் கிராமத்தில் பில்லவார் பகுதியில், காமத் நல்லா வன பகுதிக்குள் பயங்கரவாதிகள் பதுங்கி உள்ளனர் என கிடைத்த தகவலை அடுத்து, பாதுகாப்பு படையினர் அந்த பகுதிக்கு சென்றனர்.

அவர்களை கண்டதும் பயங்கரவாதிகள் துப்பாக்கிகளால் சுட தொடங்கினர்.

இதனால், வீரர்களும் பதிலுக்கு துப்பாக்கி சூடு நடத்தினர்.

இதனால், இரு தரப்புக்கும் இடையே மாலை 6 மணியளவில் கடுமையான துப்பாக்கி சண்டை நடந்து வருகிறது.

அந்த பகுதியில் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற ஜெய்ஷ்-இ-பயங்கரவாதிகள் 3 பேர் பதுங்கி யிருந்து பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதுபற்றிய தகவல் போலீசாருக்கு தெரிந்ததும் உஷாரானார்கள்.

கூடுதல் படையினர் குவிக்கப்பட்டு அவர்களை ஒழிக்கும் பணி தொடர்ந்து வருகிறது.

# ஜார்க்கண்டில் 2 நாள்களில் 13 பேரைக் கொன்ற காட்டு யானை!

**டேராடூன், ஜன.9:**

ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஒற்றைக் காட்டு யானையின் வெவ்வேறு தாக்குதல்களில் 2 நாள்களில் 13 பேர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு சிங்பூம் மாவட்டத்தில், மதம் பிடித்த ஒற்றைக் காட்டு யானை, செவ்வாய்க்கிழமை (ஜன. 6) நோவாமுண்டி மற்றும் ஹட்கம்ஹாரியா காவல் நிலையங்களின் பகுதிகளுக்குள் நுழைந்ததாகக் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, அந்தக் காட்டு யானையின் தாக்குதலில் அப்பகுதியில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உள்பட 6 பேர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அந்தக் காட்டு யானை, கடந்த ஜன.5 ஆம் தேதி கோல்ஹான் பகுதியில் 7 பேரைக் கொன்றதாக, அதிகாரிகள் கூறியுள்ளனர். இத்துடன், அந்த யானையின் தாக்குதலில் இதுவரை 4 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதையடுத்து, அந்த யானையை மீண்டும் காட்டுக்குள் துரத்தும் நடவடிக்கைகளை மேற்கு வங்கத்தின் பங்குரா வனத்துறை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். மேலும், ஒற்றைக் காட்டு யானை மனிதர்களைத் தாக்கி வருவதால் அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

## டிரம்ப்பின் மிரட்டலுக்கு எதிராக அமெரிக்க எதிர்ப்புப் போராட்டம்

**வாஷிங்டன், ஜன.9:**

கொலம்பியா மீதும் தாக்குதல் நடத்துவேன் என டிரம்ப் மிரட்டல்விடுத்த நிலையில் கொலம்பியா ஜனாதிபதி குஸ்தவோ பெட்ரோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் நாடு முழுவதும் கொலம்பியாவுக்கான ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் திரண்டு அமெரிக்காவை எதிர்த்துப் போராட்டம் நடத்த நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். வெனிசுலாவின் காரகஸ் நகரில் அமெரிக்கா நடத்திய குண்டு வீச்சு சர்வதேச சட்ட மீறல் மற்றும் காலனித்துவ நடவடிக்கை என பெட்ரோ விமர்சித்த நிலையில் டிரம்ப் அவரை மிரட்டியது குறிப்பிடத்தக்கது.

## மேற்குக் கரையை துண்டாடும் இஸ்ரேல்

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் இ1 பகுதியில் சட்டவிரோதமாக 3,401 வீடுகளைக் கட்டுவதற்கான ஏலத்தை இஸ்ரேல் அரசு ரகசியமாக வெளியிட்டுள்ளது. கிழக்கு ஜெருசலேமுக்கும் 'மாலே அடுமிம்' குடியேற்றத்திற்கும் இடையில் அமைந்துள்ள இந்த இ1 பகுதியில் வீடுகள் கட்டப்பட்டால் மேற்குக் கரையின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் ஒன்றுக்கொன்று துண்டிக்கப்படும். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, "எந்தக் காலத்திலும் பாலஸ்தீன நாடு அமையாது" என்று பகிரங்கமாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மதுரோவை உடனடியாக விடுதலை செய்ய சீனா வலியுறுத்தல்

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ, அவரது மனைவி சிலியா புளோரஸ் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் பாதுகாப்பதை அமெரிக்கா உறுதி செய்ய வேண்டும் என்றும் சீனா வலியுறுத்தியுள்ளது. வெனிசுலா மண்ணில் அமெரிக்கா தாக்குதல் நடத்தியதும் ஜனாதிபதியை கடத்தியதும் கண்டிக்கத்தக்கது. லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் பகுதிகளில் அமைதியையும் நிலைத்தன்மையையும் நிலைநாட்ட சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயல்பட சீனா தயாராக உள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

## கிரீன்லாந்தை கைப்பற்றத் துடிக்கும் அமெரிக்கா

கிரீன்லாந்து தீவைக் கைப்பற்ற அமெரிக்கா தீவிரமாக ஆலோசித்து வருகிறது, தேவைப்பட்டால் ராணுவ தாக்குதல் நடத்த தயாராக இருப்பதாகவும் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லெவிட் தெரிவித்துள்ளார். அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, இந்தப் பெரிய தீவை விலைக்கு வாங்கலாம் என்ற ஆலோசனையையும் முன்வைத்துள்ளார். டிரம்ப் நிர்வாகத்தின் இந்த நடவடிக்கைக்கு பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, போலந்து, ஸ்பெயின் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் தலைவர்கள் டென்மார்க்குடன் இணைந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

## பிரான்ஸ், பிரிட்டன் படைகளை உக்ரைனில் நிலைநிறுத்த ஒப்பந்தம்



உக்ரைனில் போர் நிறுத்தம் ஏற்பட்ட பிறகு பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் தங்கள் ராணுவ வீரர்களை உக்ரைனில் நிலைநிறுத்த உள்ளன. செவ்வாய்க்கிழமை பாரிஸில் நடந்த கூட்டத்திற்குப் பிறகு, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், பிரிட்டன் பிரதமர் கீர் ஸ்டார்மர், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ஆகியோர் இணைந்து ஒரு பிரகடனத்தில் கையெழுத்திட்டனர். உக்ரைன் முழுவதும் ராணுவ மையங்களையும், ஆயுதங்களைப் பாதுகாப்பதற்கான நவீன வசதிகளையும் பிரிட்டனும் பிரான்சும் இணைந்து அமைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

# வங்காளதேசம், பாகிஸ்தான் இடையே நேரடி விமான சேவை மீண்டும் தொடக்கம்

**டாக்கா, ஜன.9:**





வங்காளதேசத்தில் 2024ம் ஆண்டு நடந்த மாணவர் போராட்டத்தால் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அரசு கவிழ்ந்தது. இதனை தொடர்ந்து அந்நாட்டில் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பொறுப்பேற்று ஆட்சி செய்து வருகிறது.

இதனிடையே, ஷேக் ஹசீனா பிரதமராக இருந்த போது வங்காளதேசம் , பாகிஸ்தான் இடையே நேரடி விமான சேவை நிறுத்தப்பட்டது. 2012ம் ஆண்டு முதல் இருநாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவை செயல்படவில்லை.

இந்நிலையில், வங்காள தேசத்தில் முகமது யூனுஸ் தலைமையிலான புதிய அரசு அமைந்த உடன் பாகிஸ்தானுடனான உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் துணை பிரதமரும், வெளியுறவுத்துறை மந்திரியுமான இக்ஷா டார் கடந்த ஆகஸ்டு மாதம் வங்காளதேசம் வந்தார். அப்போது, இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவை தொடங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அதன்படி, 13 ஆண்டுகளுக்குப்பின் வங்காளதேசம், பாகிஸ்தான் இடையே வரும் 29ம் தேதி முதல் மீண்டும் நேரடி விமான சேவை தொடங்கப்படும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது. வாரம் இரு முறை இந்த விமான சேவை இயக்கப்பட உள்ளது. அதன்படி, வியாழக்கிழமை, சனிக்கிழமை விமானம் இயக்கப்பட உள்ளது. டாக்காவில் இருந்து இரவு 8 மணிக்கு புறப்படும் விமானம் கராச்சியை இரவு 11 மணிக்கு சென்றடைகிறது. அதேபோல், இரவு 12 மணிக்கு கராச்சியில் இருந்து புறப்படும் விமானம் மறுநாள் அதிகாலை 4.20 மணிக்கு டாக்கா சென்றடைகிறது.

வங்காளதேசம், பாகிஸ்தான் இடையேயான நேரடி விமான சேவையின்போது விமானங்கள் இந்திய வான்பரப்பை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டதா? அல்லது மாற்று பாதையில் விமானங்கள் செல்ல உள்ளனவா? என்பது குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

# நோபல் பரிசு எனக்கு ஒரு பொருட்டல்ல: டிரம்ப்

**வாஷிங்டன், ஜன.9:**



அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், தனக்கு நோபல் பரிசு கிடைக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்பில் இருந்தார். இந்தியா பாகிஸ்தான் இடையேயான மோதல் உள்ளிட்ட 8 போர்களை நிறுத்தியிருப்பதாகவும், தனக்கு நோபல் பரிசு வழங்க வேண்டும் என்றும் அவ்வப்போது பேட்டிகளில் தனது எதிர்பார்ப்பை வெளிப்படுத்தி வந்தார். ஆனால் அமெரிக்க அதிபர் டிரம்புக்கு நோபல் பரிசு வழங்கப்படவில்லை. இதனால் விரக்தியடைந்த டிரம்ப், தற்போது நோபல் பரிசு எல்லாம் தனக்கு ஒரு பொருட்டல்ல என்று பேசியுள்ளார். வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், இதுதொடர்பாக கூறியதாவது:

"நேட்டோ நாடுகளைக் காப்பாற்றியது நான்தான். என்னுடைய தனிப்பட்ட முயற்சியால் நேட்டோ நாடுகளுக்கான நிதிப் பங்களிப்பு உயர்த்தப்பட்டுள்ளது. நான் தலையிடாவிட்டால் ரஷ்யா உக்ரைனை கைப்பற்றியிருக்கும். நான் தனியாகவே 8 போர்களை முடிவுக்கு கொண்டு வந்தேன். நோபல் பரிசு எனக்கு ஒரு பொருட்டல்ல. நியாயமற்ற முறையில் தனக்கு நோபல் பரிசை நார்வே மறுத்துள்ளது. நார்வே முட்டாள்தனமான முடிவை எடுத்துள்ளது. சீனாவும் ரஷ்யாவும் பயப்படும் ஒரே நாடு அமெரிக்காதான். மோதல்களைத் தடுத்து அமைதியும் முன்னேற்றமும் ஏற்பட காரணமாக இருக்கும் நாடும் அமெரிக்காவே" என்றார்.

# வெனிசுலாவின் எதிர்காலத்தை அந்த நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும் டிரம்ப்பின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கர்கள் எதிர்ப்பு

**வாஷிங்டன், ஜன.9:**

வெனிசுலாவின் எதிர்காலத்தை அந்நாட்டு மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும் என அமெரிக்கர்கள் தெரிவித்துள்ளனர். வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அமெரிக்க ராணுவத்தால் கடத்தப்பட்டுள்ள நிலையில் அந்நாட்டை நிர்வகிக்கவும் அங்குள்ள கச்சா எண்ணெய் வளங்களை திருடுவதற்கும் டிரம்ப் திட்டமிட்ட நகர்வுகளை செய்து வருகிறார்.

இந்நிலையில் டிரம்ப்பின் செயல்பாடுகள் குறித்து 'வாஷிங்டன் போஸ்ட்' நடத்திய ஆய்வில் சில முக்கிய தகவல்கள் தெரிய வந்துள்ளன. அமெரிக்காவின் மேலாதிக்கம் பற்றிய கேள்விகளுக்கு அமெரிக்க மக்களிடையே எப்போதுமே ஆதரவாக மற்றும் எதிராக என இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

2026-ஆம் ஆண்டில் அமெரிக்க அரசு வெளிநாட்டுப் பிரச்சனைகளில் தலையிடுவதை விட, உள்நாட்டுப் பிரச்சனைகளான சுகாதாரம், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது, வீட்டு வாடகை கட்டுப்பாடு ஆகியவற்றிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று பெரும்பாலான அமெரிக்கர்கள் விரும்புகின்றனர். மேலும் வெனிசுலா ஜனாதிபதி மதுரோவை கடத்துவதற்காக ராணுவத்தை அனுப்பியதை 10 இல் 4 அமெரிக்கர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அதே அளவிலான மக்கள் ஆதரிக்கின்றனர்.

மீதமுள்ள 20 சத வீதம் பேர் எந்த முடிவும் எடுக்காமல் உள்ளனர். வெனிசுலா நாட்டின் கட்டுப்பாட்டை அமெரிக்கா எடுத்துக் கொண்டு அங்கு ஒரு புதிய அரசாங்கத்தை அமைக்கும் என்ற கருத்தை 45 சதவிகித அமெரிக்கர்கள் எதிர்த்துள்ளனர்.

குறிப்பாக, 10 இல் 9 அமெரிக்கர்கள் வெனிசுலாவின் தலைவரை அந்த நாட்டு மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தெளிவாகக் கூறியுள்ளனர். டிரம்ப்பின் இந்த பயங்கரவாத நடவடிக்கைக்கு குடியரசுக் கட்சியினர் பரவலாக ஆதரவு தெரிவித்துள்ளனர். இருந்தாலும் அவர்களில் பலரும் அமெரிக்கா மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் அதிகம் தலையிடுவதை விரும்பவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. வெனிசுலாவிலிருந்து அமெரிக்காவிற்கு போதைப்பொருள் கடத்தப்படுவதைத் தடுக்கவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக டிரம்ப் நிர்வாகம் பிரச்சாரம் செய்து வருகிறது. ஆனால், அமெரிக்கப் பொது மக்களைப் பொறுத்தவரை போதைப் பொருள் கடத்தல் என்பது ஒரு பெரிய பிரச்சனையாகவே தெரியவில்லை. குடியரசுக் கட்சியினரில் 10 இல் ஒருவர் மட்டுமே இந்த போதைப்பொருள் பற்றி கவலைப்படுகின்றனர். மற்றவர்கள் தங்கள் அன்றாட வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ள பொருளாதாரச் சிக்கல்களுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றனர் என வாஷிங்டன் போஸ்ட் ஆய்வின் முடிவில் தெரிய வந்துள்ளது.

## விசா சேவை நிறுத்தம்: இந்தியா - வங்காளதேசம் தூதரக ரீதியான பதற்றம் அதிகரிப்பு

**டாக்கா, ஜன.9:**

வங்காளதேசத்தில் மாணவர் இயக்கத் தலைவர் ஷெரீப் உஸ்மான் ஹாடி சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து போராட்டமும் வன்முறையும் வெடித்தன. இந்திய தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல் சம்பவத்தில் திபு சந்திர தாஸ் என்பவர் அங்கு அடித்து கொல்லப்பட்டார். தொடர்ந்து இந்து மதத்தை சேர்ந்த சிலர் மீது கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டது. இந்துக்கள் மீதான தாக்குலுக்கு இந்தியா உள்ளிட்ட உலகநாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்த சூழலில் வங்கதேசத்தில் இந்து இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் அதற்கு எதிராக இந்தியாவில் நடைபெற்ற போராட்டங்களால் இரு நாடுகளுக்கும் இடையே தூதரக ரீதியான பதற்றம் அதிகரித்துள்ளது. இந்நிலையில் இந்தியர்களுக்கான விசா மற்றும் தூதரக சேவைகளை பாதுகாப்பு காரணங்களுக்காக நிறுத்திவைப்பதாக வங்காள தேச அரசு அறிவித்துள்ளது. மேலும் டெல்லி, சென்னை, அகர்தலா உட்பட அனைத்து தூதரகங்களிலும் வணிகம் மற்றும் வேலைவாய்ப்பு விசாக்களைத் தவிர, சுற்றுலா உள்ளிட்ட இதர அனைத்து வகை விசா சேவைகளும் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜப்பானுக்கு தொழில்நுட்ப பொருட்கள் ஏற்றுமதிக்கு தடை: சீனா அறிவிப்பு

**பீஜிங், ஜன. 9:**

ஜப்பான் நாட்டின் முதல் பெண் பிரதமராக சனே தகைச்சி பதவியேற்றார். இவருடைய பதவியேற்புக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் வாழ்த்து தெரிவித்ததுடன் டோக்கியோவுக்கு நேரில் சென்று அவரை சந்தித்தார்.

இருபெரும் தலைவர்களும் சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிராக இணைவோம் என்று அறிக்கையை வெளியிட்டனர். பின்னர் தமது நாட்டிற்கு எதிராக செயல்பட்டால் போர் நடவடிக்கை எடுக்கப்படும் என சனே தகைச்சி சீனாவுக்கு எச்சரிக்கை விடுத்தார். இதனால் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையேயான உறவு கசந்து வர்த்தக உறவு சரியத் தொடங்கியது. அதன் ஒருபகுதியாக சீனாவில் இருந்து ஜப்பானுக்கு ஏற்றுமதியாகும் ராணுவ தொழில்நுட்பங்களான அணுசக்தி உபகரணங்கள், மின்னணு பொருட்கள், கணினிகள், விமான பொருட்கள் உள்ளிட்ட தொழில்நுட்ப பொருட்களின் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

## தடைகளை மீறியதாக 2 எண்ணெய் கப்பல்களை சிறைபிடித்த அமெரிக்கா

**கராகஸ், ஜன.9:**

வெனிசுலாவுக்கு சொந்தமான டேங்கர் எண்ணெய் கப்பல் ஒன்று, லெபனானின் போராளி குழுவான ஹிஸ்புல்லாவுடன தொடர்புடைய நிறுவனத்துக்கு சரக்குகளை கொண்டு சென்றதாக கூறி ஒரு கப்பலுக்கு அமெரிக்க கடந்த 2024-ம் ஆண்டு தடை விதித்தது.

இதுபோல மேலும் ஒரு கப்பலுக்கும் சமீபத்தில் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து அந்த கப்பல்களை அமெரிக்கா கண்காணித்து தேடி வந்தது. இந்த நிலையில் லெபனானின் 2 கப்பல்களை சிறைபிடித்து பறிமுதல் செய்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

'அமெரிக்கா தடைகளை மீறியதற்காக' பெல்லா 1 என்ற வர்த்தகக் கப்பலையும், கரீபியன் கடலில் சோபியா என்ற எண்ணெய் கப்பலையும் அமெரிக்கப் படைகள் சிறைப்பிடித்து தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

## அபுதாபியில் வாகன விபத்து: கேரள குடும்பத்தைச் சேர்ந்த 4 குழந்தைகள் உயிரிழந்த சோகம்

கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டத்தைச் சேர்ந்தவர் அப்துல் லத்தீப். துபாயில் பணியாற்றி வரும் அப்துல், தனது மனைவி ருக்சானா மற்றும் 5 குழந்தைகளுடன் அங்கு வசித்து வருகிறார். இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறையை கழிக்க, அப்துல் தனது குடும்பத்தினரோடு அபுதாபி சென்றார்.

பின்னர் அங்கிருந்து திரும்பும்போது, அவர்கள் பயணம் செய்த கார் பயங்கர விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் அப்துலின் ஆண் குழந்தைகள் அஷாஸ் (14 வயது), அம்மார் (12 வயது), அஸாம் (7 வயது), அயாஷ் (5 வயது) ஆகிய 4 பேரும், அவர்களுடன் பயணித்த வீட்டு பணியாளர் புஷ்ரா (49 வயது) என்ற கேரள பெண்ணும் உயிரிழந்தனர். மேலும் அப்துல், அவரது மனைவி ருக்சானா மற்றும் அவர்களது பெண் குழந்தை மூவரும் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பாகிஸ்தானில் குறிவைக்கப்படும் ரயில்கள்! மீண்டும் வெடிகுண்டு தாக்குதல்!

**வாஷிங்டன், ஜன.9:**

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில், ரயில் தண்டவாளத்தின் மீது அடையாளம் தெரியாத பயங்கரவாதிகள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலூசிஸ்தானின் நசிராபாத் பகுதியில் நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந்துள்ள ரயில் தண்டவாளத்தின் மீது நவீன வெடிகுண்டுகள் மூலம் அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் (ஜன. 7) தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலின்போது அங்கு எந்தவொரு ரயிலும் இயக்கப்படவில்லை என்பதால் உயிர் சேதங்கள் முற்றிலும் தவிர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. சேதமடைந்த ரயில் தண்டவாளத்தை மீண்டும் சீரமைக்கும் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னதாக, பலூசிஸ்தானை பாகிஸ்தானின் மற்ற மாகாணங்களுடன் இணைக்கும் ஜாஃபர் எக்ஸ்பிரஸ் ரயிலைக் குறிவைத்து பயங்கரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

தண்டவாளங்களின் மீது நடத்தப்படும் வெடிகுண்டு தாக்குதல்களில், அப்பகுதியில் இயக்கப்படும் ரயில்கள் தடம்புரள்வதால் பயணிகளுக்கு கடும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

கடந்த 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 400 பயணிகளுடன் சென்ற ஜாஃபர் எக்ஸ்பிரஸ் ரயிலை பலூசிஸ்தான் பயங்கரவாதிகள் சிறைப்பிடித்தனர். பின்னர், பாகிஸ்தான் ராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் பயணிகள் மீட்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# வெனிசுலாவிடம் இருந்து 5 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய் கிடைக்கும்: ட்ரம்ப் தகவல்

**கராகஸ், ஜன.9:**





அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைளத்தில் கூறியுள்ளதாவது: வெனிசுலாவில் இருந்து 3 கோடி முதல் 5 கோடி வரை உயர் தரமான கச்சா எண்ணெய்யை வழங்க இடைக்கால அரசின் அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். இந்த கச்சா எண்ணெய் கொள்முதலை அவர்கள் சந்தை விலையில் வழங்க முன் வந்துள்ளனர். அந்தப் பணம் அதிபராகிய என்னால் கட்டுப்படுத்தப்படும்.

குறிப்பாக, வெனிசுலா மற்றும் அமெரிக்க மக்களின் நலனுக்காகப் அந்த தொகை பயன்படுத்தப்படும்.

வெனிசுலாவில் இருந்து எண்ணெய் சேமிப்பு கப்பல்கள் மூலம் எடுத்து வரப்பட்டு நேரடியாக அமெரிக்காவில் உள்ள சரக்கு இறக்கும் தளங்களுக்கு கொண்டு வரப்படும். இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்காக வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவை அமெரிக்கா கைது செய்துள்ளது. அமெரிக்காவின் இந்த கைது நடவடிக்கையில் 24 வெனிசுலா பாதுகாப்பு அதிகாரிகள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியான நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

வெனிசுலா தொடர்பாக எண்ணெய் நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் அதிபர் டொனால்டு ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

இதில், எக்ஸான், செவ்ரான், கோனோகோ பிலிப்ஸ் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.